Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
34°C 27°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 178 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 9, வியாழன் 23.05.2013

உலகம்



பக். 06

சீண்டும் செயற்பாட்டால் சிக்கல் சிரிய அரசுக்கே இஸ்ரேல் இராணுவத் தளபதி எச்சரிக்கை

இந்தியா



பக். 07

வேட்பு மனு ஏற்பு பிரதமரின் வயது 80 என திருத்தம்

விளையாட்டு



பக். 22

பூனே வொரியர்ஸ் விலகியமை ஆச்சரியமானது

# வடக்குத் தேர்தலுக்கு பயப்படும் நீங்கள் தமிழரின் அச்சம் பற்றி சிந்தித்தீர்களா?

## இனவாதத் தலைவர்களிடம் மனோ கேள்வி

கொழும்பு, மே 23
வடக்கு மாகாண சபை கூட்டமைப்பின் கரங்களுக்கு போவது தொடர்பில் சிங்கள மக்களுக்கு அச்சம் உள்ளது என்று திரும்பத் திரும்பக் கூறுகின்றீர்கள். ஆனால் தமிழர்களின் அச்சம் பற்றி என்றாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அதிகாரத்தையும், பலமிக்க நாடாளுமன்றத்தையும், முப்படைகளையும் வைத்திருக்கும் உங்களுக்கு அச்சம் இருந்தால் இன்று தமிழர்களுக்கு, தமது



எதிர்காலம் தொடர்பில் எந்தளவு அச்சம் இருக்கும் என்பதை ஏன் புரிந்து கொள்ள மறுக்கின்றீர்கள்?
இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

தொடர்ச்சி: பக்கம் 23

# காணி சுவீகரிப்பில் அரசு திட்டவட்டம்

## ஐ.நா. பிரதிநிதிகளிடம் அடித்துக் கூறினார் யாழ். மாவட்ட தளபதி ஹத்துருசிங்க



யாழ்ப்பாணம்,மே 23
வலி.வடக்கில் காணிகள் சுவீகரிப்பில் அரசு உறுதியாக உள்ளதை ஐக்கியநாடுகள் சபை பிரதிநிதிகளிடம் விளக்கினார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க. காணிகளை இராணுவம் அல்ல அரசே சுவீகரிக்கிறது என்றும் அவர் கூறினார்.
ஐ.நா. சபையின் மனிதாபிமானப் பணிகளுக்கான ஒருங்கிணைந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரி அக்னெஸ்அசெக்கென்யிபுஞன்யு மற்றும் பிரதித் தலைமை அதிகாரி மார்க்பிரசோபா ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பலாலியில் சந்தித்துப் பேசினர். இதன் போது கருத்து வெளியிட்ட யாழ். தளபதி ஹத்துருசிங்க.
இங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் அவர்களின் தூண்டுதலில் சில ஊடகங்களும் வலி.வடக்கில் தமிழ் மக்களின் காணிகளை படையினர் கையகப்படுத்துவதாகக் கூறுகின்றனர்.
உண்மையில் அந்தக் காணிகள் பலாலி விமானம் நிலையம், காங்கேசன் துறை துறைமுகம் ஆகியவற்றின் விஸ்தரிப்புக்காக அரசால் சுவீகரிக்கப்படுகின்றது என சுட்டிக்காட்டினார்.
தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு யாழ். மாவட்டத்தில் படைகளை தொடர்ந்து வைத்திருப்பதற்கு சிறிய அளவு நிலப்பரப்பு சுவீகரிக்கப்படுகின்றது என்றும், அரசியல் கட்சிகளால் சொல்லப்படுவதைப் போல அந்தப் பகுதிகளில் பெருமளவிலான மக்கள் காணிகளை இழக்கவில்லை எனவும் அதன் உண்மையான அளவு அவர்கள் குறிப்பிடுவதை விட குறைவு என்றும் ஹத்துருசிங்க ஐ.நா. பிரதிநிதிகளிடம் கூறினார்.
இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களை கடற்கரையோரமாக அரச காணியில் குடியேற்ற ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர். சுவீகரிக்கப்படும் காணிகளில் பெரும்பான்மையானவை அரச திணைக்களங்களுக்குரியகாணிகள் என்றும் யாழ். தளபதி கூறினார். (த-5)

## காணி சுவீகரிப்பை எதிர்த்து உயர்நீதிமன்றில் மனுக்கள்

யாழ்ப்பாணம், மே 23
வலி. வடக்கில் உள்ள தமது காணிகளை அரசு சுவீகரிப்பதை எதிர்த்து 192 பேர் சார்பில் இலங்கை உயர் நீதிமன்றத்தில் நேற்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
காணி உரிமையாளர்கள் சார்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் குழு இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.
இந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது தொடர்பிலான விவாதத்திற்கு ஜுன் மாதம் இரண்டாம் வாரத்தில் திகதியிடப்

தொடர்ச்சி: பக்கம் 02

## படைகளுக்கு காணியா? திக்கத்தில் கடும் எதிர்ப்பு

### அளவீடு செய்ய வந்த அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்

யாழ்ப்பாணம், மே 23
திக்கம் பிரதேசத்தில் படையினரின் தேவைக்காகச் சுவீகரிக்கப்படும் காணியை அளவீடு செய்வதற்காக [illegible] அங்கு சென்ற நில அளவை திணைக்களத்தினர் காணி உரிமையாளர்கள் காட்டிய எதிர்ப்பினால் நில அளவைப் பணியைக் கைவிட்டுத் திரும்பினர்.
பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/400 கிராம சேவையாளர் பிரிவில் திக்கம் பகுதியில்

தொடர்ச்சி: பக்கம் 02

## சட்ட விரோத மீன்பிடி; கொக்கிளாயில் 2 மீனவர் கைது

முல்லைத்தீவு,மே 23
கொக்கிளாய் கடற் பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை உபயோகித்து மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அங்கு கட்டப்பட்டிருந்த தடை செய்யப்பட்ட வலைகளையும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் பறிமுதல் செய்துள்ளது.
முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் கடந்த 20 ஆம் திகதி கொக்கிளாய் கடற்பிரதேசத்தில் திடீர்ச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதன்போது குறித்த கடல் பகுதியில் கட்டப்பட்டிருந்த தடை செய்யப்பட்ட வலைகளான சுட்டு வலை மற்றும் வேலி வலை என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 247 சுட்டு வலை, ஆயிரத்து 600 மீற்றர் நீளமான வேலி வலை, அதற்குரிய தடி 300, 2 படகுகள் மற்றும் இயந்திரம் என்பன தேடுதல் நடவடிக்கையின்போது பிடிக்கப்பட்டுள்ளன. இதன்போது இரு மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.
மீனவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுக் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். குறித்த வலைகளை அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (த-5)

## திட்டமிட்டபடி வடக்குத் தேர்தல்

—ஜனாதிபதி

கொழும்பு, மே 23
வடக்கு மாகாணசபைத் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, வடமாகாணத் தேர்தல் திட்டமிட்டபடி செப்ரெம்பரில் நடக்குமெனவும், அனைத்து அமைச்சர்களும் அதற்குத் தயாராகவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (த-சி)

## ‘13’ இல் திருத்தமின்றியே வடக்குத் தேர்தல்

கொழும்பு, மே 23
அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்ட பின்னரே வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தும், அதை முற்றாக நீக்கவேண்டும் என்ற வாதமும் அரச கூட்டுக்குள் மேலோங்கியுள்ள நிலையில், '13' இல் எவ்வித திருத்தமுமின்றியே வடக்குத் தேர்தல் நடத்தப்படும் என்று நேற்று திட்டவட்டமாக அறிவித்த அரசு, '13' ஐ நீக்குவது குறித்து தம்மிடம் எந்தத் தீர்மானமும் இல்லை என்றும் கூறியது.
அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டுமாயின் அந்நடவடிக்கைகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாகவே முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார் என்று அமைச்சரவைப் பதில் பேச்சாளரும், பெற்றோலியத்துறை அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
## CHUNNAKAM

# கடைகளை வாடகைக்கு வழங்குதல்-2013

சுன்னாகம் பஸ் நிலையப்பகுதியில் அமைந்துள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத் தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் கூடிய ஒரேமுறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக வலிகாமம் தெற்கு பிரதேசசபை தவிசாளரால் கோரப்படுகின்றது.

**கடை விவரம்**

1) இல 1 நீளம் 28.5 அடி அகலம் 11.7 அடி
2) இல 2 நீளம் 22.5 அடி அகலம் 11.6 அடி

| இல | விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை Vat வரி நீங்கலாக | கேள்வி வைப்புப் பணம்(மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் (Vat, NBT உட்பட) |
|---|---|---|---|---|
| 1 | இல 1 | 1,560,000.00 | 30,000.00 | 1140.00 |
| 2 | இல 2 | 1,140,000.00 | 22,000.00 | 1140.00 |

**நிபந்தனைகள்**

1. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் பிணைப்பணம், மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர்வரி ஆகியவற்றைப் பணமாகச் செலுத்தி ஆள் அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 23.05.2013 திகதியிலிருந்து ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விப்படிவம் இணைப்பிரதிகளில் 06.06.2013ம் திகதி மு.ப 12.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமானவை நிராகரிக்கப்படும்.
2. அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பகாரர் எவ்வித மாற்றங்களும் செய்தல் ஆகாது.
3. படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்கள் விண்ணப்பகாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்
4. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் இரண்டு பிரதிகளிலும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வலிதெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம். இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும்.
5. 06.06.2013ந் திகதி மு.ப 12.00மணிக்கு முன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 2.00 மணியளவில் கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பகாரர் அல்லது அவரின் எழுத்துமூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.
6. 06.06.2013ந் திகதி மு.ப 12.00 மணிக்குப் பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். இரண்டு கடைக்கும் விண்ணப்பங்களை உரிய முறையில் சபையில் விண்ணப்பிக்கலாம்.
8. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்
9. எக்கேள்வியையும் ஏற்றுக்கொள்ளவோ, அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுள்ளது.
10. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் (Defaulters list) அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையிலுள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்-படும். பிரதேச சபையுடனான சகல எழுத்து மூல, வாய் மூல பேச்சுக்கள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்.
12. கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக்காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடிய கேள்வித் தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.
13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகையின் 12 சதவீதம் பெறுமதி சேர்வரியாகவும் 02 சதவீதம் தேசத்தைக்கட்டியெழுப்புதல் வரியாகவும் வலிதெற்கு பிரதேசசபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும். அத்துடன் கேள்வித் தொகையின் 5% இனைப் பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
14. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலைமதிப்பீட்டு திணைக்களம் மதிப்பீட்ட தொகையில் கடைக்கான மாதாந்த வாடகையும் பெறுமதிசேர் வற்வரி, தேசத்தைகட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்த வேண்டும்.
15. மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் 30ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப்பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
16. முற்குறிப்பிடப்பட்ட 14வது 15வது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
17. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை, சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
18. குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிதெற்கு பிரதேசசபையினால் தொகைகுறித்து அறிவிக்கப்படும் குறித்த காலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
19. வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு முறையும் தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் உண்டு. அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்க முடியாது.
20. குத்தகைக்குப் பெற்ற கடையின் மின்சார இணைப்புக்கட்டணங்கள், மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பிலும் செலவிலும் அமையும்.
21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அன்றி உப வாடகைக்குக் கொடுக்கவோ கூடாது.
22. கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களுக்காக நீதி மன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.
   - மிகை இலாபம் ஈட்டிய குற்றம்
   - நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றம்
   - சந்தை உப விதிகளை மீறிய குற்றம்

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி.பிரகாஷ்,**
தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

# தனித்துவமான பிரபாகரனுடன் என்னை ஒருபோதும் ஒப்பிடாதீர்

## மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் கோரிக்கை



கொழும்பு, மே 23
''பிரபாகரன் தனிச்சிறப்புக் கொண்டவர். அவருடன் என்னை ஒப்பிடவேண்டாம். பச்சைப் பொய்களைக் கூறி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஒற்றுமையைக் குழப்புவதற்கும், நாட்டுக்குத் தீமை செய்யவுமே பொதுபலசேனா என்ற இனவாத அமைப்பு முளைத்துள்ளது. இதை நாட்டு மக்கள் முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும்.''
- இவ்வாறு கடும் ஆவேசத்துடன் தெரிவித்தார் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்.
''இனவாதிகளின் கருத்துகளுக்குச் செவிசாய்க்காமல் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை அரசு உடனடியாக நடத்தியே ஆகவேண்டும். அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளையும் வழங்கவேண்டும். அதேவேளை, வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.
பொதுபலசேனாவின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், ''நாட்டில் மீண்டும் பிரிவினைவாத சக்திகள் தலைதூக்குகின்றன. அடுத்த பிரபாகரனாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் செயற்படுகின்றார். ஆகவே, சிங்கள மக்கள் வீதியில் இறங்கி 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடவேண்டும். வடமாகாண சபைத் தேர்தல் என்பது தனி ஈழத்திற்கான முதற்படியாகும். எனவே, இந்தத் தேர்தலை அரசு நடத்தக்கூடாது'' - என்று தெரிவித்திருந்தார்.
இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே மன்னார் ஆயர் மேற்கண்டவாறு கருத்தைத் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் நேற்று உதயனிடம் தெரிவித்தவை வருமாறு:-
''முகவரி எதுவும் இல்லாத பொதுபலசேனா என்னைப் பிரபாகரனுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளது. பிரபாகரன் தனிச்சிறப்புக் கொண்டவர். நான் அவருக்கு ஒப்பானவர் அல்லர். நான் சமயவாதி; அரசியல்வாதி அல்லது ஆயுதப் போராளி அல்ல. சமாதானத்தை விரும்புபவன். ஒருபோதும் நான் தனி ஈழத்தைக் கோரவில்லை. தமிழ் மக்கள் ஏனைய மக்களைப் போல சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம்.
இந்நிலையில், இனவாத அமைப்பான பொதுபலசேனா என் மீது வீண் பழி சுமத்துகின்றது.
பச்சைப் பொய்களைக் கூறி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் ஒற்றுமையைக் குழப்புவதற்கும், நாட்டுக்குத் தீமை செய்யவுமே பொதுபலசேனா என்ற இந்த இனவாத அமைப்பு முளைத்துள்ளது. இந்த அமைப்பு ஊடகங்கள் மூலமாகத் தனக்கு முகவரி தேட முற்படுகின்றது. எனவே, இதை நாட்டு மக்கள் முளையிலேயே கிள்ளியெறியவேண்டும்.
தமிழர்களும் இந்த நாட்டின் சொந்தக்காரர்கள். இந்த நாடு பல்லின மக்களைக் கொண்டது; கலாசாரத்தைக் கொண்டது. எனவே, முதலில் நாட்டின் வரலாற்றைப் படித்துவிட்டு பொதுபலசேனா அரசியலில் இறங்கவேண்டும்.
நாட்டின் அரசமைப்பை இல்லாதொழிக்குமாறு கூறுவதற்கு பொதுபலசேனா என்ற இந்த அமைப்புக்கு எந்த அருகதையும் கிடையாது.
எனவே, இனவாதிகளின் கருத்துகளுக்குச் செவிசாய்க்காமல் வடக்கில் மாகாணசபைத் தேர்தலை அரசு உடனடியாக நடத்தியே ஆகவேண்டும். அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளையும் வழங்க வேண்டும். அதேவேளை, தமிழர்கள் பரந்து வாழும் வடக்கு, கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்'' - என்றார்.

# ஆலயக் காணி அபகரிப்புக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு

கிளிநொச்சி, மே 23
கிளிநொச்சி 155ஆம்கட்டை உதிர வேங்கை வைரவர் ஆலய காணி அபகரிப்புக்கு எதிராக போடப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவு எதிர்வரும் 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி 155 ஆம் கட்டை தொண்டமான் நகர் உதிர வேங்கை வைரவர் ஆலயத்துக்குச் சொந்தமான காணியை ஒருவர் அத்துமீறி அபகரித்து நிரந்தர கட்டடம் அமைத்து வரும் நிலையில் குறித்த காணி அபகரிப்புக்கு எதிராக இந்தப் பகுதி மக்கள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டதுடன், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இது குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்திருந்தனர்.
குறித்த காணி அபகரிப்புக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி திருமதி எஸ்.விஜயராணி ஊடாக கடந்த 6 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
குறித்த வழக்கை விசாரித்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் 'எம்.ஐ.வகாப்தீன் , குறித்த காணியில் எந்தவித மான அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ளக் கூடாது என இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தார்.
இந்த வழக்கு கடந்த 20 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்காளிகள் சார்பாக சட்டத்தரணி திருமதி எஸ். விஜயராணி முன்னிலையானார்.
இதனையடுத்து குறித்த காணியில் பணிகளை மேற்கொள்ள விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார் நீதிவான்.
(த-6)

# காணி சுவீகரிப்பை எதிர்த்து உயர்நீதிமன்றில் மனுக்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.
தமது தனித்தனிக் காணிகளை ஒரே காணியாகக் கருதி அரசு சுவீகரிக்க முடியாது என்று மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். காணிகள் அனைத்தையும் ஒன்றாக்கி ஒரே காணியாகச் சுவீகரிப்பதற்கான பொதுத் தேவை என்ன என்பது தொடர்பில் தெளிவாக்காத அரசு, காணி சுவீகரிப்புத் தொடர்பில் தமக்கு முறையான அறிவித்தல் தரப்படவில்லை என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.
சுவீகரிக்கப்பட உள்ள காணிகளில் படையினர் விவசாயம் செய்வது, ஹோட்டல் நடத்துவது, யோக்கட் தொழிற்சாலை நடத்துவது என்பன எந்த வகையில் பொதுத் தேவை கருதியது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். இது தமது வாழ்வாதாரத்தை மீறும் செயல் என்றிருக்கிறார்கள் அவர்கள்.
இந்த வழக்குகள் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் ஐந்து சட்டத்தரணிகள் இலவசமாக இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.
(உ)

# படைகளுக்கு காணியா? திக்கத்தில் கடும் எதிர்ப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

31 பேருக்கு உரித்தான 8 ஏக்கர் காணியை இராணுவத்தின் 16 ஆவது விஜயபாகு காலாட் படைமுகாம் அமைப்பதற்கு சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் கடந்த மாதம் 12 திகதி அங்கு ஒட்டப்பட்டன.
இந்த நிலையில் மேற்படி காணியை எதிர்வரும் 20 திகதி அளவீடு செய்வதற்கு நில அளவை திணைக்கள அதிகாரிகள் வருவார்கள் என்று கடந்த 9 ஆம் திகதி காணி உரிமையாளர்களுக்கு எந்தவித ஒப்பமும் இன்றி அநாமதேயமாகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
இந்த நிலையில் கடந்த 20 திகதி நில அளவை செய்வதற்காக நில அளவைத் திணைக் களத்தினர் அங்கு நேரடியாகச் சென்ற போது 31 காணிகளின் உரிமையாளர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து அவர்கள் தமது பணியைக் கைவிட்டுத் திரும்பியுள்ளனர்.
31 காணி உரிமையாளர்களும் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வன்னி விவசாயிகளுக்கு வேண்டும் விசேட திட்டங்களும் வாய்ப்பும்

இலங்கை மக்களின் பிரதான உணவு அரிசி என்ற நிலை இரண்டாவது உலகப் போர் தொடங்குவதற்கு முந்திய காலம் முழுவதும் மாற்றம் எதுவும் இன்றி தொடர்ச்சியாக நிலவியது. ஆனால் அதன் பின்னர், பசைப் பொருளாகப் பாவனைக்கு வந்த கோதுமை மாவும் அரிசியோடு இரண்டாவது பிரதான உணவுத் தானியமாக மாறியது. இப்போது என்னவெனில், அரிசியோடு போட்டி போடும் நிலைக்கு கோதுமை மாவின் பாவனை உயர்ந்துள்ளது.

கிராமப்புறங்கள் நகரப்புறங்களாக வளர்ச்சி கண்டுவிட்டதால், இப்போதும் மாற்றம் கண்டு வருவதால், கோதுமை மா முதலிடத்தைக் கைப்பற்றி விட்டதாகக் கருதும் கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. புள்ளி விவரங்களும் அதனையே தொட்டுக் காட்டுகின்றன.

எவ்வாறெனினும், வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யும் நிலைமாறி, தேசிய மட்டத்தில் நெல் உற்பத்தி அதிகரித்திருப்பதால் அதனை ஏற்றுமதி செய்யும் நிலையும் முகிழ்த்து விட்டது.

இலங்கை மக்களின் பிரதான உற்பத்திப் பொருள்களில், இப்போதும் நெல்லே முதலிடம் வகிப்பதை மறந்து விடலாகாது. இன்னொரு வகையில் நோக்கினால், கிழக்கு மாகாணம் அதிக நெல் உற்பத்திப் பிரதேசங்களின் வரிசையில் இப்போதும் முதலிடம் பிடித்துக் கொண்டாலும், வடமாகாணமும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்து வருகிறது எனலாம்.

குறிப்பாக, வன்னி மாவட்டத்தில் நெல் உற்பத்தி முதன்மை வரிசையில் உள்ளது. காலநிலை முழுக்க முழுக்க சாதக நிலையில் இல்லாதிருந்த போதிலும் கணிசமான விளைச்சல் கிடைத்ததை புள்ளி விவரங்கள் தொட்டுக் காட்டுகின்றன.

பலதரப்பட்ட இல்லாமைகள், வாய்ப்பற்ற காலநிலை மாற்றங்களுக்கு மத்தியிலும் வன்னி மாவட்டத்தில் விளைந்த நெல்லைக் களஞ்சியப்படுத்த முடியாது சங்கடம் பூதாகாரமாக மாறிஉள்ளது. கடந்த பெரும் போகத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபை வடமாகாணத்தில் 8,500 மெற்றிக் தொன் நெல்லை மட்டுமே கொள்வனவு செய்ததாக, நெல் சந்தைப்படுத்தும் சபையின் வடமாகாணத்துக்குப் பொறுப்பான பிராந்திய முகாமையாளர் ஆர்.டபிள்யூ பந்துல குமார தகவல் வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவித்த தகவல்களின் பிரகாரம்–

வவுனியாவில் போதிய களஞ்சிய வசதிகள் இருந்தமையால் நெல் கொள்வனவில் பாதிப்புக்கள்– தடைகள் – இருக்கவில்லை. ஆயினும் மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் களஞ்சிய வசதிகள் பெருமளவில் அருகிவிட்டதால், விவசாயிகள் விளைவித்து அறுவடை செய்த நெல்லை, முற்றாகக் கொள்வனவு செய்ய முடியவில்லை.

நாற்பதாயிரம் ஏக்கரில் கிளிநொச்சி மாவட்டத்தில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ''போரூட்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் எட்டுக் களஞ்சியங்களில் சேமிக்கக் கூடிய நெல் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டது.

மொத்தத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் நெல் கொள்வனவில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்ததாகவும் பிராந்திய முகாமையாளர் சுட்டிக் காட்டி உள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில், கடந்த வருட பெரும்போகச் செய்கையில், இயற்கையின் சோதனைகளுக்கும் மத்தியில் விளைந்த குறைந்தளவு நெல்லை, அரச மற்றும் கூட்டுறவு அலகுகள் கொள்வனவு செய்வதில் மாற்று ஏற்பாடுகளை முன்னெடுக்கத் தவறியதனால்–

விவசாயிகள் மிகக் குறைந்த விலையில் (பேச்சுத் தமிழில் சொல்வதானால் அடி மாட்டு விலையில்) விற்று நட்டம் அடைய நேர்ந்தது. தெற்கில் இருந்து வந்த வர்த்தகர்கள் வயல் மேட்டுக்கும் சென்று வாங்கிக் கொள்ளை இலாபம் பெற்றனர்.

அரசின் இயலாமை, வன்னி விவசாயிகளை மூலாதாரச் செலவும் கைக்கு வராத விலைக்கு விற்க நிர்ப்பந்தித்தது என்பது கவலைக்கும் கண்டனத்துக்கும் உரியதாகும்.

வடக்கில் போர் முடிவுற்று நான்கு வருடங்கள் கடந்தோடிவிட்டன. வன்னிப் பிராந்தியத்தில் மக்கள் அரைகுறை மற்றும் அடிமட்ட நிலையில் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்கள் அண்மிக்கின்றன. வன்னிப் பிரதேச மக்களின் பிரதான தொழிலும் வருவாயும் முறையே நெற்செய்கையும் அதன் மூலம் கிடைக்கும் பணமுமே ஆகும்.

அது அரசுக்கும் அதன் அதிகாரிகளுக்கும் தெரியாமல் இல்லை. வன்னிப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக மிகுந்த அக்கறையுடன் செயற்படுவதாக இப்போதெல்லாம் பிரசித்தம் செய்யப்படுகிறது.

ஆனால் அவர்களின் பிரதான தொழிலான விவசாயம் சார்ந்த தேவைகளை நிறைவேற்ற என்ன வேகத்தில், இலட்சணத்தில் திட்டங்கள், கருமங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதற்கு–

பல இடர்கள் இல்லாமைகளின் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட அவர்களின் பிரதான உற்பத்திப் பொருளான நெல்லை சந்தைப்படுத்துவதற்கு உரிய காலத்தில் வேண்டிய தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதனை எந்தக் காரணத்தைக் காட்டியும் மூடி மறைக்க முடியாது; அதற்கு முயல்வதும் ஆகாது.

நடந்தவைகள் நடந்தவையாக இருக்கட்டும்; இனிமேல் நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்ற வகையிலாவது –

பெரும்போக நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு இருந்த நெருக்கடியை விசேட செயல் திட்டங்கள் ஊடாக நீக்குவதற்கும்–

மிகக் குறிப்பாக ஏற்கனவே அங்கு ஆரம்பிக்கப்பட்டுவிட்ட சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான உர வகைகள் மற்றும் வசதிகளைச் செய்வதற்கும்–


அரசும் அதன் அதிகாரிகளும் மாசு மறுவற்ற முறையில் முன்னின்று உழைக்க வேண்டும்.

நொந்து நொடிந்து போன மக்களின் நலனில் வேண்டிய அக்கறையுடனும் வேகத்துடனும் செயற்பட்டு, அவர்கள் மீது தமக்குள்ள அக்கறையை வெளிப்படுத்த வேண்டும். அவர்களுக்குரிய இன்றியமையாத பிரதான கடமைகளில் அது முதலாவது எனலாம். பொறுத்திருந்து பார்க்கலாமா?

வன்னிப் பிரதேசத்தில் சிறுபோக நெல் அறுவடைக்கு இன்னும் சுமார் இரண்டு மாதங்களே உள்ளன. அப்போது தெரிந்துவிடும் அக்கறையின் கனதி...

# அரசின் பலத்தைக் குலைக்கும் எந்தச் செயலையும் செய்யேன்

## நீதியமைச்சர் ஹக்கீம் உறுதி



கொழும்பு, மே 23

அரசின் பலத்தைக் குலைக்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் தாம் ஈடுபடப் போவதில்லை என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

உடுநுவர பகுதியில் இடம்பெற்ற கடுகண்ணாவ–குறுக்குத்தலை பாதை திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசின் உறுதித் தன்மையைக் குலைக்கும் நோக்கமில்லை. உறுதியான அரசுடன் மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குவது எமது நோக்கம். இருப்பினும் ஏற்றுக்

> “ உறுதியான அரசுடன் மக்களின் தேவைகளை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குவது எமது நோக்கம்

கொள்ள முடியாத விடயங்கள் தொடர்பில் விமர்சிக்கும் சுதந்திரம் உண்டு. ஆயினும் அதனூடான ஒரு சில சக்திகள் எதிர்பார்க்கும் விடயங்கள் இடம்பெறாவிடின் எம்மைப் பற்றிய வதந்திகள் பரப்பப்படுகின்றன. இது தொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டும். – என்றார். (த–ரி)

# சான்றிதழ் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 23

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் தென்மராட்சிப் பிரதேச தென்னைச் செய்கை சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிப் பட்டறை தொடர்பான சான்றிதழ்கள் இதுவரை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை.

தென்னைப் பயிர்ச்செய்கை வட பிராந்திய சபையினரால் ஏப்ரல் மாத இறுதியில் நடத்தப்பட்ட இப் பயிற்சிப் பட்டறையில் குறித்த சங்கங்கள் தமது கணக்கீடுகளை எவ்வாறு தயாரிக்க வேண்டும் என்ற வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கான சான்றிதழ்கள் சுட்டிபுரம் பிரதேசத்தில் இடம்பெறும் கண்காட்சி நிகழ்வில் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. குறித்த கண்காட்சி நிகழ்வின்போது பெயருக்கு சில அங்கத்தவர்களுக்கு மட்டும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மீதிச் சான்றிதழ்கள் இதுவரையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை.

அதேவேளை குறித்த அங்கத்தவர்களுக்கு வழங்கவென சமுர்த்தி வலய ரீதியில் அமைக்கப்பட்ட சமாசங்களுக்கு காசோலைகளும் வழங்கப்பட்டன. அவையும்இதுவரை கிராம சேவையாளர் பிரிவுகளில் அமைக்கப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. (த–122)

# தற்காலிக ஊழியர்களுக்கும் சேமலாப நிதி கட்டாயம்

## பிரதித் தொழில் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 23

வடமாகாணத்தில் உள்ள சகல தனியார் நிறுவனங்களிதும் தற்காலிகமாக பணியாற்றும் பணியாளர்கள் அனைவரும் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட வேண்டும் என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ் வரன் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது:–

அநேகமான நிறுவனங்களில் பணியாற்றும் தற்காலிக பணியாளர்கள் இவ்வாறு ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் இணைக்கப்படவில்லை பணியாளர்களின் எதிர்காலம் கருதி அவர்களையும் இந்தத் திட்டத்தில் கட்டாயம் இணைக்க வேண்டும்.

வர்த்தக நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இந்த நடைமுறையைப் பின்பற்றி பணியாளர்களின் எதிர்கால நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தொழில் திணைக்களத்தின் பரிசோதகர்கள் நிறுவனங்களுக்கு நேரடியாகச் சென்று இதற்கான பரிசோதனைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

வடக்கின் பல நிறுவனங்களில் தற்காலிகமாகப் பணியாற்றும் ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதி திட்டத்தின் கீழ் இப்போது இணைக்கப்பட்டு வருகின்றனர்.–என்றார். (து–17)

# பறிபோனது டக்ளஸின் பதவி சிலாவத்தைக்கு புதிய நிர்வாகம்

முல்லைத்தீவு, மே 23

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் சிலாவத்தை கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு நீண்டகால இழுபறியின் பின்னர் நேற்று முன்தினம் முறையாக இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கரைதுறைப்பற்று கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆகியோர் முன்னிலையில் தெரிவு இடம்பெற்றது.

இந்தத் தெரிவின்போது சிலாவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருந்து புதிய நிர்வாகத் தெரிவுக்கு முட்டுக்கட்டை போட்டு வந்தார் என மக்கள் குற்றஞ்சாட்டிய திருச்செல்வம் டக்ளஸ் பங்குபற்றவில்லை.

> “ புதிய நிர்வாகத் தலைவராக அ.வேதாரணியம் பிள்ளையும், செயலாளராக ச.இராசேந்திரமும், பொருளாளராக சி.மருதநாயகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய நிர்வாகத் தலைவராக அ.வேதாரணியம்பிள்ளையும், செயலாளராக ச.இராசேந்திரமும், பொருளாளராக சி.மருதநாயகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ–5)

# கருத்தாடல்

யாழ்ப்பாணம், மே 23

வடமாகாண சபைத் தேர்தல் 2013 சவால்களும் சந்தர்ப்பங்களும் என்னும் தலைப்பிலான கருத்தாடல் நாளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள டி.சி.எம்.தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச மார்க்சியக்குழுவின் ஏற்பாட்டில் சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறும். மேற்படி கருத்தரங்கில் ஆரம்ப உரையை ஏ.சி.ஜோர்ஜ் நிகழ்த்துவார். (வ)

# சித்திரப் போட்டி



யாழ்ப்பாணம்,மே 23

வடமராட்சி வலய மட்ட சித்திரப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (வ)

# மலேரியா விழிப்புணர்வு நடைபவனி நாளை

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு மலேரியா விழிப்புணர்வு நடைபவனி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நகரில் பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் பணிமனையில் இருந்து ஆரம்பித்து துரையப்பா விளையாட்டரங்கில் முடிவடையும். இதற்கான ஏற்பாடுகளை யாழ். பிராந்திய மலேரியா தடை இயக்கம் மேற்கொண்டுள்ளது. (ஒ–4)

# நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 23

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மு.ப. 11.00 மணி வரை கனகசபை வீதியிலும், முற்பகல் 11.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை சிவகுருநாதர் கோவிலடி, சிவகுருநாதர் வீதியிலும் தடுப்பூசி போடப்படும் என்று மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானசோதி அறிவித்துள்ளார். (ஒ–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனாய்வாளர்களின் செயற்பாடு தேர்தல் ஆணையாளர் கவனத்துக்கு

## கூட்டமைப்பு கொண்டு செல்லும்

யாழ்ப்பாணம்,மே 23
முல்லைத்தீவில் வாக்காளர் பட்டியலை இராணுவப் புலனாய்வாளர்கள் கோருகின்றமை தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
புதிய வாக்காளர் பெயர்ப்பட்டியலை தயாரிப்பதற்காக முல்லைத்தீவு கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பட்டியலை இராணுவப் புலனாய்வாளர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்துவோர் பெற்றுச்செல்கின்றனர்.
அத்துடன் 2012 வாக்காளர் பெயர்ப்பட்டியலில் உள்ளவர்களில் தற்போது மாவட்டத்தில் இல்லாதவர்கள் குறித்த விவரங்களையும் அவர்கள் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலின் பிரகாரம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி விடயத்தை உடனடியாகவே தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டு செல்லும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் கூறினார்.
(த-5)



# செய்தி வெளியாவதை தவிர்க்க விரும்புகிறேன்

## மாவை எம்.பி.



யாழ்ப்பாணம்,மே 23.
தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி கலைக்கப்பட்டமை தொடர்பில் நேற்றைய உதயனில் 2 ஆம் பக்கத்தில் செய்தி ஒன்று வெளியாகியிருந்தது.
இது குறித்து தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா மேலதிக விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.
அதில் "இது தொடர்பாக என்னைத் தொடர்புகொண்ட செய்தியாளரிடம் இந்த நேரத்தில் இத்தகைய செய்திகள் வெளிவருவதை தவிர்க்கவே நான் விரும்புகிறேன் என்றே கூறினேன். தவிர, இது பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என நான் எதுவும் கூறவில்லை" என்று அவர் தெரிவித்துள்ளார்.
(த)

# அதிகாலைவேளை வீடு புகுந்து ஆயுத முனையில் கொள்ளை

## வவுனியாவில் 12 பவுணுக்கு மேல் பறிபோனது

வவுனியா, மே 23
வவுனியாவில் அதிகாலை வேளை வீடுபுகுந்த துப்பாக்கிதாரிகள் குடும்பஸ்தரின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டி 12 பவுணுக்கும் மேற்பட்ட நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். எனினும் இது குறித்து தாம் எவரையும் இதுவரை கைது செய்யவில்லை என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் வவுனியா-மன்னார் வீதியில் சோபால புளியங்குளம் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.
வீட்டின் சமையலறைப் புகைக்கூட்டை உடைத்து உள்நுழைந்தவர்கள் துப்பாக்கிகளை வீட்டில் இருந்தவர்களுக்குக்காட்டி பயமுறுத்த வேறு சிலர் வீட்டில் சகல அறைகளி லும் தேடுதல் நடத்தி 12 பவுணுக்கும் மேற்பட்ட நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர். வீட்டுக்காரர் அணிந்திருந்த சங்கிலி, தோடுகள் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டன.
ஆயுததாரிகள் துப்பாக்கிகளை மட்டுமன்றி கூரிய ஆயுதங்களையும் வைத்திருந்துள்ளனர் என்று கூறப்பட்டது. இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை அடைவு வைத்துள்ளார். வீட்டில் இருந்த அந்த அடைவு பற்றிய குறிப்புகள், பதிவுத்துண்டுகளையும் கைத்தொலைபேசிகளையும் கொள்ளையர் எடுத்துச்சென்றுள்ளனர்.
குடும்பஸ்தரின் வருமான விவரங்கள், வேலை விவரம் பற்றியும் கொள்ளையர்கள் அங்கு கூறிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இதனால் அந்த வீட்டுக்காரர் அதிர்ச்சியடைந்துள்ளார்.
விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
(த-4- 402)


**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

* கல்விமானித் தெரிவு (B.Ed)
* மத்தியவங்கி முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைகளுக்கு - வெள்ளி (24/5), சனி (25/5) காலை 10.00 - 4.00 மணிவரை

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்) 0754164564



**கண்ணீர் அஞ்சலி**



எமது சங்கத்தில் 38 ஆண்டு காலமாக கடமை தவறாது சேவை புரிந்த

**இராசரத்தினம் தவராசா**

அவர்கள் நேற்று (22.05.2013) புதன்கிழமை திடீர் மரணம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்துள்ள நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புலோலி ப.நோ.கூ.சங்கம்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.



**தம்பசிட்டியூர் - இராசமணிக்கு கண்ணீர் காணிக்கைகள்**

கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி **பொன்னம்பலம் இராசமணி** அவர்கள் நேற்று முன்தினம் (21.05.2013) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

HSCMS, நவாலி.
சுதா - ரமேஸ்
ஊரிக்காடு, நாவலடி.



**கண்ணீர் அஞ்சலி**



அமரர்


**சின்னத்தம்பி பரமநாதன்**
(கொக்குவில் கிழக்கு)

நல்ல குடும்பத்தலைவனாய்
அன்பு பொழியும் தந்தையாய்
சமூக நலன் பேணும் மனிதனாய்
இறைபக்தி மிக்க பக்தனாய்
நமக்கெல்லாம் நல்லவனாய்
வாழ்ந்த உமக்கு
நம் கண்ணீர் அஞ்சலி!

அன்னாரின் சம்பந்தி குடும்பத்தினர்.
ஜெயச்சந்திரன்-கமலலோசனி(கனடா)
ஜெயமயூரகன்- லலிதா(லண்டன்)
ஜெயசங்கரன்-பிரியதர்சினி(கனடா)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு 05.06.1966

உதிர்வு 02.06.2012

அமரர்

**இளையவி-துரைராசா**
(கொழும்பான்)
(நிரோஸ் அந்தியகாலசேவை உரிமையாளர்)

திதி 23.05.2013 வியாழக்கிழமை

தெய்வத்தின் திருவுருவே அப்பா - நீர்
எமைப் பிரிந்து இன்றோடு
ஓராண்டு ஆனதுவே
நாள்கள் பல கடந்தும் ஆறவில்லை
உம் பிரிவாலான துயர்

அன்பின் உறைவிடமே அப்பா!
இப் பூவுலகில் எமைத் தவிக்கவிட்டு
எங்கு தான் போனீரோ?
காலங்கள் கடந்தாலும் நாம் கொண்ட
கோலங்களே மாறினாலும் உம் நினைவு
எம்மனதை விட்டு என்றும் நீங்காது

குடும்பத்தினர்.
சூராவத்தை வடக்கு,
சுன்னாகம். (56794)(7.9.14) T.P- 0775938740, 0775446910



**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 09.07.1975
மறைவு 15.05.2009

அமரர் **அருளானந்தம் தமிழ்விழி**

காலங்கள் கடந்தாலும் நீ நடந்த
காற்தடங்கள் அழிபட்டுப் போவதில்லை
மனங்களில் உன் உருவம்
மறைந்திடப் போவதில்லை
என்றும் உன் நினைவோடு
உறவாடியே [illegible]

குடும்பத்தினர்
நாவற்கட்டை லேன்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்,
3ஆம் வட்டாரம் வேலணை கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு 10 பேருக்கு மூளை மலேரியா

## அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மே 23

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 15 பேர் மலேரியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர். அவர்களில் 10 பேர் கொடிய மூளை மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர் என்று யாழ். பிராந்திய மலேரியா தடை இயக்க மருத்துவர் அ.ஜெயகுமாரன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முற்பட்டு ஆபிரிக்க நாடுகளில் தங்கியிருந்து திரும்பி வந்தவர்களாகவும், இந்தியா உள்ளிட்ட தென்னாசிய நாடுகளுக்குச் சென்று வந்தவர்களாகவும் உள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்திலேயே இனங்காணப்பட்டனர்.

உள்நாட்டில் மலேரியா நோயைக் காவுகின்ற 'அனோபிலிஸ்' பெண் நுளம்புகள் தாராளமாக இருப்பதனால் நோய் உள்நாட்டில் பெருகும் வாய்ப்புள்ளது. எனவே நோய் பெருகுவதைத் தடுக்க அவதானமாக இருக்க வேண்டும்.

நுளம்பு பெருகும் இடங்களை அழிக்க வேண்டும், காய்ச்சல் ஏற்பட்டால் அது மலேரியாவாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

மலேரியா தொற்றுக்குள்ளாகிய நாடுகளுக்குச் செல்வதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் மலேரியாத் தொற்றைத் தடுக்கின்ற மாத்திரையை ஒரு தடவையும், அத்தகைய நாடுகளில் தங்கியிருக்கின்ற காலத்தில் வாராந்தம் ஒரு தடவையும் மீண்டும் இலங்கை வந்த பின்னர் வாரம் ஒரு தடவை வீதம் ஒரு மாதத்துக்கும் மாத்திரையை உட்கொள்ள வேண்டும்.

மாத்திரைகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ அல்லது பிராந் திய மலேரியாத் தடை இயக்கப் பணிமனையிலோ பெற்றுக் கொள்ள முடியும்- என்றார். (த-4)

## நகர உணவகங்கள் மீது தொடர்ந்தும் கண்காணிப்பு

யாழ்ப்பாணம்,மே 23

யாழ். மாநகர சபை எல் லைக்குள் உள்ள உணவகங்களின் நிலைமை குறித்துத் தொடர்ந்தும் கண்காணிப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. எனினும் சில உணவகங்கள் குறித்து மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். நுகர்வோருக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் இயங்கும் உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகர சபை சுகாதாரக் குழுவின் தலைவர் எஸ். விஜயகாந்த் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

உணவு நிலையங்களின் சுகாதாரம், விலை நிர்ணயம், பாதுகாப்பு என்பவை தொடர்பில் அவற்றின் உரிமையாளர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும். ஆனால் நுகர்வோர் பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ளாது வியாபார நோக்கத்தை இலக்காகக் கொண்டு சில உணவகங்கள் செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.



> “ உணவு நிலையங்களின் சுகாதாரம், விலை நிர்ணயம், பாதுகாப்பு என்பவை தொடர்பில் அவற்றின் உரிமையாளர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும்.

பொதுமக்களின் நலன்கருதி சுத்தமான, பாதுகாப்பான வகையில் உணவகங்கள் தங்கள் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். மக்களின் சுகாதார நலன்களைக் கவனத்தில் கொள்ளாத உணவு நிலையங்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (த-7)

## போயா தின பணிக்கு மேலதிக கொடுப்பனவு கட்டாயம்

### பிரதித் தொழில் ஆணையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 23

போயா விடுமுறை நாள்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் மேற்கொண்டால் பணியாளர்களுக்கு அன்றையதினம் மேலதிக கொடுப்பனவைக் கண்டிப்பாக வழங்க வேண்டும் என்று வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதி ஞாயிறு விடுமுறை நாள்களில் கட்டாயம் வர்த்தக நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

அவ்வாறு ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்யும் நிலையங்கள் மீது தொழில் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் போயா விடுமுறை நாள்களிலும் கட்டாயம் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு பணியாளர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும். ஆனால் அந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை.

இவ்வாறு போயா தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் மேற்கொண்டால் பணியாளர்களுக்கு அன்றைய தினம் ஒன்றரை நாள் சம்பளக் கொடுப்பனவு விசேட கொடுப்பனவாக வழங்கப்பட வேண்டும்-என்றார். (த-17)

## கரவெட்டி மேற்கில் அடிக்கடி சீரற்ற மின் விநியோகம்

### அந்தப் பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,மே 23

கரவெட்டி மேற்குப் பிரதேசத்தில் ஒரு பகுதிக்குத் தினமும் மின் விநியோகம் சீரான முறையில் இடம்பெறாததால் அந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவ தாக விசனம் தெரிவிக்கின்றனர்.

அதிகமாக இரவு வேளையில் இந்தப் பிரதேசத்தில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகின்றது. இவ்வாறு இரவில் மின்சாரம் தடைப்படுவதால் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இவ்வாறு மின்சாரம் திடீர் திடீரென தடைப்படுவதால் இரவில் இருளின் மத்தியில் இருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

சீரற்ற மின்விநியோகம் குறித்து அந்தப்பகுதி மக்கள் மின்சார சபைக்குத் தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கின்றனர். (வ-17)

## மதுபானசாலைகள் வெசாக் நாள்களில் மூடப்படும்

யாழ்ப்பாணம்,மே 23

வெசாக் பண்டிகைக் காலத்தில் மதுபான நிலையங்கள் திறக்கப்பட் டால் அவற்றுக்கெதிராகச் சட்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மது வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் பொது இடங்களில் மதுபாவனையா ளர்களால் ஏற்படக்கூடிய இடர் பாடுகளைத் தவிர்க்கும் நோக்குடன் அனைத்து மதுபானச் சாலைகளும் மூடப்பட வேண்டி யது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் அனைத்து மதுபானச் சாலைகளும் மூடப்பட்டிருக் கும். இதனை மீறி மதுபான நிலையங்களைத் திறக்கும் உரிமையாளர்களுக்கு எதிரா கச் சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

அவ்விரு தினங்களிலும் பொலிஸாரின் உதவியுடன் மது வரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

## குடாநாட்டிலும் வெசாக்

யாழ்ப்பாணம், மே 23


யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் வெசாக் கொண்டாட்ட நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை மாலை 7 மணி முதல் யாழ்.நகரப் பகுதியில் இடம்பெறவுள்ளன.

பல்வேறு வகையான அலங்காரப் பந்தல்கள், வளைவுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்த வெசாக் கொண்டாட்டம் இடம்பெறவுள்ள தாகவும், இதில் பொது மக்களைக் கலந்து கொள்ளுமாறு படையினர் அறிவித்துள்ளனர்.(த)

## வங்கிகள் இன்று திறப்பு

வெசாக் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள வங்கிகள் இன்று வியாழக்கிழமை மு.ப. 11 மணி வரை மட்டுமே திறந்திருக்கு மென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## குடியரசு தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம், மே 23

இலங்கையின் குடியரசு தின நிகழ்வுகள் யாழ்.மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் தேசியக்கொடி ஏற்றி நேற்று கொண்டாடப்பட்டது.

இலங்கையின் 41ஆவது குடியரசு தின நிகழ்வுகள் நாடெங்கிலும் நேற்றுக் கொண்டாடப்பட்டன. குடியரசு தினத்தைச் சகல திணைக்களங்களிலும் கொண்டாடுமாறு பொது நிர் வாக உள்ளாட்டலுவல்கள் அமைச்சு அறிவுறுத்தியிருந் தது.

இதற்கமைவாக யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் பிரதான நிகழ்வு நேற்றுக் காலை 8.30 மணிக்கு இடம் பெற்றது. தேசியக்கொடியை யாழ்.அரச அதிபர் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இதன் பின்னர் குடியரசு தினம் தொடர்பான விளக்கவுரை அரச அதிபரால் வழங்கப்பட்டது.

இதேபோன்று சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச செயலாளர்கள் தலைமையில் குடியரசு தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை, இலங்கை குடியரசு தினத்தையொட்டி நேற்று தென்மராட்சி பிரதேசத்தில் அரச திணைக்கள அலுவலகங்களிலும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டன. அந்தந்த அலுவலக தலைவர்களால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு உரையும் நிகழ்த்தப்பட்டன. (த-5-9)

## அம்புலன்ஸுக்காக மணிக்கணக்கில் காத்திருந்த அவசர நோயாளிகள்

தென்மராட்சி,மே 23

வீதி விபத்துக்களில் சிக்கிப் படுகாயமடைந்த ஐந்து பேர் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வாகனம் இல்லாததால் ஒன்றரை மணி நேரம் அவசர சிகிச்சைப் பிரிவில் காத்திருந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரியில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் மிருசுவில் மற்றும் மீசாலைப் பகுதியில் ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இளம் பெண் மற்றும் சட்டத் தரணி, படைச்சிப்பாய் உட்பட ஐந்து பேர் படுகாயமடைந் தனர்.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டனர். இவர்களைக் கொண்டு வருவதற்கு முன்னர் அவசர நோயாளர்களை ஏற்றிக் கொண்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அம்புலன்ஸ் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்றிருந்தால் காயமடைந்தவர்களை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்ப முடியாத நிலையில் வரணி வைத்திய சாலை அம்புலன்ஸ்ஸை வரவழைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இரவு 8.45 மணிக்கு நோயாளர்களை ஏற்றிக்கொண்டு பூநகரி வைத்தியசாலை அம்புலன்ஸ் வரவே அதில் விபத்தில் காயமடைந்த நோயாளர்களை ஏற்றி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நேரத்தில் வரணி அம்புலன்ஸ்ஸும், சாவகச்சேரி அம்புலன்ஸும் ஒன்றன் பின் ஒன்றாக அங்கு வந்தன. இதனையடுத்து இரு அம்புலன்ஸ் வாகனங்களிலும் ஐந்து நோயாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மிருசுவிலில் இடம்பெற்ற விபத்தில் கெற்பேலி தெற்கைச் சேர்ந்த வசந்தன் கிருஷிகா (வயது-23), மிருசுவில் தெற்கைச் சேர்ந்த வேதவனம் ஆறுமுகம்( வயது-70) ஆகி யோரும், மீசாலையில் இடம்பெற்ற விபத்தில் கிளிநொச்சி நீதிமன்றுக்கு சென்றுவிட்டுத் திரும்பிய சட்டத்தரணியான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தில்லைநாதன் அர்ச்சுனன் (வயது-28) இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த நுணாவில் மேற்கைச் சேர்ந்த குமாரமூர்த்தி கபிராஜ் (வயது-24) . படைச் சிப்பாயான பி.எம். ஆர்.றுவான் குமார (வயது-20) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (த-9-ரி)



> “ அம்புலன்ஸ் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்றிருந்ததால் காயமடைந்தவர்களை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்ப முடியாத நிலையில் வரணி வைத்திய சாலை அம்புலன்ஸ்ஸை வரவழைக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்புப் பணிகளை துரிதப்படுத்த ஒபாமா உத்தரவு

நியூயோர்க், மே 23
சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள ஒக்லஹோமா மாகாணத்தில் மீட்புப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்தார்.
பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் தொலைக்காட்சியில் விசேட உரையாற்றும்போதே ஒபாமா இவ்விதம் குறிப்பிட்டார்.
இடிபாடுகளுக்குள் இருந்து உயிரிழந்தவர்களின் சடலங்கள் சில மீட்கப்பட்டுள்ளதுடன், உயிருடன் எவரையும் மீட்பதற்கான வாய்ப்புக்கள் இனி இல்லை என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
9 சிறுவர்கள் உள்ளிட்ட 24 பேர் இந்த அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளனர் என்று அதிகாரிகள் முன்னர் கூறியிருந்தனர். எனினும் 90க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்தபோதும் அவற்றை உறுதிப்படுத்த முடியவில்லை.
சூறாவளியின் தாக்கத்தினால் ஒக்லஹொமா பிராந்திய மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (ற)



அமெரிக்காவின் ஒகல்ஹோமா மாகாணத்தில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துரித கதியில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. சூறாவளித் தாக்கத்தால் தென்பகுதி நகரான மூரிச் நகரே கடும் சேதங் களுக்கு உள்ளாகியுள்ளது என்றும் கூறப்படுகிறது. 200க்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மீட்புக் குழுவினர் கூறுகின்றனர். (ற)

## இந்தோனேஷிய சுரங்க விபத்து; 21 பேர் சாவு

திமிகா, மே 23
இந்தோனேஷியாவில் இடம்பெற்ற சுரங்க விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர்.
உலகிலேயே மிகப் பெரிதான இந்தச் சுரங்கத்தில், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த பயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே விபத்து ஏற்பட்டுள்ளது.
பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த பயிற்சிகளில் 38 பேர் ஈடுபட்டிருந்தபோது சுரங்கத்தில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.
உள்ளே சிக்கிக்கொண்ட 38 பேரில், 10 பேர் பாதுகாப்பாக மீட்புக் குழுவால் மீட்கப்பட்டனர். ஏனைய 21 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன என்று மீட்புக் குழுவினர் அறிவித்துள்ளனர்.
மீதியான 7 பேரின் கதி குறித்து இன்னமும் எதுவும் உறுதிப்படுத்த இயலாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சீண்டும் செயற்பாட்டால் சிக்கல் சிரிய அரசுக்கே

## இஸ்ரேல் இராணுவத் தளபதி எச்சரிக்கை



ஜெருசலேம், மே 23
''சிரிய அரசின் எல்லைமீறும் செயற்பாடுகள் தொடருமாயின் அந்த நாடும் அதற்கான விளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். விளைவுகள் கடுமையானவையாகவே இருக்கும்''- இவ்வாறு சிரிய அரசுக்குக் கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார் இஸ்ரேல் இராணுவத் தளபதி.
இஸ்ரேலின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட கோலன் ஹய்ட்ஸ் பகுதியில் பாதுகாப்பு ரோந்துப் பணியில் ஈடுபட்ட இஸ்ரேலிய இராணுவ வாகனம் மீது, சிரிய இராணுவத்தினர் தாக்குல் நடத்தியிருந்தனர்.
அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இஸ்ரேல் இராணுவத் தளபதி இவ்வாறு கடுந்தொனியில் கருத்துத் தெரிவித்துள்ளார்.
தமது நாட்டு எல்லைப் பகுதிக்குள் இஸ்ரேல் இராணுவத்தினர் நுழைந்தமையாலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று சிரிய இராணுவம் கூறியுள்ளதை மறுத்த அவர், இஸ்ரேலின் ஆதிக்கத்துக்குட்பட்ட பகுதியிலே இஸ்ரேல் இராணுவம் வழமையான பாதுகாப்பு ரோந்துப் பணிகளில் ஈடுபட்டது என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.
''இஸ்ரேல் எல்லைக்குள் இஸ்ரேல் இராணுவத்தின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் சிரிய அரசு ஈடுபட்டுள்ளது. இந்த நிலை தொடருமானால் சிரிய அரசும், சிரிய ஜனாதிபதியும் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றோம்''- என்றும் தெரிவித்துள்ளார் இஸ்ரேல் இராணுவத் தளபதி. (ற)

# தலிபான்கள் விரும்பினால் பேச்சு நடத்துவதற்கு தயார்

## நவாஸ் ஷெரீப் தெரிவிப்பு



இஸ்லாமாபாத், மே 23
தலிபான்கள் விரும்பினால் அவர்களுடன் பேச்சுகளை நடத்துவதற்கு பாகிஸ்தான் அரசு தயாராகவே உள்ளது என்று தெரிவித்துள்ளார் பிரதமராகப் பதவியேற்கவுள்ள முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீப்.
கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள நவாஸ் ஷெரீப் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திக்தி பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.
இந்தநிலையில் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார் நவாஸ் ஷெரீப்.
அவர் மேலும் இது குறித்துக் குறிப்பிடுகையில்,
''நாட்டில் தீவிரவாதம் முக்கிய பிரச்சினையாக உள்ளது. தீவிரவாதத்தால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது. மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயுதம் ஏந்திப் போராடினால் இதற்கு தீர்வு ஏற்படாது. நாட்டின் அமைதியை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. தலிபான்கள் விரும்பினால் அவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு பாகிஸ்தான் அரசு எப்போதும் தயாராகவே உள்ளது'' என்று தெரிவித்தார். (ற)

## சீனா செல்லும் வடகொரியாவின் சிறப்புத் தூதர்

பியாங்யாங், மே 23
சீனாவுக்கு முதன்முறையாக தனது சிறப்புத் தூதரை அனுப்பியுள்ளது வடகொரியா.
அணு ஆயுத சோதனையைத் தொடர்ந்து உலக நாடுகளிடம் இருந்து வரும் அழுத்தம் மற்றும் பொருளாதாரத் தடை என்ற சிக்கலான நிலையில் இருக்கும் வடகொரியா, சீனாவுடனான உறவை பலப்படுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளது.
அதையடுத்து வடகொரியா தலைவர் கிம் ஜாங்-உன், சீனாவுக்கான சிறப்புத் தூதரை அனுப்பியுள்ளார் என்று கூறப்படுகிறது. (ற)

# தென்கொரியக் கடலில் வடகொரியா தாக்குதல்

## பதற்றத்தில் தீவகற்பம்

சியோல், மே 23
தென்கொரியாவின் ஆதிக்கத்துக்குட்பட்ட கடற் பகுதியில் வடகொரியா ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.
அதையடுத்து கொரியத் தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த தென்கொரிய இராணுப் பேச்சாளர்,
''வடகொரியா ஏவுகணையால் தாக்கியது உண்மைதான். ஆனால், இது சோதனை ரீதியான ஏவு கணையா அல்லது வாகனத்தில் இருந்து ஏவப்படும் றொக்கெட்டா என்பது உடனடியாகத் தெரியவில்லை. இதுகுறித்து நாங்கள் ஆராய்கின்றோம்.
கடந்த சனிக்கிழமை மட்டும் வடக்கு கடற்கரைப் பகுதியில் வடகொரியா 3 ஏவுகணைகளை தாக்குதல் நடத்தியது. இதுபோன்று சாதாரண மாக வடகொரியா ஏவுகணைகளை தாக்குவதில்லை. தற்போது இரு கொரியா நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், வடகொரியாவின் இந்தச் செயல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.'' என்று தெரிவித்தார்.
கடந்த மூன்று நாள்களில் வடகொரியா இவ்வாறான ஐந்துக்கும் மேற்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளமை அந்தப் பிராந்தியத்தில் அசாதார நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. (ற)

# பிரதமரின் பயணம் வெற்றி

## சீன வெளிவிவகார அமைச்சு தகவல்



பீஜிங், மே 23
சீனப் பிரதமர் லீ கெகியாங்கின் இந்தியப் பயணம் வெற்றிகரமாக அமைந்தது என்று சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் கருத்து வெளியிட்டுள்ளது.
இது குறித்து சீன வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஹாங் லீ கருத்துத் தெரிவிக்கும்போது, ''பிரதமர் லீ கெகியாங்கின் மூன்று நாள் அரச முறை இந்தியப் பயணம் எதிர்பார்த்ததை விட சிறப்பாக அமைந்தது.
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் லீ கெகியாங் மேற்கொண்ட பேச்சுக்கள் இரு நாடுகளுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.
குறிப்பாக, எல்லைப் பிரச்சினை காரணமாக அண்மையில் இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பதற்றம் பேச்சுக்கள் மூலம் மிக அமைதியான முறையில் தீர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார் (ற)

# கடத்தப்பட்ட இராணுவத்தினர் போராளிகளால் விடுவிப்பு

கெய்ரோ, மே 23
பழங்குடியினப் போராளிகளால் கடந்த 16 ஆம் திகதி கடத்தப்பட்ட 6 இராணுவத்தினரும் விடுக்கப்பட்டுள்ளனர் என்று எகிப்திய இராணுவம் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
சினாய் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போதே குறித்த இராணுவம் போராளிகளால் கடத்தப்பட்டிருந்தனர்.
அதையடுத்து அந்தப் பகுதியில் அதிகளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.
அதையடுத்து சினாய் பகுதி பழங்குடியினத் தலைவர்களிடம் எகிப்திய அரச அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தினர்.
அதன் பலனான நேற்று கடத்தப்பட்ட இராணுவ வீரர்கள் போராளிகளால் விடுவிக்கப்பட்டனர் என்று எகிப்திய இராணுவத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.
எகிப்திய அரசு போராளிகளுடன் இதுதொடர்பில் பேச்சுக்கள் நடத்தி வருவதாக வெளியான செய்திகளை எகிப்திய அரசு வட்டாரங்கள் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னையில் '7 டி' தியேட்டர்

சென்னை, மே.23

இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னை புரசைவாக்கம் அபிராமி மெகா மாலில், 7டி (7 பரிமாண) தியேட்டர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இசையமைப்பாளர் தேவா திறந்து வைத்தார். தியேட்டர் குறித்து அதன் உரிமையாளர் அபிராமி ராமநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதல் பரிமாணம் என்பது, சிறந்த முப்பரிமாணத்தில் படம் பார்ப்பது. 2 ஆவது, அற்புதமான அதிரும் ஒலி கொண்டது. 3 ஆவது, உணர்வது. 4ஆவது, நறுமணம். 5ஆவது, காற்று மற்றும் மின்னல். 6ஆவது, மழை. 7 ஆவது, பனிப் பொழிவு. இந்த 7டி தியேட்டருக்கான உபகரணங்கள் மற்றும் 7டி படங்கள் இஸ்ரேல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

டிஜிட்டல் மயமாக்கப்பட்ட திரையரங்கில், அதிர்வுகளுடன் கூடிய இருக்கைகள், ஒலி சிஸ்டம், நீர் அலைகள், மழை, பனிப் பொழிவு மற்றும் முற்றிலும் ஒரு புதிய அனுபவத்தை உணர்ந்து பரவசப்படும் விதத்தில் தொழில் நுட்பங்கள் கையாளப்பட்டுள்ளன.

படம் பார்க்கும்போது, ரசிகர்கள் அமர்ந்திருக்கும் இருக்கைகள் அசையும். மழைச்சாரலையும், பனிப் பொழிவையும், குளிர்ந்த நீரின் அற்புதத்தையும் நன்கு உணர முடியும். புயல், சூறாவளி, இடி, மின்னல் ஏற்படும். திரையில் எந்த காட்சியைப் பார்த்து ரசிக்கிறார்களோ, அதற்கு மத்தியில் ரசிகர்களும் இருக்கும் மாயத்தை உணர்வார்கள் - என்றார்.

# வேட்பு மனு ஏற்பு

## பிரதமரின் வயது 80 என திருத்தம்

கவுகாத்தி, மே.23

பிரதமர் மன்மோகன் சிங்கின் வயது 80 என திருத்தம் செய்யப்பட்டதையடுத்து, டில்லி மேல் சபை தேர்தலுக்கான அவரது வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அஸாம் மாநிலத்திலிருந்து டெல்லி மேல்சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பிரதமர் மன்மோகன் சிங், அசாம் கண பரிஷத் உறுப்பி னர் குமார் தீபக் தாஸ் ஆகியோரின் பதவிக்காலம் அடுத்த மாதம் முடிவடைகிறது.

இதனால்ஏற்படுகிற 2 வெற்றிடங்களுக்கு வரும் 30 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

இந்த தேர்தலில் பிரதமர் மன்மோகன் சிங் தொடர்ந்து 5 ஆவது முறையாக காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகிறார். மற்றொரு இடத்துக்கு ஆதிவாசி இளம் தலைவர் சாண்டியஸ் குஜுர், காங்கிரஸ் சார்பில் நிறுத் தப்பட்டுள்ளார். எதிர்த்தரப்பில், அனைத்திந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி சார்பில் அமினுல் இஸ்லாம் போட்டியிடுகிறார்.

பிரதமர் மன்மோகன் சிங் தனது வேட்புமனுவை கடந்த 15 ஆம் திகதி அஸாம் சட்ட சபை முதன்மைச் செய லாளர் ஜி.பி.தாஸிடம் தாக்கல் செய்தார். இதே போன்று மற்ற வேட்பாளர்களும் தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

ஆனால் பிரதமர் மன்மோகன் சிங் தாக்கல் செய்த வேட்பு மனுவில் அவரது வயது 82 என்று குறிப்பிடப் பட்டிருந்தது. மற்றும் அதில் குறிப்பிடப் பட்டிருந்த நிரந்தர முகவரி, ஒரு நிலைத்த வைப்பு முதிர்ச்சி அடையும் திகதி ஆகியவை குறித்து சர்ச்சை எழுந்தது.

இந்த சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் தனது வயது 80 தான் என்பது உள்ளிட்ட தேவையான திருத்தங்கள் செய்து,



புதிய பிரமாண பத்திரம் பிரதமர் சார்பில் தாக்கல் செய்யப் பட்டது.

வேட்பு மனு பரிசீலனை நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் நிறுத்தியுள்ள மற்றொரு வேட்பாளரான சாண்டியஸ் குஜுர், அனைத்திந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் அமினுல் இஸ்லாம் ஆகிய 3 பேரின் வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதை அதிகாரபூர்வமாக தேர்தல் அதிகாரி ஜி.பி.தாஸ் நேற்று முன்தினம் அறிவித்தார்.

வேட்பு மனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாள் ஆகும். போட்டி இருந் தால் 30ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடை பெறும். உடனே வாக்குகள் எண்ணி முடிவு அறிவிக்கப் படும்.

126 இடங்களை கொண்ட அசாம் சட்ட சபையில் காங்கிரஸுக்கு 78 உறுப்பினர்கள் உள்ளனர். அதன் கூட்டணிக் கட்சியான போடோலேண்ட் மக்கள் முன்னணிக்கு 12 இடங்கள் உள்ளன. எதிர்க் கட்சியான அனைத்திந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கு 18 இடங்களே உள்ளன. எனவே பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட காங்கிரஸ் வேட் பாளர்கள் 2 பேரும் வெற்றி பெறுவது உறுதி என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ராஜீவைக் கொல்ல மைசூரில் சதி

### கர்நாடக முதல்வர் அதிர்ச்சித் தகவல்



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதற்கு 10 தினங்களுக்கு முன் னதாகவே, மைசூரில் அவரைக் கொல்ல சதி முயற்சி நடந்ததாக கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்தார்.

மறைந்த ராஜீவ் காந்தியின் 22 ஆம் ஆண்டு நினைவு தினம் தீவிரவாத தடுப்பு தினமாக இந்தியா முழுவதும் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, மைசூரில் உள்ள காங்கிரஸ் கட்சி தலைமை அலுவல கத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் பங்கேற்ற கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா பேசியதாவது:-

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு, 10 தினங்களுக்கு முன்னதாக மைசூரிலேயே அவரைக் கொல்லச் சதி நடந்தது.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக மைசூரில் அவர் பிரசாரம் செய்ய வந்தார். லலித் மஹால் பகுதியில் அவரது கார் சென்று கொண்டிருந்த போது, யாரும் எதிர்பாராத வேளையில் ஒரு வயதான பெண், திடீரென்று ராஜீவ் காந்தியின் காருக்கு குறுக்கே பாய்ந்தார்.

ராஜீவின் கார் சட்டென்று நின்றதால், அவரது காருக்கு பின்னால் வந்த கார்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் ராஜீவ் காந்தியை கொல்வதற்காக நடந்த சதி என்பது பின்னர் தெரிய வந்தது. இது நடந்து 10 தினங்களுக்கு பின்னர் அவர் ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டார். காங்கிரஸ் கட்சி ஒரு இளைய தலைவரை இழந்து விட்டது-என்றார்.




உலக தீவிரவாதத்துக்கு எதிரான நாளான நேற்று ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் இஸ்லாமிய மாணவிகள் தீவிரவாதத்துக்கு எதிராக உறுதி மொழி எடுத்து கொண்டனர்.

## அனல் காற்று வட இந்திய மாநிலங்களில்

வடமாநிலங்களில் வீசி வரும் கடும் அனல் காற்றால் பாதிக்கப்பட்டு மத்தியப்பிர தேசத்தில் 3 பேர் உயிரி ழந்தனர்.

வட மாநிலங்களில் கடும் அனல்காற்று வீசி வருகிறது. இதனால் பொது மக்கள் கடும் பாதிப்படைந் துள்ளனர்.

இதன் எதிரொலியாக மத்திய பிரதேசத்தில் 50 வயது மதிக்கத்தக்க முதிய வர், பயிற்சிக் காவலர், ஒரு இளைஞர் உள்பட 3 பேர் உயிரிழந்தனர்.

பஞ்சாப், ஹரியானா மாநிலங்களிலும் கடும் அனல் காற்று வீசுகிறது. இம்மாநிலங்களில் வெப்பநிலை 42-45டிகிரி செல்சியஸ் வரை பதிவாகி உள் ளது. ஹரியானா மாநிலத் தில் ஹிஸார், குர்கான், பிவானி, கர்னால், அம்பாலா உள்ளிட்ட பகுதிகளில் கடும் வெப்பக் காற்று வீசியது. (வ)

## 128 ஆண்டு கால சட்டத்தில் திருத்தம் செய்யும் இந்தியா

### இணைய தொ.தொ. சேவையைக் கட்டுப்படுத்த

டிஷ்லி, மே.23

இணையத்தள தொலைத் தொடர்பு சேவையை, தீவிர வாதிகள் மற்றும் பிரிவினைவாதிகள் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க, 128 ஆண்டு பழமை வாய்ந்த, 'இந்திய டெலிகிராப்' சட்டத்தில், திருத்தம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில், இணையத்தள தொலை தொடர்பு சேவை, முக்கிய இடத்தைப் பெறுகிறது. இந்தச் சேவையை, தீவிரவாதிகள் மற்றும் பிரிவினைவாதிகள், சர்வசாதாரணமாகப் பயன்படுத்தி, சதி வேலைகளில் ஈடுபடுகின்றனர். இதைத்தடுக்கும் வகையில், 128 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள, இந்திய டெலி கிராப் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவாதிப்ப தற்காக, மத்திய உள்துறை செயலர் ஆர்.கே.சிங் தலை மையில், அதனுடன் தொடர்புடைய அமைச்சகங்களின் உயர் அதிகாரிகள் பங்கேற்ற, உயர் மட்டக் குழுக் கூட்டம்நடைபெற்றது. இதில், மத்திய தொலை தொடர்பு துறை, தகவல் தொழில்நுட்ப துறைகளின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

1885 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட, இந்திய டெலி கிராப் சட்டம், தகவல் தொழில் நுட்ப சட்டம் 2000, ஆகியவற்றில் திருத்தம் செய்வது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. (வ)

## சஞ்சய்தத் புனே சிறையில்

மும்பை, மே.23

மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற நடிகர் சஞ்சய் தத் மும்பை ஆர்தர் சாலை சிறையில் இருந்து புனே எரவாடா சிறைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

மும்பையில் 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவ வழக்கில் முதலில் 6ஆண்டு சிறைத் தண்டனை சஞ்சய் தத்துக்கு விதிக்கப்பட்டது. பின்னர் உச்சநீதி மன்றத்தில் இந்தத் தண்டனை 5 ஆண்டாக குறைக்கப் பட்டது.

ஏற்கெனவே ஒன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்திருந்தால் ஒன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க உச்சநீதிமன்றம் உத்தர விட்டது.



இதைத்தொடர்ந்து நடிகர் சஞ்சய் தத் மும்பை தடா நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி சரண் அடைந்தார்.

பின்னர் அவர் மும்பை ஆர்தர் சாலை சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு ஒரு மாதத்துக்கு வீட்டுச் சாப்பாடு, தலையணை, மருந்துகள் வழங்க மும்பை நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

இந்தநிலையில் மும்பை ஆர்தர் சாலை சிறையிலிருந்து புனேவில் உள்ள எரவாடா சிறைக்கு சஞ்சய் தத் மாற்றப்பட்டார். (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி பாசிக்குடா கடற்கரை அழகுபடுத்தப்பட்டு வருகிறது.

## மட்டக்களப்பு விமானப்படை பொறுப்பதிகாரி இடமாற்றம்


மட்டக்களப்பு,மே 23
மட்டக்களப்பு விமானப்படை பொறுப்பதிகாரி டபிள்யு.எம்.ஏ.வி.அஜித் வெவகம இடமாற்றம் பெற்று கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு செல்லவுள்ளார். அவருக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் ஜும் ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது. இன நல்லுறவுக்காக பாடுபட்டமைக்காக மட்டக்களப்பு விமாணப்படை பொறுப்பதிகாரிக்கு பள்ளிவாசல் நிர்வாகத்தால் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டது. (ச)

## பொது பல சேனா அமைப்பின் அறிவிப்பை ஏற்க முடியாது

### கொழும்பு மாநகர சபை உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு,மே 23
பொது பல சேனா அமைப்பினர் 'இலங்கை பௌத்தர்களின் நாடு. அதனை ஏற்காதோர்க்கு இங்கு இடமில்லை' என்ற அறிவிப்பை விடுத்துள்ளனர். அதனை ஏற்க முடியாது என்று கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி. பாஸ்க்கரா தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-
பொது பல சேனாவின் அறிவிப்பானது. தமிழ் ,முஸ்லிம், கிறிஸ்தவ மக்களை சிந்திக்க வைத்துள்ளது. தமிழர்கள் தனிநாடு போவதா? இல்லையா என்பது அரசின் கையிலேயே உள்ளது. பொது பல சேனாவின் இனவாத கருத்துடையோரை கைது செய்யாமல் விடுவது அரசு மிதவாதத்தில் பயணிக்கிறதா? என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. அரசு தன் வழி சரி எனின் பொது பல சேனா போன்ற இனவாத இயக்கங்களை சிறையில் அடைத்து தடைசெய்து ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை நிலை நாட்ட வேண்டும்.
பொது பல சேனா போன்ற மதவாதக்கட்சிகளை உடனடியாகத் தடை செய்ய வேண்டும். நாட்டைக் காப்பாற்ற வேண்டும் எனின் தீர்க்கமான முடிவை அரசு எடுக்க வேண்டும். இல்லையேல் தமிழர் தனிவழி தேடவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.-என்றார். (ச)

# மின் கட்டண உயர்வை எதிர்த்து கிழக்கு பல்கலையில் சுவரொட்டி



'நாட்டை ஒளியேற்ற வீட்டை இருளாக்காதே, மின்சாரக் கட்டண உயர்வை மீளப் பெறும் வரைப் போராடுவோம், ஊழியர்களின் வயிற்றில் அடிக்கதே, மின்சாரக் கட்டண உயர்வை உடன் நிறுத்து, தொழிலாளர் மீது பளுவைத் திணிக்காதே'

மட்டக்களப்பு,மே 23
மின்சாரக் கட்டண உயர்வைக் கண்டித்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு, வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக சுவர்களில் எதிர்ப்புச் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டிருந்தன.
'நாட்டை ஒளியேற்ற வீட்டை இருளாக்காதே. மின்சாரக் கட்டண உயர்வை மீளப் பெறும் வரைப் போராடுவோம், ஊழியர்களின் வயிற்றில் அடிக்கதே, மின்சாரக்கட்டண உயர்வை உடன் நிறுத்து. தொழிலாளர் மீது பளுவைத் திணிக்காதே' போன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஒரு மணி நேர எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும், இறுதி நேரத்தில் அது கைவிடப்பட்டதால் முன்கூட்டியே சுவரொட்டிகளை ஒட்டிவிட்டு ஏற்பாட்டாளர்கள் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது. (ச)

## ரூ.20 கோடி பெறுமதிமிக்க மூலிகையுடன் 6 பேர் கைது

கொழும்பு,மே 23
கொலன்னாவ பகுதியில் 20 கோடி ரூபா பெறு மதியான ஒருவகை அரிய மூலிகைத் தாவரத்துடன் 6 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 15 ஆயிரம் கிலோகிராம் மூலிகைத் தாவரம் கைப்பற்றப்பட்டுள்ளது.
கைதான சந்தேகநபர்களில் இருவர் இந்தியர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் குறித்த மூலிகைகளை இந்தியாவுக்குக் கொண்டுசெல்வதற்கு திட்டமிட்டிருந்தமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. வாசனைத் திரவியங்களைத் தயாரிப்பதற்கு இந்த அரிய வகை மூலிகைத் தாவரம் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நீரோடைக்குள் கனரக வாகனம்

### இரண்டு பேர் படுகாயம்



கொழும்பு,மே 23
இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின்கம்பங்களை ஏற்றி வந்துகொண்டிருந்த கனரக வாகனம் ஒன்று நீரோடைக்குள் விழுந்து விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்:.
இந்த வாகனம் அம்பாறை ,சம்மாந்துறை நெல்லுப்படி சந்தி நீரோடையிலேயே விழுந்து விபத்துக்குள்ளானது.
அம்பாறையிலிருந்து கல்முனை நோக்கி வந்துகொண்டிருந்த கனரக வாகனமே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை விபத்திற்குள்ளானது.
இந்த விபத்தில் வாகனத்தின் சாரதியும் நடத்துநரும் காயமடைந்த நிலையில், சம்மாந்துறை அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வேலையற்ற பட்டதாரிகளால் ஜனாதிபதி மஹிந்தவுக்கு மனு

எமது எதிர்காலம் கருதி சம்மந்தப்பட்டவர்கள் தம்மை பட்டதாரி பயிலுநர் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்

மட்டக்களப்பு,மே 23
பட்டதாரிகளை பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளும் காலத்தில் அதற்குரிய நேர்முகத் தேர்வில் பல்வேறு காரணங்களால் கலந்து கொள்ள முடியாத மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் 11 பேர் தாம் நேர்முகத் தேர்வில் தாமதமான காரணத்தினை விளக்கி ஜனாதிபதி மஹிந்தவுக்கு அறிவித்துள்ளனர்.
பட்டதாரிகள் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புகளுக்காக சென்றிருந்ததால் உரிய காலத்தில் நாடுதிரும்ப முடியாமை, பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப்பகிஷ்கரிப்புகள் காரணமாக உரிய காலத்தில் பரீட்சை முடிவுகள் வெளிவராமை போன்ற காரணங்களை விளக்கி அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலம் கையெழுத்திட்டு அறிவித்துள்ளனர்.
எனினும் இவ்வாறு அறிவித்தும் நாம் இதுவரை பயிலுனர் பட்டதாரிகளாக இணைத்துக் கொள்ளப்படவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.
எனவே எமது எதிர்காலம் கருதி சம்மந்தப்பட்டவர்கள் தம்மை பட்டதாரி பயிலுநர் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## ஏறாவூர் சந்தையை நவீனபடுத்துவதற்கு நடவடிக்கை



மட்டக்களப்பு,மே 23
பாழடைந்துள்ள ஏறாவூர் நகர சபையின் பொதுச் சந்தை நவீன மயப்படுத்தப்பட்டு வர்த்தகர்களிடம் கையளிக்கப்படும் என்று ஏறாவூர் நகர சபையின் தலைவர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.
ஏறாவூர் நகரசபைக்குரிய பொதுச்சந்தைக் கட்டடம் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக திறக்கப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.
ஏறாவூர் பொதுச்சந்தைக் கட்டடத்தை நவீனமயப்படுத்தி மக்கள் பாவனைக்குத் திறந்துவிட முடியும் என்று அவர் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலைய உரிமையாளர் 42 பேரிடம் தண்டம் அறவீடு

## காலாவதியான பொருள் விற்பனை செய்தமை விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமையால்

யாழ்ப்பாணம்,மே 23

யாழ்.மாவட்டத்தில் கடந்த 4 மாத காலப்பகுதிக்குள் மட்டும் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த மற்றும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத 42 வர்த்தக நிலைய உரிமையாளர்கள் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தியுள்ளதாக யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுகாதாரமான முறையில் குறிப்பிட்ட கால எல்லை வரை உணவுப் பொருள்களை விற்பனை செய்ய வேண்டியது வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களது பொறுப்பாகும். இந்த நிலையில் பொருள்களின் கால எல்லை முடிவடைந்த பின்னரும் விற்பனை நிலையங்களில் வைத்துப் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களும், அத்துடன் விற்பனை நிலையங்களில் பொருள்களின் விலை தொடர்பாக விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாத வர்த்தகர்களும் பாவனையாளர் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வருடம் ஜனவரி மாதத்தில் பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் 3 பேர் இனங்காணப்பட்டு அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும், பெப்ரவரி மாதத்தில் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் 18 பேர் இனங்காணப்பட்டு ஒரு லட்சத்து 14 ஆயிரம் ரூபாவும், மார்ச் மாதத்தில் பருத்தித்துறை, மல்லாகம் ஆகிய பிரதேசங்களில் 20 பேர் இனங்காணப்பட்டு 60 ஆயிரம் ரூபாவும், ஏப்ரல் மாதத்தில் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் ஒருவர் இனங்காணப்பட்டு 10 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதனைவிட இந்த மாதம் மல்லாகம், பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் இதுவரை 37 பேர் இனங்காணப்பட்டு 11 லட்சத்து 6 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. (வ-14)

# போக்குவரத்து வீதி மாற்றம்

## மந்திகையில் வீதி அகலிப்புக்காக



வடமராட்சி, மே 23

வீதி அகலிப்புப் பணிகளை மேற்கொள்ள வசதியாக மந்திகையில் போக்குவரத்து வீதி தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நெல்லியடி - பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணி மும்முரப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மந்திகையில் இருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியில் மந்திகை ஆஸ்பத்திரிச் சந்தி தொடக்கம் சிலையடிச் சந்தி வரையான வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதனூடாகப் பயணிக்கும் அனைத்து வாகனங்களும் மந்திகை ஆஸ்பத்திரிச் சந்தியில் இருந்து ஆஸ்பத்திரி வீதி, சாவகச்சேரி வீதி வழியாகச் சிலையடிச் சந்தி ஊடாக பருத்தித்துறை நோக்கிப் பயணிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி நோக்கிப் பயணிக்கும் அனைத்து வாகனங்களும் சிலையடிச் சந்தியில் இருந்து ஆஸ்பத்திரிச் சந்தி வரை அதே வீதி ஊடாக பயணிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

# உபவீதிகள் இணைக்கப்படாமையால் அதிகரிக்கும் விபத்துக்கள்

வலி.வடக்கு, மே 23

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான வீதியில் இருந்து பிரிந்து செல்லும் உப வீதிகள் உரிய முறையில் பிரதான வீதியுடன் இணைக்கப்படாமையால் வாகன விபத்துக்கள் அதிகம் ஏற்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.


காங்கேசன்துறை காப்பெற் வீதி அமைக்கும் பணியில் பிரதான வீதி உயர்த்தப்பட்டுள்ள போதிலும் உப வீதிகள் உரிய முறையில் சாய்வாக இணைக்கப்படாது காணப்படுகின்றன.

இதனால் ஒழுங்கைகளில் இருந்து வந்து பிரதான வீதியுடன் இணையும் வாகனங்கள் உயரமான பகுதிக்கு வேகமாக வந்து ஏறுவது மற்றும் தரித்து நின்று ஏற முடியாது போதல் போன்ற காரணங்களால் இத்தகைய விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பிரதான வீதிகளுடன், இணையும் ஒழுங்கை முகப்பு ஒழுங்கைகளுக்கும் உரிய முறையில் காப்பெற் போட்டு சீர்செய்யப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. (வ-86)

# பால் உற்பத்திப் பொருள் தயாரிக்கும் பணி ஆரம்பம்

## தென்மராட்சி கால்நடை கூ.ச.கட்டடத்தில்



தென்மராட்சி,மே 23

தென்மராட்சிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்கு கனடா நாட்டு உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் பால் உற்பத்திப் பொருள்கள் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவக்ச்சேரி செருக்கல்பதி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் அண்மையில் சங்க நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டதையடுத்து உற்பத்திப் பொருள்கள் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த சங்கத்துக்கு பிரதேச பண்ணையாளர்களால் வழங்கப்படும் பாலிலிருந்து பல்வேறு பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதேவேளை, சங்கத்தால் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிச் சிறார்களுக்குத் தினமும் பால் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

# யோகா பயிற்சி

யாழ்ப்பாணம்,மே 23

ஓம் பதஞ்சலி யோககேந்திரா யோகாசன பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் உடல், உள மேம்பாட்டுக்கான யோகாசனமும், தளர்வு பயிற்சிக்குமான




புதிய வகுப்புகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த வகுப்புகள் தொடர்ந்து பிரதி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6.15 மணிக்கு நடைபெறும். (வ-14)

# சுன்னாகம் மின்சார நிலைய பின்புறத்தில் தேங்கும் கழிவுநீர்

## விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

வலி.வடக்கு,மே 23

சுன்னாகம் மின்சார நிலைய பின்புறத்தில் தேங்கும் கழிவு நீரால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ள போதிலும் இதனையிட்டு உரிய அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென விசனம் தெரிவிக்கின்றனர்.



சுன்னாகம் மின்சார நிலையம் பொது மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ளது. இந்த நிலையில் நான்கு புறமும் மக்களின் குடியிருப்புகள் காணப்படும் நிலையில் சுகாதார நடவடிக்கைகளில் கூடியகவனம் எடுக்க வேண்டியதேவையும் அவசியமும் மின்சாரசபைக்கும் சுற்றுச்சுழல் அதிகாரிகள் பொது சுகாதார பரிசோதகர்கள் எனப் பலருக்கும் உண்டு.

குறிப்பாக மின்சார சபையின் மேற்குப் புறத்தில் உள்ள ரயில் பாதைக்கு அருகில் வாய்க்கால் வெட்டி பொதுமக்களின் குடிமனைகளுக்கு அருகில் கழிவு நீர் விடப்பட்டு வருகின்றது.

இதனால் குறித்த பகுதியில் வாய்க்காலில் கழிவு நீர், இரண்டு அடி வரை தேங்கிக் காணப்படுவதுடன் துர்நாற்றம் வீசுதல், நுளம்புகளின் பெருக்கம் என்பன அதிகரித்துள்ளன.

பற்றைகள் குறித்த கழிவு வாய்க்காலை மூடி வளர்ந்துள்ளமையால் பாதசாரிகள் விழக்கூடிய நிலைமையும் கூட காணப்படுகின்றது. எனவே இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-86)

# உடைந்த மதகின் சுவர் புனரமைப்பு

வடமராட்சி,மே 23

மந்திகை சாவகச்சேரி வீதியில் உள்ள மதகின் உடைந்திருந்த பாதுகாப்புச் சுவர் மீண்டும் சில வருட கால இடைவெளிக்குப் பின்னர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பொதுச்சந்தைக்கு அருகில் போக்குவரத்து நிறைந்துள்ள சாவகச்சேரி வீதியில் இருந்த மதகு ஒன்றின் இரு பக்க பாதுகாப்புச் சுவர்கள் வாகனங்களால் மோதுண்டு பல வருடங்களாகியும் உடைந்த நிலையில் காணப்பட்டன.

தற்போது வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் உடைந்த இருபக்க பாதுகாப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டு வெள்ளை நிறப்பூச்சும் பூசப்பட்டுள்ளதால் அந்த இடத்தில் மதகு ஒன்று இருப்பதை வாகனச் சாரதிகள் இலேசாக இனங்காண முடிகிறது. (வ-86)

# விரைவில் மின்விநியோகம் பூம்புகாருக்கு



யாழ்ப்பாணம், மே 23

அரியாலை கிழக்கு பூம்புகார் பிரதேசத்துக்கு விரைவில் மின்சார இணைப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தப் பிரதேச மக்களுக்கான மின்விநியோகம் வழங்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.இரவிந்திரதாசன் தெரிவித்தார்.

மின் விநியோகத்துக்கான இணைப்பை வழங்குவதற்கு முன்னோடியாக அந்தப் பகுதிக்கு புதிதாக மின்கம்பங்கள் விரைவில் நடப்படவுள்ளன.

இதேவேளை அரியாலை நாவலடி பிரதேசத்தைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கு இலவச மின்விநியோகத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி மக்களுக்கு மின் விநியோகத்தை ஏற்படுத்தும் முகமாக மின்சார இணைப்பு பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் உரிமைப் போராட்டத்தில் கைகோர்த்து களத்தில் குதிப்பேன்

## கனேடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா தெரிவிப்பு



கனேடிய சட்டங்களுக்கு அமைவாக தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்துடன் தாம் கரங்கோத்து களத்தில் நிற்பார் என கனேடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ சுதந்திர சாசன முரசறைவினை முதன்மையாகக் கொண்டு நாடுகடந்த தமிழீழ அரசால் கனேடிய மண்ணில் மேற்கொள்ளப்பட்டிருந்த மே 18 தமிழீழத் தேசிய துக்க நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே இந்தக் கருத்தினை அவர் முன்வைத்துள்ளார்.

தமிழ்மக்களின் சுதந்திரத்துக்காகப் போராடியோரையும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களையும் இழந்த துக்க நாள் இதுவென குறிப்பிட்ட ராதிகா சிற்சபைஈசன் எம்.பி., கனடாவின் 307 நாடாளுமன்ற உறுப்பினர்களில் தன்னையும் ஒருவராக மக்கள் தெரிவு செய்துள்ளனர் என்றும் கனேடிய சட்ட திட்டங்களுக்கு அமைய தானும் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தில் கைகோத்து நின்று ஒத்துழைப்பார் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து தனது என்.டி.பி கட்சித் தலைவர் தோமஸ் மல்கெயார் அவர்கள் தமிழீழத் தேசிய துக்க நாளுக்கு வழங்கிய செய்தியை நிகழ் வரங்கில் வாசித்திருந்தார்.

''இலங்கை இராணுவத்தினர் சிறிய நிலப் பரப்பினுள் வைத்து தமிழ் மக்களை கொன்றொழித்துள்ளனர். அதனால் உங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும், சோகத்தினையும் நான் நன்கறிவேன். பொது மக்கள் கொல்லப்பட்டதை நாம் எதிர்க்கின்றோம். அதுபற்றி சர்வதேச ரீதியில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என நாம் வலியுறுத்தி வருகின்றோம். இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கனடா கலந்து கொள்ளக் கூடாது என நாம் வலியுறுத்தி வருகின்றோம்.''
– இப்படி என்.டி.பி கட்சித் தலைவர் தோமஸ் மல் கெயார் அவர்களது செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் நான்காம் ஆண்டு பெருவலியினை சுமந்து கூட்டுநினைவாக அமைந்திருந்த இந்நிகழ்வில் லிபரல் கட்சிப் பிரதிநிதி எடுவார்டோ ஹராறி கனடாவிலுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை விவகாரத்துக்கான பிரதிநிதி ஜோன் ஆகியூ, ஈழவேந்தன் ஐயா, ரொறொன்ரோ மாநகர சபை உறுப்பினர் கலாநிதி றேமன்ட் சோ ஆகிய சிறப்பு பிரதிநிதிகளும் உரைகளை வழங்கியிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நினைவுகளை மீட்டி உரையாற்றிய நாடு கடந்த தமிழீழ அரசின் கலை, கலாசார தொன்மைகள் பிரதி அமைச்சரின் மகாலிங்கம்,

ஒரு நாட்டின் நல்லாட்சிக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துப் பரிந்துரைகளும் மனித உரிமைகளும் தமிழீழ அரசமைப்பில் உள்வாங்கப்படும் என்பதனையே தமிழீழ சுதந்திர சாசனம் முரசறைந்து நிற்கின்றது – என்று தெரிவித்தார்.

லண்டனில் இருந்து சிறப்பு விருந்தினராக நிகழ்வில் கலந்து கொண்டிருந்த நாடு கடந்த தமிழீழ அரசின் பெண்கள், சிறுவர்கள், முதியோர் நலன்பேணல் அமைச்சர் பாலாம்பிகை முருகதாஸ், ஈழத் தமிழர்களின் உடனடிப் பாதுகாப்புக்கு சர்வதேச பாதுகாப்புப் பொறி முறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம் என வலியுறுத்தி உரையாற்றிருந்தார்.

எழுச்சி நடனங்களுடன் இடம்பெற்றிருந்த இந்த நிகழ்வை கனேடிய தமிழ் காங்கிரஸின் பேச்சாளர் பூபாலபிள்ளை, ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் போட்டியிடவுள்ள கென் கிருபா, முன்னாள் வேட்பாளர் சான் தயாபரன், இராஜரட்ணம், சொர்ணலிங் கம் ஆகிய பிரதிநிதிகளும் பங்கெடுத்து வலு வூட்டியிருந்தனர்.

**மாபெரும் தங்கநகை ஏலவிற்பனை**

செலான் வங்கியின் ஒரு வருட, 6 மாத, 3 மாத கால அடிப்படையில் அடகு வைக்கப்பட்டு உரிய காலத்தில் மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க நகைகள் யாவும் எதிர்வரும் 01.06.2013 சனிக்கிழமை காலை 9 மணி முதல் அடகு வைக்கப்பட்ட பின்வரும் கிளைகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

(யாழ்ப்பாணம் - (சங்கானை, மானிப்பாய் உள்ளடங்கலாக) மற்றும் நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா)

SEYLAN BANK PLC

- வட பிராந்திய முகாமையாளர். **செலான் வங்கி.** (C/9471)(2.6)

# முஸ்லிம் கட்சிகள் இணைந்து மரத்தில் கேட்பதே சாத்தியம்

## வடக்குத் தேர்தல் குறித்து ஹஸன் அலி

கொழும்பு,மே 22

முஸ்லிம் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதில் நாம் கூடிய கவனத்துடன் செயற்படுகின்றோம். இந்த நிலையில் இணக்கப்பாட்டுடன் கூடிய கட்சிகளுடன் இணைந்து தேர்தல் களத்தில் போட்டியிடுவது குறித்து ஆலோசித்து வருகிறோம். இணைவதாக இருந்தால் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து மரத்தில் கேட்பதே சாத்தியமென எண்ணுகிறோம். இவ்வாறுமுஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹஸன் அலி தெரி வித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் வன்னி மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் இடம்பெற்றது. அது குறித்து விளக்கம் அளிக்கையிலேயே ஹஸன் அலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெற்ற கட்சிக் கலந்துரையாடலில் வடக்குத் தேர்தல் குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக வாக்குச் சிதறல்களைத் தடுப்பது தொடர்பாக கலந்து ஆலோசிக்கப்பட்டது. இதில் இணக்கப்பட்டுடன் கூடிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அரச கட்சியுடன் இணைவதா அல்லது கூட்டமைப்புடன் இணைவதா என்பது குறித்து பேசி வருகின்றோம். இணைவதாக இருந்தால் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து மரத்தில் போட்டியிடு வதே சாத்தியம் என எண்ணுகின்றேன்- என்றார்.

(த-ரி)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ். நகரில் A9 வீதியில் தண்ணீர் தாங்கிக்கருகில் சிறிய குடும்பம் அல்லது இருவருக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு உண்டு. மற்றும் C90 சுப்பர்கப் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

(36759) தொடர்பு: 0779672688

**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு - 23.05.1925

உதிர்வு - 23.05.2011



திருமதி
**சதாசிவம் ஐயர் சுப்புலட்சுமி அம்மா**

மகன்
கொக்குவில் மேற்கு. (36710)(5.6) ச.பாலசந்திரசர்மா

**பத்தாம் ஆண்டு நினைவலைகள்**



தோற்றம்
31 ✩ 05 ✩ 1940

மறைவு
26 ✩ 05 ✩ 2003

அமரர் **மாணிக்கசாமி வைத்தீஸ்வரன்**

(ஓய்வு பெற்ற காணிப்பதிவாளர்-யாழ்.மாவட்டம்)

தாளாத அன்பினிலே தரணியை வென்றீர்
தரணியிலே நாமுயர துணையாய் நின்றீர்
புன்னகையில் இன்மொழிகள் இசையாய் பூத்தீர்
இன்னிசையில் பழமொழிகள் புன்னகை பூத்தீர்

கபடமில்லா பேச்சினிலே மனதை ஈர்த்தீர்
சுரம் நழுவா இசையினிலே மயக்கம் செய்தீர்
பிசிரற்ற மொழியறிவில் உவகை தந்தீர்
இவையாவும் ஒருங்கிணைய உலகை வென்றீர்

புயலுக்கு தலை சாய்க்கும் நாணல் இல்லை
துன்பத்தை கண்டு நீர் துவண்டதில்லை
ஆண்டுகள் பத்து உருண்டாலும் கூட
ஆழ் மன நினைவலைகள் ஓய்வதுமில்லை
நெஞ்ச சுவடுகளில் நீர் வாழுகின்றீர்
தூயவரே உம் உருவம் என்றும் அழியாதே

அன்னாரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

[36703](6)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
ads@uthayan.com
0215671111

**மூன்றாம் ஆண்டு நினைவு**



மலர்வு
10.01.1940

உதிர்வு
26.05.2010

திதி
23.05.2013

அமரர் **தனபாலசிங்கம் பரமேஸ்வரி**

ஆண்டு மூன்று ஆகிவிட்டபோதிலும் ஆறிடா தோன்றும் வேதனை நெஞ்சம்
தேறிடுமோ தேறிடுமோ உனைப்பிரிந்து மாறிட மாறிடா மயக்கம் வாழ்வுற்றதே-அம்மா
மார்பெடுத்து மறுநெஞ்சம் கொண்டாலும் வீழ்வதில்லை உங்கள் ஆத்மா எமைவிட்டு
நீர்கொடுத்த மேகம், நிழல் நீங்கி சென்றாலும் பார் படைத்தாய் பசுமை கண்டாய்
வேர்விடுத்து விருட்சமாய் பரந்த உன் மட்கள் பூமலர்ந்து பூவுலகாய் உனைக்காட்டும்
ஓர் ஆசை ஒருங்கிணைந்து உனக்காக காலம் கருவுரும் அம்மா.....
பரம ஈஸ்வரியே! பாசமிகு தாயே! ஆராதிக்கின்றோம் அன்பு செய்கின்றோம்.

அல்வாய் வடக்கு,
பருத்தித்துறை.

பிரிவால் துயருறும்:
கணவர்,பிள்ளைகள்.

(36721)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' குறித்த அரசின் நிலைப்பாட்டை உடனடியாக அறிவிக்க வேண்டும்

## ஐ.தே.க. பிரதித் தவிசாளர் வேலாயுதம் வலியுறுத்து

கொழும்பு,மே 23
தேசிய இனப் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதற்கு தயார் என்று இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ள நிலையில், அரசின் பங்காளிக் கட்சிகள் சில இன்று 13 ஐ ஒழிப்பதற்கு துடிக்கின்றன.
எனவே, '13'குறித்து அரசின் உண்மையான நிலைப்பாடு என்ன என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு உடன் தெரியப்படுத்த வேண்டும்.
- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தவிசாளரும், ஊவா மாகாண சபை உறுப்பினருமான கே.வேலாயுதம் வலியுறுத்தியுள்ளார்.
நாட்டில் தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ள அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணும் நோக்கில், சிறுபான்மை மக்களுக்கும்அரசியல்அதிகாரங்களை பகிரும் நோக்கில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது.
ஏனைய மாகாணங்கள் இயங்குகின்றபோதிலும்வடக்குமாகாண சபை இன்னும் இயங்கவில்லை. யாருக்காக மாகாண சபை ஏற்படுத்தப்பட்டதோ அந்த மக்களுக்கு அதன் நன்மை இன்னும் சென்றடையவில்லை.
இந்தநிலையில், அரசமைப்பிலிருந்து '13' ஐ நீக்குமாறு அமைச்சர்களான விமல் வீரவன்ச, ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க உள்ளிட்டோர் இனவாதத்தை கக்குகின்றனர். அதுமட்டுமின்றி, '13' ஐ ஒழிப்பதற்கு பிரேரணையொன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஹெல உறுமயவின் தலைவர் தெரிவித்துள்ளார்.
தேசிய இனப்பிரச்சினைக்கு '13' இற்கு அப்பால் சென்று தீர்வை வழங்கத் தயார் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ள நிலையில், அவர் தலைமையிலான அரசின் பங்காளிக் கட்சிகள் சில '13' இற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளன.-என்றார். (ச)



## சவூதியிலுள்ள இலங்கையருக்கு தற்காலிகக் கடவுச்சீட்டுக்கள்

கொழும்பு,மே 23
பொது மன்னிப்பின் கீழ் சவூதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பவிருக்கும் இலங்கையருக்கு தற்காலிக கடவுச்சீட்டுக்களை வழங்க சவூதியில் உள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.
சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு சவூதி அரசு பொது மன்னிப்பு வழங்கியதுடன், அந்த நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக சவூதி தொழில் அமைச்சு கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி முதல் எதிர்வரும் ஜுலை 3 ஆம் திகதி வரை கால அவகாசமும் வழங்கியுள்ளது.
அதற்கமைய சவூதியிலிருந்து நாடு திரும்பவிருக்கும் சுமார் 300 இலங்கையருக்கு தற்காலிக கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்கு ரியாத் நகரிலுள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.(ச)




## போர் நிறைவடைந்த போதும் இலங்கையில் சுதந்திரமில்லை

### மக்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்கிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு,மே 23
போர் நிறைவடைந்த நான்கு வருடங்களில் இலங்கையில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கான மதிப்பு குறைவடைந்துள்ளது.
இவ்வாறு நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.
போர் நிறைவடைந்ததன் பின்னர் மனித உரிமை மீறல்கள், ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதான அழுத்தங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசு விசாரணைகளை முன்னெடுக்கவில்லை என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.
அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
தமிழ் மக்களின் தேவைகளுக்காக உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசின் தலையீடு போதுமானதாக இருக்கவில்லை.
மனித உரிமை மீறல்கள், காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெறுவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நியாயம் வழங்கப்படவில்லை.
நாட்டில் அடிப்படை உரிமைகளுக்கான மதிப்பு குறைவடைந்துள்ளது.
பயங்கரவாத தடுப்பு சட்டம், நபர்களை தடுத்து வைப்பதற்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது.
அடக்குமுறைகள் மூலமாக அடிப்படை சுதந்திரத்தை மட்டுப்படுத்த முடியும் என்று அரசு எதிர்பார்க்கிறது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**மனித உரிமை மீறல்கள், காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெறுவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நியாயம் வழங்கப்படவில்லை.**



ருஹுணு கலைக் குடும்பத்தின் புதிய இணையத்தளத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்குரார்ப்பணம் செய்துவைத்தபோது...

## இளைஞர் நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் இன்று

கொழும்பு,மே 23
இரண்டாவது இளைஞர் நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் இன்று வியாழக்கிழமை மஹரகமை தேசிய இளைஞர்கள் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
இந்தநிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறும் என்று இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.
அமைதியான முறையில் நடைபெற்ற இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலில் 547 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அவர்களுள் 138 பேர் போட்டியின்றியே தெரிவு செய்யப்பட்டனர்.
இதேவேளை இளைஞர் நாடாளுமன்றத்துக்கு இந்த முறை பெண் உறுப்பினர்கள் 44 பேர் தெரிவாகியுள்ளனர். முஸ்லிம் உறுப்பினர்கள் 26பேரும், தமிழ் உறுப்பினர்கள் 48 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ச)

## நச்சுப் பொருள்கள் பால்மாவில் இல்லை

### உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது

கொழும்பு, மே 23
இறக்குமதி செய்யப்படும் பால் மாவில்நச்சுப்பொருள்கள்இல்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.
மனித உடலுக்கு தீங்கு ஏற்படுத்தக் கூடிய வகையிலான இரசாயன பதார்த்தங்கள் பால் மாவில்அடங்கியுள்ளனவா என்பது குறித்து அறிய பரிசோதனை நடத்தப்பட்டது. இதன்போது இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால் மா உற்பத்திகளில் மனித உடலுக்கு தீங்கு ஏற்படக் கூடிய நச்சுப்பொருள்கள் இல்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (ச)

## தற்போதும் தொடர்கிறது பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்பும் நடவடிக்கை

### வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தகவல்

கொழும்பு,மே 23
போலியான தகவல்களைவழங்கி தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு பெண்களை அனுப்பும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றனஎன்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.
போலியான தகவல்களை வழங்கி வெளிநாடு செல்வதற்கு முயற்சித்த பலர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பணியகத்தின் பிரதி இணைப்பதிகாரி மங்கள ரந்தெனிய தெரிவித்தார்.
பணிப்பெண்கள் தவிர்ந்த வேறு தொழில்களுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.
போலியான தகவல்களைத் தயாரிக்கும் முகவர் நிலையங்கள் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
எனவே, இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இயன்ற வரை தடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

**வெளிநாடு செல்வதற்கு முயற்சித்த பலர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர்**

## 100 பெண் கைதிகள் வேறு சிறைச்சாலைக்கு

கொழும்பு,மே 23
கொழும்பு – வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக் கப்பட்டிருந்த சுமார் 100 கைதிகள் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை அமைச்சின் செயலர் ஜி.எஸ்.விதானகே தெரிவித்தார்.
சிறைச்சாலை நிர்வாக வசதிகளைக் கருத்திற்கொண்டே அவர்கள் மாற்றப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.
போதைப்பொருள் விற்பனை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பலர் வெலிக்கடை சிறைச்சாலையின் மகளிர் தடுப்புப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.
அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்கள், குறித்த பிரிவினை சோதனையிடுவதற்கு அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்காமல் அண்மையில் எதிர்ப்பை வெளியிட்டனர் என்று சிறைச்சாலையின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.
அதிக எண்ணிக்கையிலான கைதிகள் குறித்த சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களே ஒன்றிணைவோம்



புதியவன்

நாட்டில் உள்ள இளைஞர்களை ஒன்றிணைத்து அவர்களை செயற்றிறன் மிக்கவர்களாக உருவாக்குவதே இளைஞர் சம்மேளனத்தின் நோக்கமாகும். 2013 ஆம் ஆண்டு நவோதயத்தின் கீழ் சகல கிராம அலுவலர் மட்டத்திலும் இளைஞர் கழகமொன்று அவசியம் எனும் எண்ணக் கருவைக் கொண்டு நாடு முழுவதும் இளைஞர் கழகங்கள் அமைக்கப் படவுள்ளன. இளைஞர் கழகத்தில் 13-29 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் இணைந்து கொள்ளலாம். 20 பேருக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் இளைஞர் கழகம் ஒன்றை உருவாக்க முடியும்.

விளையாட்டு, கலாசாரம் மற்றும் கல்வி வேலைத்திட்டங்களுக்காக இளைஞர்கள் பங்களிப்பை பெற்றுக்கொடுத்து, தலைமைத் துவ ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர் முகாம் செயற்றிட்டம் மேற்கொள் ளப்படுகின்றன.

மாற்றுத்திறனுடைய இளைஞர் பிரிவினரை குழுமங்களாக்கி அவர்களின் திறமைகளையும் , ஆற்றல்களையும் விருத்தி செய்வதற்கு 'திரிய சவிய' என்ற மாற்றுத் திறனுடையோர் அபிவிருத்தி வேலைத் திட்டம் உதவி புரிகிறது.

மாற்றுத் திற்னாளிகளின் திறமையின் மூலமாக சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு நல்கும் வகையில் பயிற்சிச் செயலமர்வு, மதிப்பீட்டு வேலைத்திட்டம், கண்காட்சி மற்றும் விருது வழங்கல் என்பவற்றினை இந்தத் திட்டம் செயற்படுத்துகின்றது.

இளைஞர் சமூகத்தினரை தர்ம வழியிலான வாழ்க்கைக்கு ஈடுபடுத்துவதன் மூலம் சிறந்த இளைஞர் சமூகத்தை நாட்டில் உருவாக்க இளைஞருக்கான ஆன்மிக சிந்தனை வேலைத் திட்டம் உதவுகிறது.

பல்வேறு இனங்கள் மற்றும் சமயங்களுக்கிடையில் புரிந்துணர்வு நட்புறவினை இளம் சமூகத்தினர் மத்தியில் இதன் பிரதான நோக்கமாகும்.

**விளையாட்டு, கலாசாரம் மற்றும் கல்வி வேலைத்திட்டங்களுக்காக இளைஞர்கள் பங்களிப்பை பெற்றுக்கொடுத்து, தலைமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர் முகாம் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றன.**

*மே 23 தேசிய இளைஞர் தினமாகும்*

தேசிய விளையாட்டுக் குழுவின் கீழ் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கபடி, ஜூடோ போன்ற விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன. அத்துடன் இங்கு தொழில் ரீதியான விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்கில் வதிவிடப் பயிற்சிப் பாடநெறிகளும் நடைபெறுகின்றன.

இன்று இலங்கையின் இளைஞர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சகல இனம், மதங்களையும் பிரதிபலிக்குமாறு சிவப்பு, ஊதா, நீலம், மஞ்சள், பச்சை ஆகிய நிறங்களினால் இளைஞர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளமாக சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

கல்வி அபிவிருத்திப் பிரிவின் கீழ் இளைஞர் தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைபெறுகின்றது. இதனுள் சுயதொழில் முயற்சி உபாய வழிமுறைகள், (SEPI) தொழில் கல்விப் பாடநெறிகள், மிகச்சிறந்த இளைஞர், இளைஞர் சேவை பல்கலைக்கழகம் , யூத் சலூன் போன்ற வேலைத்திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படுகின்றன.

இளைஞர் சேவை நிறுவனமாக இளைஞர் சேவை அச்சகம், இளைஞர் சேவை பாதுகாப்புப் பிரிவு, இளைஞர் சேவை சுத்திகரிப்புப் பிரிவு, இளைஞர் சேவை சிற்றுண்டிச்சாலை என்பன இயங்குகின்றன.

தேசிய இளைஞர்கள் சேவை மன்றம் தொடர்பாக யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஈஸ்வரராஜாவிடம் கேட்டபோது,

யாழ்ப்பாணத்தில் உள்ள 13-29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இளைஞர் மாநாடு கூட்டி எதிர்காலத்தில் பல வேலைத்திட்டம், தொழில் முயற்சிகள் போன்றவற்றை செய்யவுள்ளோம். இந்த மன்றத்தின் ஊடாக பல செயற்றிட்டங்கள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இளைஞர் நாடாளுமன்ற வேலைத்திட்டம், 25 ஆவது தேசிய இளைஞர்களுக்கான விளையாட்டு விழா என்பவற்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் தொழிற் பயிற்சி நிலையம். அமைத்தல் உதாரணமாக தையல், அழகுக்கலை, கணினி, தச்சு, மேசன் போன்ற சுய தொழில் வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன் கிளை நிறுவனமாக நெஸ்கோ இயங்குகின்றது. இதன் மூலமாகவும் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். அதுமட்டுமன்றி யாழில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் பல கழகங்களை நிறுவியுள் ளோம். நல்லூர் -43, யாழ்ப்பாணம்-32, உடுவில்-37, சண்டிலிப்பாய்-70, சங்கானை-30, நெடுந்தீவு-10, தெல்லிப்பழை-35, ஊர்காவற்றுறை-20, வேலணை-18, காரைநகர்- 12, மருதங்கேணி-25, பருத்தித்துறை -37, கரவெட்டி-42, கோப்பாய்-40, சாவகச்சேரி-60 என்ற கணக்கில் பிரதேச செயலர் பிரிவினூடாக கழகங்கள் அமைத்து இளைஞர் களுக்கு பல சேவை ஆற்றிவருகிறோம் என்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இளைஞர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கத் தேசிய இளைஞர்கள் சேவை மன்றங்கள் தமது சேவையை மென்மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# அற்புதங்களால் அருளாட்சி செய்யும் புத்தூர் காரைக்கூடல் வைரவர்

ஞானி

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*



வரலாற்று சிறப்பு மிக்கதும் காலத்தால் தொன்மையானதுமான புத்தூர் காரைக்கூடல் ஸ்ரீவைரவர் ஆலயம், யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்ல ஈழத்தில் உள்ள புராதனமான ஆலயங்களில் ஒன்று. வரலாற்று நிகழ்வுகளோடு தொடர்பு கொண்டு தனித்துவத்தோடு விளங்கும் இது யாழ்ப்பாண தனியரசு கோலோச்சிய காலத்தில் சிறந்த வழிபாட்டு இடங்களில் ஒன்றாக விளங்கியது.

ஆலமரமும் காரை மரமும் ஒன்றோடு ஒன்று பிணைந்து ஓங்கி உயர்ந்து வளர்ந்து இயற்கைச் சூழலில் கல்லால் உயர் பீடம் அமைத்து அதில் வைரவரை பிரதிஷ்டை செய்து மக்கள் வைரவரை தமது குல தெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபட்டனர். காரைக் வைரவர் வேண்டுவதை நல்விருப்போடு வேண்டியோருக்கு அருளுவதோடு அடியவர்களுக்குக் காட்சி கொடுத்தும் நள்ளிரவில் நடமாடும் ஒலி எழுப்பியும் நாயோடு நடமாடியும் அற்புதங்கள் மூலம் அருளாட்சி செய்கின்றார்.

அந்நியரின் ஆட்சிக்காலத்தில் சைவாலயங்கள் இடித்து அழிக்கப்பட்டதோடு அதன் அழிபாடுகள் அந்நியரின் கோட்டை- கொத்தள கட்டுமானங்களுக்கும் கிறிஸ்தவ தேவாலய கட்டுமானங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன.

அந்த வகையில் காரைக்கூடல் வைரவரின் பூர்வீக ஆலயம் அழிக்கப்பட்ட போதிலும் அன்று வைரவர் கோயில் கொண்ட ஆலும்-காணியும் இணைந்து உயர்ந்த மரம் மற்றும் வேம்பு என்பன இன்றும் காணப்படுகின்றன. தலவிருட்சமாகவும் வும் உள்ளன.

வைரவருக்கு பொங்கல் மடை வைத்து மக்கள் தமது இயல்புக்கு ஏற்ப வழிபட்டதுண்டு. காரைக்கூடல் வைரவர் கோயிலின் பரம்பரை உரிமையாளர்கள் வாழ்ந்த இராக்கல்குடியிருப்பு வில்வமரம் சூழ்ந்தது. வில்வம் இலை சிவபூசைக்கு ஏற்றது. சிவனை அர்ச்சிப்பதற்கு ஏற்றது. சிவனுக்கு உரியது எனக் கொள்ளப்படுவது. அந்தவகையில் சிவனின் 36 ஆவது முகூர்த்தமாகிய வைரவருக்கும் ஏற்றது. இராக்கல் குடியிருப்பில் இருந்து வில்வம் இலை [illegible] பாளத்தில் பொங்கல் படைத்து தூய வெண் துணியால் மூடி, தேவாரப் பாடல்கள் முழங்க ஊர்வலமாக எடுத்துவந்து வைரவருக்கு நிவேதனம் செய்யும் வழக்கம் இருந்தது. அத்துடன் ஆடு, கோழி பலியிடும் வழக்கமும் இருந்தது. இராக்கல் குடியிருப்பு புத்தூர்-சுன்னாகம் வீதியில் புத்தூர் மேற்கில் உள்ளது.

ஆலயத்துக்கு தர்மசாதனம் செய்யப்பட்ட 42 பரப்புக்களைக்கொண்ட விசாலமான காணியின் மத்தியில் மூடுமண்டபத்தைக் கொண்ட உட்பிரகாரத்துடன் ஆலயம் அமைந்துள்ளது.

1932 ஆம் ஆண்டு வைரவருக்கு முதலாவது குட முழுக்கு விழா நடைபெற்றது. 1960 ஆம் ஆண்டு வைரவருக்குரிய திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது வைரவரை வெளிவீதி திருவுலா கொண்டு வருவதற்கு இரும்புச் சில்லுடன் கூடிய 'சகடை'யும் செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் திருப்பணி வேலைகள் முடிவடைந்ததை அடுத்து மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. புதிய சித்திரத்தேர் திருப்பணி நிறைவு செய்யப்பட்டு 2008.03.31 சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. இந்த வருடம் 2013.03.29 மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

காரைக்கூடல் சாமுண்டேஸ்வரி சமேத வைரவப் பெருமானுக்கு பெருமளவில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆலயத்திருப்பணிக்கு பிரான்ஸில் வசிக்கும் அறங்காவலர் கனகசபை திருச்சிற்றம்பலம் அவர்களும் அவரின் குடும்பத்தினரும் பெருமளவு நிதியை வழங்கி வருவதோடு புலம்பெயர் உறவுகளும் உள்ளூர் பொது மக்களும் தாராளமாக நிதி உதவி வழங்கி வருகின்றனர்.

தற்பொழுது ஓய்வு பெற்ற ஆசிரியர் சுப்பிரமணியம் மழுவராயர் (வயது-80) ஆலயப் பரிபாலனம் மற்றும் திருப்பணி வேலைகளை முன்நின்று மேற்கொண்டு வருகின்றார். பல லட்சம் ரூபா செலவில் இந்தியாவில் (மாமல்லபுரத்தில்) கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிவலிங்கம், ஸ்ரீகணேசர், நந்தி, ஸ்ரீகருமாரியம்மன், பலிபீடங்கள், துவாரபாலகர்கள் உட்படப் பத்து உருவங்கள் எடுத்துவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதோடு உட்பிரகாரத்தில் சிவன் கோயில் கட்டுமானப் பணியும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. விசாலமான தீர்த்தக் கேணியும் அமைக்கப்பட்டு வருகின்றது.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சிப் பலன்கள்

■ மீனாம் எம்.பி.ராமன்



## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 பாதங்கள், திருவாதிரை புனர்பூசம் 1, 2, 3, பாதங்கள்)

பொதுப்பலன்

குருபகவான் 27.5.2013 முதல் புதன் பகவானை அதிபதியாகக் கொண்ட உங்கள் மிதுன ராசிக்கு ஜென்ம குருவாக சஞ்சரித்து வேண்டிய அனைத்தையும் வாரி வழங்கவுள்ளார். அதை பயன்படுத்திக் கொள்வதும், கொள்ளாததும் உங்கள் கையில் தான் இருக்கிறது. இந்த ராசியில் பிறந்தவர்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குபவராக இருப்பார்கள். தனக்கு ஒரு துன்பம் வந்தாலும் அடுத்தவருக்கு ஏதேனும் உதவ வேண்டும் என எண்ணம் கொண்டவராக இருப்பார்கள்.

பகட்டு, ஆடம்பரம், பந்தா இவர்களிடம் துளியும் இருக்காது. அடுத்தவர்களின் பேச்சுக்கு அவ்வளவு சீக்கிரம் மயங்கி விட மாட்டார்கள். ஆனாலும் அவரின் பேச்சுக்கு அடுத்தவர்களை மயங்க வைத்து விடுவார்கள். குடும்பத்தில் அனைவிடமும் அன்பு செலுத்துவார். அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து உடனடியாக நிவர்த்தி செய்து வைத்து விடுவார்.

பிள்ளைகளின் கல்விமேல் அக்கறை செலுத்துபவராக இருப்பார். கணவன், மனைவிக்கிடையே ஏற்படும் சிறு சிறு பூசல்களை நயமாகப் பேசி சரி செய்து கொள்வார்கள்.

அரசியலில் அதிகம் நாட்மில்லா விட்டாலும் அன்றாட நிகழ்ச்சிகளை உற்று நோக்குவார்கள். எது சரி, எது தவறு என்று ஆராய்ந்து மற்றவர்களுக்கு சொல்லுவார். அடுத்தவர்கள் தன் அறிவுரையை கேட்டு நடந்து கொள்ள வேண்டும் என எண்ணுவது இவரது இயல்பு குணமாக இருக்கும். அதை மாற்ற யாராலும் முடியாது. இவரைப் பற்றித் தெரிந்தவர்களும் எதற்கு வம்பு என்று ஆமாம் போட்டு விட்டு சென்று விடுவார்கள்.

தொழிலில் மிகுந்த அக்கறை காட்டுவார்கள். ஒன்றைப் பத்தாக்கும் சூட்சுமம் கற்றவர்களாக இருப்பார்கள். எந்தெந்த தொழில் தற்போது இலாபத்தை அள்ளித்தரும் என்பதை விரல் நுனியில் வைத்திருந்தாலும் சிறந்து விளங்கும் தொழில் அதிபர்களிடம் பலமுறை ஆலோசனை செய்ய தயங்க மாட்டார்கள். அதற்காக எவ்வளவு முதலீடு செய்யவும் சுணக்கம் காட்ட மாட்டார்கள்.

திருமண விஷயத்தில் பெரும்பாலும் நல்ல துணையே மனைவியாக அமையும். பெற்றோர்களின் விரும்பத்துக்கேற்ற படியே நடந்து கொள்வார்கள். அவர்களின் ஆசைகளை கேட்டறிந்து தேவைகளை நிறைவேற்றித் தருவார்கள். பெற்றோர்களின் ஆசியும் இவர்களுக்கு பூரணமாக அமைந்திருக்கும்.

பிள்ளைகளுக்கு திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடந்தேறும். பிரிந்திருந்த உறவினர்கள் ஒன்று சேருவார்கள். அதன் மூலம் குடும்பத்தில் மகிழ்சியும், உற்சாகமும் அதிகமாகும். திடீர் வெளிநாடு பயணம் மேற்கொள்ள நேரிடும். தவிர்க்க இயலாது. அதனால் நல்ல பயன்கள் கிட்டும். சகோதர சகோதரிகள் உதவிகள் கிடைக்கப் பெறுவார்கள். அவர்களிடம் நிலவி வரும் விநோத போக்கை கைவிட்டு சுமுகமாக நடந்து கொள்வது அவசியம். குடும்பத்துடன் குல தெய்வ வழிபாடு செய்து வருவது நல்லது மட்டுமல்ல அவசியமாகவும் இருக்கிறது. உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் கருணைப் பார்வையால் பல நல்ல செய்திகள் வரும்.

குருபகவான் அருளைப் பெற வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து, அவருக்குரிய காயத்ரி மந்திரத்தை உச்சரித்து பக்தியுடன் வணங்கி வர வேண்டும். முதலில் விநாயகப் பெருமானையும் பின் குரு பகவானையும் பிறமு உங்கள் ராசிக்கு அதிபதியான புதன் பகவானையும் வணங்க வேண்டும்.

**பெண்களுக்கு**

எந்தப் பிரச்சினைகளையும் சுமுகமாக தீர்த்துவைக்கும் மனம் படைத்தவர்களாக இருப்பார்கள். குடும்பத்தில் ஏற்படும் மகிழச்சிக்கு காரணமாக இருப்பார்கள். தொழிலில் அக்கறை செலுத்துவார்கள். பெற்றோர்களிடம் சின்னச்சின்ன மனத்தாங்கல் ஏற்பட வாய்ப்புண்டு. அலுவலகத்தில் சக ஊழியர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். வீண் விவாதங்களில் கலந்து கொள்ள வேண்டாம். உடல் நலன் மீது கவனம் செலுத்தவும்.

**மாணவ-மாணவிகளுக்கு**

படிப்பில் முழு கவனம் செலுத்த வேண்டும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்கான வழிகளை ஆராய வேண்டும். ஆசிரியர்களின் பாராட்டுக் கிடைக்கும். கெட்ட நண்பர்களின் சகவாசத்தை தள்ளி வையுங்கள். பெற்றோர்களிடமும் ஏற்படும் வீண் விவாதங்களை விடுவது நல்லது. மேற்படிப்புக்கான நிதி உதவி பெறும் வாய்ப்புள்ளது.

**27.05.2013 முதல் 9.6.2013**

இப்போது குருபகவான் மிருகசீரிடம், மூன்றாம் பாதம், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் பொதுப் பலனை வைத்துப் பார்க்கும் போது என்ன செய்தாவது பணக்காரர் ஆகிவிட வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். தவறான வழியை தேர்ந்தெடுத்து சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். நேர்மையாக சம்பாதிப்பதே தங்கும் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

உறவினர்களின் வருகை மகிழ்ச்சியை தருவதோடு, ஆதாயமும் கிடைக்கும் வாய்ப்புள்ளது. உஷாராகப் பயன்படுத்திக் கொள்ளப் பாருங்கள். வெளிநாட்டிலிருந்து வரும் செய்தி உற்சாகத்தையும் புதுத் தெம்பையும் உண்டாக்கும். அவ்வப் போது ஏற்படும் உடல் சோர்வுக்கு மருத்துவரிடம் சென்று வருவது நல்லது. பொருளாதாரம் சற்று உயர்ந்து காணப்படும்.

**10.6.2013 முதல் 24.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருகசீரிடம், நான்காம் பாதத்தில் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் பிள்ளைகளிடமிருந்து நல்ல செய்தி வரும். கண், கால் போன்றவற்றில் பாதகம் ஏற்பட்டு விலகும். பொருளாதாரம் நல்ல நிலையில் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்பட்டு நண்பர்களோடு பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது. கெட்ட சகவாசத்தை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் மேற்படிப்புக்கு அதிக தொகை தேவைப்படும். அதை சமாளிக்க சிரமப்படுவீர்கள்.

கணவன், மனைவி உறவில் இதுவரை இருந்து வந்த பகை விலகும். சுமுகமான உறவு ஏற்பட்டு உற்சாகம் உண்டாகும். நினைத்திருந்த இடமாற்றம் கிடைக்கப் பெறுவார்கள். அரசியல்வாதிகள் புதிய பொறுப்புகளுக்கு தேர்வு செய்யப்படுவார்கள். இதனால் சல நண்பர்களிடம் பாராட்டையும் புகழையும் அடைவார்கள்.

**25.6.2013 முதல் 8.7.2014 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், முதல் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக்காலக்கட்டத்தில் குரு உங்களை மகிழ்சியுடன் வைத்துக்கொள்ளப் போகிறார். வீட்டுக்குத் தேவையான அலங்காரப் பொருள்கள், புதிய வாகனம் வாங்குவீர்கள். மனைவி மற்றும் பிள்ளைகளுடனான உறவு மேலும் அதிகரிக்கும்.

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு, சம்பள உயர்வு ஏற்படும். பொருளாதாரம் உயர்ந்து காணப்படும். தொழில் சிறந்து விளங்கும். பிளாஸ்டிக் கண்ணாடி, அழகு சாதனப் பொருள்கள் நல்ல இலாபம் பெறும். பெற்றோர்களின் உடல் நிலை சற்றுப் பாதகம் ஏற்பட்டு குணமாகும். அதற்கான மருத்துவ செலவுக்கு தயங்கம் வேண்டாம்.

**9.7.2013 முதல் 26.8.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். பழைய கடன் சுமை குறையும். அடைவு வைத்தப் பொருள்கள் மீட்கப்படும். விவசாயத்துக்குத் தேவையான உபகரணப் பொருள்களை வாங்குவீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் உற்சாகம் ஏற்படும். கணவன் மனைவி உறவு மேலும் உற்சாகத்தைத் தரும். வெளிநாடு பயணம் மூலம் பொருள் சேரும். குடும்பத்தினருடன் பக்திப் பயணம் சென்று வருவது மனதுக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கும். கவனமாக பொருள்களைகையாளவும். எதிர்பாராத இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**27.8.2013 முதல் 16.9.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம், தனது சொந்த சாரத்தில் ஜென்ம ராசியில் சஞ்சரிப்பதால் இந்தக் காலக்கட்டத்தில் பொருளாதாரம் சற்று குறைந்து காணப்படும். தொழில் மந்தமாக இருந்தாலும் ஓரளவுக்கு இலாபம் இருந்து கொண்டிருக்கும். வரவுக்கும் செலவுக்கும் சரிசமமான சூழ்நிலையே நிலவும். கும்பத்தில் உற்சாகம் குறைந்து காணப்படும். தெரியாத நபர்களுக்கு மட்டுமல்ல தெரிந்த நபர்களுக்கு கூட சிபாரிசு கையெழுத்துப் போடாதீர்கள். பின்னால் சிக்கல் வரும் வாய்ப்பு உள்ளது. தொழிலாளர்கள் தம் கோரிக்கைகளை வைத்து போராடும் நிலை ஏற்படும். அதனால் பெரிதாக பயன் ஒன்றும் இருக்காது. நீங்கள் சந்திக்கச் செல்லும் நபர் மூலம் வீண் அலைச்சலை ஏற்படுத்தும், கோபத்தைக் கட்டுப்படுத்துவது மிக முக்கியம் தேவையில்லாத வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டாம்.

**17.9.2013 முதல் 18.10.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இராண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் உத்தியோகம் பார்ப்பவர்கள் தங்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். எனவே முன்னேவிட்டு பின்னே பேசுவதை தவிர்த்து விடுவது நல்லது. கலைஞர்களுக்கு போதிய வருமானம் வந்தாலும் கூட அதற்கான செலவும் தேடிவந்து நிற்கும். புதிய ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். கலைநிகழ்ச்சிகள் ஓரளவு கைகொடுக்கும். மாணவ மாணவிகள் கெட்ட நட்பினால் தடம் மாறும் சூழ்நிலை ஏற்பட்டு படிப்பில் கவனம் குறையலாம். எனவே மிகுந்த எச்சரிக்கை தேவை.

தொழில், வியாபாரத்தில் இலாபம் வரும். வீடு நிலம் போன்றவற்றை வாங்கும்போது பத்திரங்களை சரிபார்த்து வாங்குவது நல்லது. அதை சார்ந்தவர்களிடத்தில் ஆலோசனை கேட்க மறக்காதீர்கள்.

**19.10.2013 முதல் 13.11.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம் மூன்றாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் பல்வேறு சறுக்கல்களையும், மனச்சோர்வையும் சந்திக்க வேண்டி வரும். வரவுக்கும் செலவுக்கும் இழுப்பறியாகவே இருக்கும். தேவையில்லாத பொருள்களை வாங்குவதோ, ஆடம்பர நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதோ, வீண் செலவுகளை ஏற்படுத்தும்.

தொழிலில் போட்டியும், பொறாமையும் தடைகளை ஏற்படுத்தும். அதையெல்லாம் சமாளிக்க மிகவும் சிரமப்படுவீர்கள். நீங்கள் ஒன்று நினைத்து சொல்ல அதை வேறு விதமாக புரிந்து கொண்டு நண்பர்கள் விலகுவார்கள். எந்த நிலையிலும் முயற்சியை கைவிட வேண்டாம்.

**14.11.2013 முதல் 1.12.2013 வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிலையில், புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் என்னென்ன பலாபலன்களை வழங்கப் போகிறார் என்று பார்ப்போம். குடும்பத்தில் கணவன் மனைவிக்கான உறவு பலப்படும். சிறுசிறு மோதல்களைக் கண்டு கொள்ள வேண்டாம். பெற்றோர்களிடமிருந்து சொத்து வருவதற்கான நல்ல செய்திகளை எதிர்பார்க்கலாம். வழக்கு தீர்ப்பு உங்களுக்கு சாதமாக அமையும்.

நீண்டகாலமாக அடைக்கப்படாமல் இருந்த கடன் அடைபடும். பங்காளிகளிடம் சுமுகமாக நடந்து கொள்ளுங்கள்.

**2.12.2013 முதல் 2.1.2014 வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிலையிலிருந்து மாறாமல் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். இதன் அடிப்படையிலும், பொது பலனையும் வைத்துப் பார்க்கும்போது எதைப் பற்றியும் கவலைப்படாமல் இருந்து வரும் உங்களுக்கு சிறு சிறு சங்கடங்களும் உடல் சோர்வும் ஏற்படும்.

**3.1.2014 முதல் 26.1.2014 வரை**

இப்போது குருபகவான் இன்னும் தொடர்ந்து வக்கிர நிலையிருந்து மாறாமல் புனர்பூச நட்சத்திரம் முதலாம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் இதுநாள் வரையில் நிலவி வந்த தொழில் போட்டிகள் விலகும். புதிய தொழில் தொடங்குவது நல்ல வருமானம் பெற்றுத்தரும். தொழிலில் அனுபவம் பெற்ற வல்லுநர்களிடம் ஆலோசனை பெற மறக்க வேண்டாம்.

இதுநாள் வரை அலட்சியப்படுத்தியவர்கள் அனைவரும் மூக்கில் விரல் வைத்து வியக்கும் அளவுக்கு புகழ் வந்து சேரும். அவர்களாகவே ஓடி வந்து பாராட்டும் நிலை ஏற்படும். வெளிநாடு பயணம் அமைவதை தவிர்க்க இயலாது.

**27.1.2014 முதல் 11.3.2014 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதம், ராகு சாரத்தில் வக்கிர நிவர்த்தி பெற்ற நிலையில் சஞ்சரிக்கிறார். உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். அதனால் ஏற்படும் மருத்துவச் செலவை சமாளிக்க வேண்டியிருக்கும். சகோதர சகோதரிகளிடமிருந்து உதவி சேரும்.

அக்கம் பக்கத்து வீடுகளில் பகை உணர்வை விட்டு விட்டு வலிய சென்று சகஜமாக பழகுங்கள். சின்னச் சின்ன விஷயங்களை பூதாகரமாக ஆக்கவேண்டாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் செய்யாத குற்றத்துக்காக தண்டனை அனுபவிக்க வேண்டி வரும். சக ஊழியர்கள் துணை நிற்பார்கள்.

**12.3.2014 முதல் 6.5.2014 வரை**

இப்போது குருபகவான் தனது சொந்த சாரத்தில் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் குருபகவான் என்ன நிகழ்த்தப் போகிறார் என்று பார்ப்போம். குடும்பத்தில் பிள்ளைகளுக்கோ, சகோதர சகோதரிகளுக்கோ திருமண ஏற்பாடு தொடங்கும். நீங்கள் முன்நின்று நடத்தி வைப்பீர்கள். தொடங்கவிருக்கும் தொழில் அமோக இலாபம் தரும். இதுவரை இருந்து வந்த மனக் குறைகள் நீங்கும்.

பிள்ளைகளின் படிப்பில் கவனம் செலுத்துங்கள். என்ன படிக்கிறார்கள், யார் யாருடன் பழகுகிறார்கள் என்று கண்காணிக்கத் தவறாதீர்கள். எது செய்தாலும் பெற்றோர்களின் ஆலோசனைகளையும், ஆசியையும் பெறத் தயங்காதீர்கள்.

**7.5.2014 முதல் 25.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் என்னென்ன பலன்களைத் தருவார் என்று பார்ப்போம். கணவன், பிள்ளைகளின் கோரிக்கை களுக்கு செவிசாய்த்து நிறைவேற்றிவையுங்கள். கட்சி மேல் மட்டத்தினரின் அன்பைப் பெறுவதன் மூலம் மக்களிடம் செல்வாக்கு உயரும். யாரையும் பகைத்து கொள்ள வேண்டாம். எந்த காலத்திலும் உங்கள் நேர்மை உங்களைக் காப்பாற்றும்.

**26.5.2014 முதல் 11.6.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் கூட்டுத் தொழில் நல்ல முறையில் கைகொடுக் கும் என்றாலும், கவனமுடன் இருக்க வேண்டும். இலாபத்தில் பங்கு பிரிப்பதில் பிரச்சினைகள் ஏற்படலாம். பிள்ளைகளிடமிருந்து மகிழ்ச்சியான செய்தியை எதிர்பார்க்கலாம்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே...

21 ஆம் நூற்றாண்டு ஒருபுறம் நவீன மயகாலமாக அடையாளப்படுத்தப்பட்டாலும், மறுபுறம் நாகரிகத்தை இழந்து வரும் கால கட்டமாகத்தான் இருக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே. ஆண்கள் தம்மை வீரர்களாக உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக நாகரிகம் என்ற போர்வையில் நாகரீகவான்களாகக் வெளிக்காட்டிக் கொள்ளவே விரும்புகின்றனர். சாதாரண உடை அணிந்து அடக்கமாக செல்வதிலேயே அழகு வெளிப்படுகிறது. ஆனால் தற்போது ஆண்கள் தமது அழகை ஆடை, அணிகலன், நடையுடை பாவனை மூலம் தம்மை அழகானவர்களாக வெளிப்படுத்தவே முயல்கின்றனர். இதை நினைத்துப் பார்க்கையில் கவலையாகவுள்ளது.



ஆண்களின் உடையை எடுத்துக் கொண்டால், சேர்ட்டிலும் காற்சட்டையிலும் எத்தனையோ விதம் விதமான நூல்கள் தொங்குகின்றன. தாம் அணியும் உடைகளுக்கேற்ற தொப்பியும் அணிகிறார்கள். ஆனால் இப்போது தொப்பியை கலர் கலராக வாங்க வேண்டிய அவசியம் இல்லை. ஏன் தெரியுமா? இப்போது சேர்ட்டிலேயே ஆண்களுக்கு தொப்பியும் வந்துவிட்டது.


பெண்களைப் போல ஆண்களும் தோடு அணிகின்றார்கள். கழுத்துக்கு சங்கிலியும், கைக்கு வர்ண வயர்களும் அணிக்கின்றனர்.

அவர்களுடைய தலையை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு வகையான 'கட்' வகைகளை சொல்லி தமது முடிகளை வெவ்வேறு விதமாக வெட்டுவித்துக் கொள்கின்றனர். முடிக்கும் கூட நிறம் தீட்டுகின்றனர். சில ஆண்கள் தலைமுடியை வளர்த்து அதை சிறிது சிறிதாக பிரித்து பின்னிக் கொள்கின்றனர். சிலர் ஓரளவுக்கு முடியை கத்தரித்து வரிவரியாக வெட்டியும் உள்ளனர்.

இளைஞர்கள் மது அருந்துவதையும் புகைப்பதையும் பெண்களை கிண்டலடிப்பதையுமே தமது பொழுது போக்காக கருதுகின்றனர். இவ்வாறு அழகெனும் பெயரில் தம்மை அசிங்கப்படுத்தும் ஆண்களே பெண்களை நவநாகரிகத்தை அதிகம் நாடிச்செல்கின்றனர்.


*பா.துவாரகா, கைதடி.*

## 4 வருடங்களில் பைபிளை கையால் எழுதி முடித்த



# விநோத மனிதர்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைச் சேர்ந்த நபர் ஒருவர் புனித நூலான பைபிளை தனது கையால் நான்கு வருடங்களை செலவழித்து எழுதி முடித்து அசத்தியுள்ளார். அதற்காக 2,400 வெற்றுத் தாள்களைப் பயன்படுத்திய அவர் பைபிளில் காணப்பட்ட 7,88,000 சொற்களையும் எழுதுவதற்கு நாள் தோறும் 14 மணித்தியாலங்களை செலவு செய்துள்ளார்.



## கவிதை

வார்த்தைகளோடு
போராடி
வித்தைகளாக
உருவமைத்து
பேனாவை ஆயுதமாக்கி
கனாவை கண்ணுக்குள்
வைத்து

சித்திரை மாத
இவ்வேளையிலே
நித்திரையை
தொலைத்து
மனதை உருக்கி எடுத்து
கவிதை வடித்துப்
பார்ப்போமே

*சு.ஆர்த்திகா, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.*


## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..............................................................

முகவரி :- ..........................................................


..........................................................

........................ ........................

திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**

'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





## நிம்மதி

துயரங்களை சுமக்க முடியாமல்
சோர்ந்து போயிருந்த
என் வாழ்க்கையில்
தென்றலாக வந்துதித்த
சின்னப்பூவே
உன்னால் வாழ்கின்றேன்

*க.மலர், [illegible] சிறுவர் இல்லம்.*

## நேர்மை

பகலுக்குத் தேவை வெளிச்சம்
நட்புக்கு தேவை உண்மை
இரவுக்குத் தேவை நிலவு
ஆகாயத்துக்குத் தேவை வானம்
அதையும் விட
மனிதனுக்கு தேவை நேர்மை

*ம.சலக்சிகா, சண்டிலிப்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்போவை வேறு இடத்துக்கு மாற்றுவதை தடுத்து நிறுத்துவதற்கு ஒத்துழைக்கவும்

## கிளிநொச்சி பஸ் டிப்போ ஊழியர்கள் கோரிக்கை

கிளிநொச்சி,மே 23

கிளிநொச்சி இ.போ.ச.டிப்போவை வேறு இடத்துக்கு மாற்றும் திட்டத்தை தடுத்து நிறுத்தும் நடவடிக்கையில் தம்முடன் சேர்ந்து ஒத்துழைக்குமாறு கிளிநொச்சி இ.போ.ச. டிப்போ ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடபிராந்தியத்தில் உள்ள கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இ.போ.ச.டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இ.போ.ச.டிப்போ 1958 ஆம் ஆண்டில் இருந்து தற்போது அமைந்துள்ள இடமான கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்னால் இயங்கி வருகின்றது.

ஏ-9 பாதை ஊடாக வடபகுதிக்குச் செல்லும் இ.போ.ச.சபை பஸ்களும், வடபகுதியிலிருந்து இலங்கையின் எப்பாகத்துக்கும் செல்லும் பஸ்களும் இந்தப் பாதையூடாகவே பயணிக்கின்றன. ஏ-9 பாதைக்கு அருகில் கிளிநொச்சி இ.போ.ச.டிப்போ இருப்பதால் பஸ்களில் ஏற்படும் பழுதுகளைச் சீர்செய்வதும் இலகுவாக உள்ளது.

தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கிளிநொச்சி டிப்போவில் அமைந்துள்ள பகுதியை பொதுச் சந்தைக்கும், மிகுதியாக உள்ள காணியில் சிறுவர் பூங்காவுக்கும் இடம் கொடுத்துள்ளனர். எஞ்சிய இந்தக் காணியில் மூன்றில் ஒரு பகுதியினை தனியார் பஸ்



நிலையத்துக்குக் கொடுப்பதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். மூன்றில் இரண்டு பகுதிக் காணியில் இ.போ.சவுக்கு பஸ் நிலையம் அமைத்துத் தருவதாகவும், கிளிநொச்சி இ.போ.ச.டிப்போவை தற்போது உள்ள இடத்திலிருந்து 6 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கனகபுரம் துயிலும் இல்லத்துக்கு எதிரில் அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த டிப்போவானது வேறு இடத்துக்கு மாற்றப்பட்டால் ஏ-9 பாதையூடாகச் சேவையாற்றும் இ.போ.ச.வண்டிகளின் சேவை பாதிப்படைவதோடு, இங்கு கடமையாற்றும் ஊழியர்களும் கடமைக்குச் சென்று வருவதற்குப் பெரும் சிரமத்துக்கு உள்ளாக நேரிடும். ஏனெனில் கிளிநொச்சி இ.போ.ச.டிப்போவில் பணியாற்றும் அனைவரும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

எனவே இந்தத் திட்டத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்தி தற்போது இருக்கும் இடத்தில் கிளிநொச்சி இ.போ.ச.டிப்போவை அமைப்பதற்கு கிளிநொச்சி இ.போ.ச. டிப்போ ஊழியர்களுடன் சேர்ந்து ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொள்வதாக அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

# தொடர்ந்து இடம்பெறும் மர அழிப்பு நடவடிக்கை



அக்கராயன்,மே 23

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயனில் உள்ள கண்ணகைபுரம், பூநகரியின் முக்கொம்பன் பகுதிகளில் தொடர்ந்தும் மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாக கிராமமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பூநகரியில் இடம்பெறும் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களின் போது விறகுகூட பூநகரியில் இருந்து எடுத்துச் செல்ல முடியாது என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் பூநகரியின் ஜெயபுரம், கரியாலை, நாகபடுவான், முக்கொம்பன், கண்ணகைபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து தினமும் பெருமளவு மரங்கள் கடத்தப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சின்னப்பல்லவராயன் கட்டுப் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் செல்லும் சிலர் காட்டுக்குள் மோட்டார் சைக்கிளை மறைத்து வைத்துவிட்டு மரங்களைக் களவாக வெட்டி விற்பனை செய்யும் நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் கடுமையான நடவடிக்கை எடுக்காமை காரணமாகவே பூநகரியில் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)



இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக செய்கையின்போது மேலதிக செய்கைகளை அளவீடு செய்யும் பணிகள் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க-6)

# பாதணிகள் பழுது பார்ப்பதற்குரிய இடமொன்றை ஒதுக்கித் தாருங்கள்

## தொழிலாளர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதிகளில் பாதணிகளைப் பழுதுபார்க்கும் தொழிலாளிகளுக்கு இடத்தை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொதுச் சந்தையின் சுற்றுப்புறப் பகுதியில் பாதணிகளைப் பழுதுபார்க்கும் பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இவர்களுக்கென இதுவரை இடங்கள் எவையும் ஒதுக்கீடு செய்து வழங்கப்படவில்லை. இதனால் இந்தத் தொழிலாளர்கள் வீதியோரங்களில் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இவர்கள் பல்வேறு காரணங்களால் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே கடந்த 2006 ஆம் ஆண்டு இருந்ததைப் போன்று தமது தொழிலுக்குரிய இடத்தை ஒதுக்கித் தருமாறு தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)



# மாணவர்களின் ஒழுங்கான வரவு கல்வி முன்னேற்றத்துக்கு உதவும்

## கூறுகிறார் கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர்

அக்கராயன், மே 23

மாணவர்களின் ஒழுங்கான வரவு அவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரான எஸ்.பேரின்பராசா. அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் இடம்பெற்ற பெற்றோர்களுடனான சந்திப்பின்போது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

6 தொடக்கம் 16 வயதையுடைய சிறார்கள் பாடசாலைக்குச் செல்லாது இருக்க முடியாது. சமூகத்தில் உள்ள பெரியவர்கள் பாடசாலை செல்லாத மாணவர்களை எமக்கு அறிவிக்க வேண்டும். மேலும் மாணவர்களின் இடைவிலகல் தொடர்பான விழிப்புணர்வு அனைவரிடத்திலும் இருக்க வேண்டும். அத்துடன் பிள்ளைகளின் சுத்தம், சுகாதாரம் என்பவற்றிலும் பெற்றோர்கள் மிகுந்த கரிசனை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கிளிநொச்சி வலயத்திலுள்ள பாடசாலைகளில் இருந்து மிகக்குறைந்த மாணவர்களே இடைவிலகியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவுக்கு மன்னார் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு

மன்னார், மே 23

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நிகழ்வுகளை மன்னாரில் நடத்த மன்னார் தமிழ்ச் சங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது என்று மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்தார்.



இது தொடர்பாக அண்மையில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் இந்த விழா தொடர்பான பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் இந்த விழா இடம்பெறும். முதல் நாள் காலையில் தொடக்க விழாவும் இறுதி நாள் மாலையில் நிறைவு விழாவும் இடம்பெறும். இதைவிட ஒவ்வொரு நாளும் ஆய்வரங்கு, இலக்கிய அரங்கு, கலையரங்கு என மூன்று அமர்வுகள் இடம்பெறும். ஆய்வரங்குகள் தனிநாயகம் அடிகளாரின் பரந்துபட்ட தமிழ்ப் பணிகளை ஆய்வு நோக்கில் அணுகும் வகையில் இடம்பெறும்.

நூற்றாண்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்படும். இந்த விழா தொடர்பாக பல உப குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிதிக்குழு, ஆய்வரங்கக்குழு, மலர்க்குழு, இலக்கியக்குழு, கலைக்குழு, விளம்பரக்குழு, உபசரணைக் குழு என்று குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார் நகரில் அடிகளாரின் சிலையை நிறுவுவதற்கும் மன்னார் தமிழ்ச் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மன்னாரில் உள்ள பாடசாலைகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், மத அமைப்புகள் என அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்று இந்த விழாவை பெருவிழாவாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது என மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் மேலும் தெரிவித்தார். (ம-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தேர்தலுக்கு கடும் எதிர்ப்பு பொதுபலசேனாவும் போர்க்கொடி

## மாகாண முறையை ஒழிக்கவும் வலியுறுத்து

மாகாணசபை முறைமையை முற்றாக நீக்குவதுடன், வடக்குத் தேர்தலையும் நடத்தக் கூடாது என கடும்போக்குடைய சிங்களப் பேரினவாத அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், மற்றுமொரு இனவாத அமைப்பான பொதுபலசேனாவும் மாகாண முறைமை, வடக்குத் தேர்தலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளது.

''வடக்கில் சிங்கள மக்களை முதலில் குடியேற்றிய பின்பே வடக்குத் தேர்தலை நடத்த வேண்டும். இந்த வடக்குத் தேர்தல் என்பது தனி ஈழத்துக்கு வழியமைக்கும். அது மட்டுமல்லாது, இலங்கையிலிருந்து முற்றாக மாகாண சபை முறைமையை நீக்க அரசு முன்வர வேண்டும். அப்படி அரசு நீக்காவிடின் மாபெரும் போராட்டங்களை நடத்தவுள்ளதாக பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் நேற்று கூளுரைத்தார்.

கொழும்பில், தும்முல்லையில் அமைந்துள்ள சம்புத்த ஜயந்தி மாளிகையில் நடைபெற்ற பொதுபல சேனாவின் ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்த கருத்துகள் வருமாறு -

''அரசியல் பதவிகள் எமக்கு தேவையில்லை. ஆனால் , அதையும் தாண்டி பொதுச் சேவைகளை செய்யும் கடப்பாடு எமக்குள்ளது. சென்ற ஆண்டு நாம் நாடு, சமூகம், சாசனத்தைத் தாண்டி சில வெற்றிகளை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், நாடு தற்போது மிக மோசமான நிலையிலேயே பயணம் செய்து கொண்டிருக்கிறது. நாட்டிலுள்ள மக்களும் நிம்மதியற்ற ஒரு வாழ்வையே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 2012 ஆம் ஆண்டு எமது முதலாவது மாநாட்டின்போது மத, சமூகம் அடிப்படையில் நாட்டை பிளவுபடுத்த இடமளிக்கமாட்டோம் எனத் தெரிவித்திருந்தோம்.

ஆனால், தற்போது வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இது மிகவும் பாரதூரமான ஒரு செயற்பாடாகும். 30 வருடங்களாக இராணுவ வீரர்கள் போராடி வென்று கொடுத்த நாட்டின் முழு சமாதானத்தையும் வடக்குத் தேர்தலை நடத்தி அரசு இல்லாமல் செய்ய முனைகிறது.

நாட்டைப் பிரிக்கும் இச் செயற்பாட்டால் நாடு பாதாளத்துக்குள் செல்லும் அபாயமும் இருக்கிறது. தேர்தலை வைப்பதற்கு முன் வடக்கில் சிங்களவர்களை மீள்குடியேற்ற வேண்டும். அவர்கள்தான் இலங்கையின் பூர்வீகக் குடிகள். ஆனால், அவர்கள் தற்போது ஜெனிவாவுக்கு சென்று போராட வேண்டியவர்களாக உள்ளார்கள். காரணம், இன்று அவர்களின் உரிமைதான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.



மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகை வடக்கில் சிங்களவர்களை குடியேற்ற வேண்டாம் என்கிறார். ஆனால், சிங்களவர்கள்தான் வடக்கில் முதன்முதலில் இருந்தவர்கள். அங்கு தமிழ், முஸ்லிம் மக்களை குடியேற்றும்போது, சிங்களவர்களை மட்டும் ஏன் குடியேற்றக் கூடாது?

இந்த நாடு, ஒரு சட்டத்தின் கீழ் செயற்படும் நாடாகும். அப்படியிருக்கையில் சிங்களவர்களை புறந்தள்ளிவிட்டு யாரும் செயற்படக்கூடாது.

அடுத்ததாக இந்த நாட்டில் மாகாணசபை முறைமை ஆறாக் காயமாக உருவெடுத்துள்ளது. 1977 ஆம் ஆண்டு யோசனையின் படி 1988/89 ஆம் கொண்டு வரப்பட்டதே இந்த மாகாண சபை முறைமை.

ராஜீவ் காந்தி- ஜே.ஆர்.ஜயவர்தனா செய்து கொண்ட உடன்படிக்கை பிரகாரம், மக்களின் கடும் எதிர்ப்பினையும் மீறி அறிமுகப்படுத்தப்பட்ட இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த 127 பிக்குகளையும் கொலை செய்தார்கள்.

ஆனால், இதன் மூலம் எந்த ஒரு பயனும் இல்லை. இந்த முறைமை இந்தியா எமக்குத்தந்த ஒரு டொபி. அதைத் தான் நாம் இன்னமும் வைத்து சுவைத்துக் கொண்டு இருக்கின்றோம். இந்த முறைமையை ஒழிக்க ஏனைய 8 மாகாணசபைத் தலைவர்களும் தங்களது பதவிகளைத் துறக்க முன்வர வேண்டும்.

அதை மட்டுமல்லாது, 13 ஆவது திருத்தத்தையும் ஒழிக்க அரசு முன்வர வேண்டும். இது தனி நாடாகும். இங்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் அது தனி ஈழம் மலர வழி வகுத்து விடும்.

நாம் தமிழ் மக்கள் வாழ வழிகொடுக்க வேண்டும். அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகளே. மாகாண சபை முறைமை மூலம் அவர்களுக்கு எந்த முன்னேற்றம் நிகழ்ந்துவிடப் போவதில்லை. - இப்படி அவர் தெரிவித்தார்.

# பொதுநலவாய தலைமைத்துவப் பண்பு தற்போதைய ஆட்சியாளரிடம் இல்லை

## மங்கள சமரவீர தெரிவிப்பு

''பொதுநலவாய தலைமைத்துவத்தைக் கொண்டிருப்பதற்கான பண்புகள் இலங்கையின் தற்போதைய ஆட்சியிடம் இல்லை. பொதுநலவாயத்தின் பிரகடனங்களுக்கும், தற்போதைய அரசின் கொள்கைக்குமிடையில் முரண்பாடுகள் இருக்கின்றன."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மனித உரிமைகள், ஜனநாயகம், புரிந்துணர்வு, கருத்து மற்றும் ஊடக சுதந்திரம் போன்ற காரணிகள் பொதுநலவாய பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளபோதிலும், அவை சம்பந்தமான ஏற்பாடுகள் இங்குள்ள தற்போதைய ஆட்சியின் கீழ் பாதுகாக்கப்படவில்லை.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அரச தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சி மாநாடு நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளது. இந்நிலையில், பொதுநலவாயத்தின் அடுத்த தலைமைத்துவம் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது. எனினும், தலைமைத்துவத்தைக் கொண்டிருப்பதற்கான பண்புகள் நடைமுறையிலுள்ள ஆட்சியாளர்களிடம் இல்லை. பொதுநலவாய கொள்கை பிரகடனத்திற்கும், தற்போதைய இலங்கையின் ஆட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கின்றன.

குறிப்பாக, வடமாகாணசபைத் தேர்தலை நடத்த தேர்தல், பொலிஸ் உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் அவசியம். அரசுக்கு அக்கறை இருந்தால் பதினான்கு மணிநேரத்தில் ஆணைக்குழுக்களை மீள கொண்டுவரமுடியும்.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை குறைக்கவேண்டுமென அரசுக்குள்ளேயே கூறப்படுகின்றது. இது தவறான விடயமாகும். இது உடன் நிறுத்தப்படவேண்டும். 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் தளர்வு ஏற்படக் கூடாது'' - என்றார்.

# விபத்தில் ஒருவர் சாவு

வாழைச்சேனை, பாசிக்குடா பிரதான வீதியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை இந்துக்கல்லூரிக்கு சொந்தமான ஓட்டோவும் வாழைச்சேனை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும் மோதிகொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதியை வாழைச்சேனை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# தருவது வித்தியா — இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** எண்ணம்போல் செயற்பட வேண்டும் என எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**இடபர்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத்தொல்லை விலகும்.

**மிதுனர்:** எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரச காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகர்:** சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**சிங்கர்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** உங்களுடைய பலம் எது பலவீனம் எது என்று நீங்கள் உணர்ந்து கொள்வது நல்லது. அடுத்தவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப்பாருங்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியமாக இருக்க வேண்டாம்.

### நாளை

*வைகாசி-10 வெள்ளிக்கிழமை 24.05.2013*
*திதி: சதுர்த்தசி பி.ப. 12.39 வரை*
*நட்சத்திரம்: விசாகம் மு.இ. 11.01 வரை*
*சுபநேரம்: 05.52 - 07.22 வரை*
*இராகுகாலம்: 10.22 - 11.52 வரை*

**துலாமர்:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு இலாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் ஏற்படலாம்.

**விருச்சிகர்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**தனுசு:** எடுத்த வேலையை தடையின்றி முடிப்பீர்கள். அரச அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரர்:** இன்றையதினம் சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

**கும்பர்:** இனந்தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக்கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது.

**மீனர்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | 4 | 9 | | 6 | |
| | 2 | 7 | 5 | | | | | |
| 6 | 4 | | 7 | | 2 | | | 5 |
| | | 1 | 3 | | | 6 | | |
| 5 | | | 9 | 8 | 1 | | | 4 |
| | | 3 | | | 5 | 8 | | |
| 3 | | | 4 | | 7 | | 2 | 8 |
| | | | | | 6 | 5 | 4 | |
| | 9 | | 8 | 5 | | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 5 | 1 | 4 | 9 | 2 | 6 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 8 | 4 | 3 | 9 |
| 6 | 4 | 9 | 7 | 3 | 2 | 1 | 8 | 5 |
| 9 | 8 | 1 | 3 | 7 | 4 | 6 | 2 | 2 |
| 5 | 6 | 2 | 9 | 8 | 1 | 3 | 7 | 4 |
| 4 | 7 | 3 | 6 | 2 | 5 | 8 | 9 | 1 |
| 3 | 5 | 6 | 4 | 1 | 7 | 9 | 2 | 8 |
| 7 | 1 | 8 | 2 | 9 | 6 | 5 | 4 | 3 |
| 2 | 9 | 4 | 8 | 5 | 3 | 7 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## பூரணை விழா

யாழ்ப்பாணம், மே 23

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் வருடாந்த வைகாசி பூரணைத் தின திருமுறைத் திருவிழா நாளை வெள்ளிக் கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் ஸ்ரீமதி சுகன்யா அரவிந்தன் கலந்துகொள்வார்.

நிகழ்வில் யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். சிவதொண்டன் நிலையம், கொழும்புத்துறை சிவதொண்டன் நிலைய மகளிர் ஆச்சிரம மாணவர்களின் தேவாரப் பண்ணிசை ஆகியன இடம்பெறும். (ந-14)

## மணியம் தோட்ட பொதுக் கிணறுகள் விரைவில் புனரமைப்பு



யாழ்ப்பாணம், மே 23

மணியம்தோட்ட பிரதேசத்தில் உள்ள பொதுக்கிணறுகளை புனரமைக்கும் நடவடிக்கையை நல்லூர் பிரதேச சபை முன்னெடுத்துள்ளது.

குறித்த பகுதியிலுள்ள பொது மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்தே பிரதேச சபை இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள சகல பொதுக்கிணறுகளும் இவ்வாறு புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு அனுமதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏற்கனவே பொதுக்கிணறுகள் சில புனரமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-17)

## கணவன்- மனைவி வாக்குவாதம் முற்றி 7 வயது மகளுக்கு சுடுநீர் 'அபிஷேகம்'

அளவெட்டி, மே 23

மதுபோதையில் மனைவியுடன் வாக்குவாதப்பட்ட கணவன் கோப மிகுதியால் தனது மகளான 7 வயதுச் சிறுமி மீது சுடுதண்ணீரை ஊற்றியுள்ளார்.

இந்தச் சம்பவம் புன்னாலைக் கட்டுவன் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கடந்த சனிக்கிழமை இரவு கணவன்-மனைவி இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து தந்தை மகள் மீது சுடுதண்ணீரை ஊற்றியதுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டாம் எனவும் தடுத்துள்ளார்.

அதனால் அருகில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை பாடசாலையில் நடைபெறவிருந்த போட்டி ஒன்றுக்காக தாயார் அந்தச் சிறுமியை அழைத்துச் சென்றுள்ளார்.

சிறுமியை அவதானித்த ஆசிரியர் குறித்த மாணவியை உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு தாயுடன் அனுப்பி வைத்துள்ளார். சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். சிறுமியின் அடிவயிற்றுப் பகுதி, கால் தொடை வரை சுடுநீர் ஊற்றியதால் காயம் ஏற்பட்டுள்ளது.

மேலதிக நடவடிக்கைக்காக தெல்லிப்பழைப் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர். (ந-36)

## செம்மணிப் பாலத்தின் திருத்த வேலைகள் விரைவில் பூர்த்தியாகுமா?

குருநகர், மே 23


செம்மணிப் பாலத்தின் திருத்த வேலைகள் தற்போது மீண்டும் ஆரம்பமாகி பாலத்தின் மேலாக மூடிகள் போடப்பட்டுள்ளன.

இந்த செம்மணி வீதியுடனான போக்குவரத்து இந்தப் பாலத்தின் மேலாக நடைபெறாமல் இப்பாலத்தின் அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள குறுகிய வீதியூடாகவே நடைபெற்று வருகிறது.

தற்காலிக வீதி பள்ளம் திட்டியாக காணப்படுவதனால் இந்த வீதியூடாக நாளாந்தம் வாகனத்தில் செல்வோர் மிகுந்த சிரமங்களையும் உயிராபத்தையும் எதிர்நோக்கி வருகிறார்கள்.

பாலத்தை விரைந்து செப்பனிட்டு சீரான சிறந்த போக்குவரத்தை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்த வீதியூடாக பயணிப்போர் தெரிவிக்கின்றனர். (ந-51)

## மின் விளக்குகள் இப்போது சீர்



கொழும்புத்துறை, மே 23

கொழும்புத்துறை இலந்தைக் குளம் வீதியில் உள்ள மின் விளக்குகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீதியில் மின் விளக்குகள் பழுதடைந்து இருந்ததால் இரவு நேரத்தில் வீதி இருளில் மூழ்கியிருந்தது.

தற்போது பழுதடைந்த மின் விளக்குகள் மாற்றப்பட்டு புதிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

அதேசமயம் கொழும்புத்துறை பிரதான வீதி மற்றும் புங்கன் குளம் வீதிகளில் உள்ள சில விளக்குகள் பழுதடைந்து காணப்படுகின்றன.(ந-17)

## இலங்கையில் காணிகளைச் சொந்தமாக்க வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வாய்ப்பில்லை

### முதலீட்டு மேம்பாடுகள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 22

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு முழுமையான உரிமையும் கிட்டும் வகையில் இலங்கையின் காணிகளை வாங்குவதற்கு எந்தவொரு வாய்ப்பும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்று முதலீட்டு மேம்பாடுகள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.சீ. பிரதிணாந்து தெரிவித்துள்ளார்.

பொதுவாக இந்த நாட்டினுள் தமது முதலீட்டு வாய்ப்புக்களை மேம்படுத்திக் கொள்வது தொடர்பாக அதிக பட்சமாக 99 ஆண்டு கால குத்தகை அடிப்படையின் கீழ்தான் நாட்டுக்குள் காணிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.


அந்த விதமாக 99 வருடங் களுக்குத் காணிகள் குத்தகைக்கு வழங்கப்படும் போது நூற்றுக்கு 5 இல் இருந்து 15 வரையிலான விகிதாசாரத்தில் மேலதிக வரி அறவிட்டுக் கொள்வ தற்கும் முதலீடுகள் மேம்பாட்டு அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேரடியாகவே காணிகளை விலைக்கு வாங்கும் வாய்ப்பு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இல்லை.

எதிர்காலத்தில், முதலீட்டாளர்கள் தொடர்பாக காணிகளின் வரிகள் குறைக்கப்படவுள்ளன. அத்துடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களை வரவழைத்துக் நாட்டுக்குப் பெருத்த இலாபம் ஈட்டிக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக் கப்படவுள்ளது என்று முதலீடுகள் மேம்பாட்டு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள் ளார்.

ஆனாலும், அமைச்சர் தெரிவித்துள்ள விதமாக பிரிமா நிறுவனம் போன்ற 10 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் முதலீடுகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்கள் தொடர்பாக நூற்றுக்கு 5-10 விகிதாசாரத்தில் வரி அறவீடுகள்மேற்கொள்ளப்படுவ தில்லை.

எவ்வாறாயினும் இலங்கையில் 10 ஆண்டு களுக்கு மேலாக முதலீடு செய் துள்ள நிறுவனங்களும் கூட 99 ஆண்டுகள் வரையில் மாத்திரமே காணிகளைப் குத்தகைக்குப் .பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறப்பட்டது. (ம-22)




வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வைகாசி விசாகப் பொங்கலும் தொடர்ந்து சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெறும்.

★ ★ ★

கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-36)

★ ★ ★

தெல்லிப்பழை கோயிற்புலம் சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இம்பெறும். (ந-36)

★ ★ ★

தென்மராட்சி பிரதேசத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆலயங்களில் இன்று வியாழக் கிழமை தேர்த்திருவிழாவும், நாளை வெள்ளிக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலயம், நுணாவில் மேற்கு மருதடி வீரகத்தி விநாயகர், மட்டுவில் தெற்கு வேரக்கேணி கந்தசுவாமி ஆலயம், மிருசுவில் மன்னன்குறிஞ்சி கந்தசுவாமி ஆலயம், உசன் கந்த சுவாமி ஆலயம், சரசாலை நுணாவில் விநாயகர் ஆலயம் உள்ளிட்டவற்றில் தேர், தீர்த்தத் திருவிழாக்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

★ ★ ★

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்தத் திருவிழா சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். (ந-36)

★ ★ ★

வவுனியா பூவரசங்குளம் பாலமுருகன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா நாளை வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது. (ந-421)

★ ★ ★

உடுப்பிட்டி வடக்கு கொம்மந்துறை மனோன்மணி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும். (ந-253)

★ ★ ★

கெருடாவில் மாவடிப் பிள்ளையார் ஆலய சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் இரவு விநாயகப் பெருமானுக்கு மணவாளக் கோலத் திருவிழா இடம்பெறும். (ந)

## சாரதிக்கு ரூ.10 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி,மே 23

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரச் சாரதிக்கு சாவகச்சேரி நீதி மன்றில் 10 ஆயிரம் ரூபா அபரா தம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்கு நேற்றுமுன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக் கொண் டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்ததுடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.இதேவேளை, மது போதை யில் வாகனம் செலுத்திய இரு வருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட் டது. (வ-9)



சாவகச்சேரி குடும்ப முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழாவில் கயிறு இழுத்தல் போட்டியின் போது...... (ந-9)

## சிறுதானியச் செய்கைக்கு ஆயத்தமாகும் விவசாயிகள்

யாழ்ப்பாணம்,மே 23

யாழ்.குடாநாட்டில் விவசாயிகள் அடுத்த போகத்துக்கான சிறுதானியச் செய்கையில் ஈடுபடுவதற்கான பணிகளை முன்னெடுத்துள் ளனர்.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் கூடுதலாக விவசாயிகள் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபடவும் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர் என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் பெய்த மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் தமது விவசாய நிலங்களை பண்படுத்தும் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

பயறு, கௌபி, எள்ளு, குரக் கன் போன்றசிறுதானியசெய்கையில் இந்தமுறை விவசாயிகள் அதிகமாக ஈடுபடவும் உள்ளனர்(வ-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் கப்பலில் எண்ணெய் கொள்வனவு சட்டவிரோதம்

## அரசு குற்றச் செயலில் ஈடுபடுகிறது என்கிறது ஐ.தே.க.

கொழும்பு,மே 23
ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத்தடை விதித்துள்ள நிலையில், சர்வதேச கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஈரானின் எண்ணெய்க் கப்பலிலிருந்து எண்ணெய் கொள்வனவு செய்து சட்டவிரோத நடவடிக்கையில் அரசு ஈடுபடுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இவ்வாறு எண்ணெய் கொள்வனவு செய்ததும், அந்தக் கப்பல் காணாமல் போயுள்ளதாக அரசு கூறுவதும் பொதுச் சொத்துகள் சட்டத்துக்கமைய குற்றமாகும்.

எனவே, இதுகுறித்து ஜனாதிபதி உள்ளிட்ட அரசும், எரிபொருள் கூட்டுத்தாபனமும் பொறுப்புக்கூறுவதுடன், நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பும் விடுக்கவேண்டும் என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு லட்சத்து 35 ஆயிரம் மெட்ரிக் தொன் மசகு எண்ணெயை இலங்கைக்குக் கொண்டு வந்த கப்பல் காணாமல் போயுள்ளது என அரசு கூறுகின்றது.

இந்தக் கப்பல் குறித்து ஆராயப்படும் என கனிய எண்ணெய்வள அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அவரால் இந்தக் கப்பலைத் தேட முடியாது. அமெரிக்காவால் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசு சட்ட விரோத கடத்தலில் ஈடுபடுகிறது.

நாவலியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மணல் லொறிகளை எடுத்துவருவதுபோல் சர்வதேச கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஈரானின் எண்ணெய்க் கப்பலிலிருந்து இரகசியமாக அரசு எண்ணெய் கொள்வனவு செய்துள்ளது.

இதனூடாக சர்வதேச சட்ட விரோத கடத்தலில் அரசு ஈடுபட்டுள்ளது. இது குற்றமாகும். இதனூடாக நாட்டை பாரிய குற்றத்திற்கு அரசு இட்டுச் செல்கின்றது. -என்றார்.(ச-சி)

---

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**தர்மலிங்கம் இன்பதாசன்** (ராசன்)

பிறப்பு 30.04.1952 | இறப்பு 23.04.2013

கடந்த 23.04.2013 அன்று சிவபதமடைந்த தர்மலிங்கம் இன்பதாசன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (21.05.2013) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.05.2013) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

மனைவி - தவமணிதேவி
பிள்ளைகள் - இன்பநேசன்(பெல்ஜியம்), பூர்வீகா, தார்மீகா,
மருமகள்- பிரியதர்சினி,
மருமகன் - ஸ்ரீ தனபதி (தனா)
பேரப்பிள்ளைகள் - இதிஹாசன்,அதிஹாசன், சஹானா, ஷைதன்யா.

விக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு.

(36760)(5.6)

---

# நீங்காத நினைவில் 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வையத்துள் அறிமுகம் 26.03.1964
தெய்வத்துள் சங்கமம் 07.06.1990
திதி: சதுர்த்தசி 23.05.2013

செல்வி
**நர்மதா கனகரட்ணராஜா**
(முன்னைநாள் நடன ஆசிரியை, யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை)

எங்கள் அன்பின் திருவுருவே! பாசதீபமே! ஆசையின் மணிவிளக்கே!
பாசத்தின் பிறப்பிடமே!குடும்பத்தின் ஒளிவிளக்கே
எங்கள் குடும்பத்தில் முதல் சொத்தாக பிறந்த முத்தான முத்தே!
எம்மை எல்லாம் ஆறாத் துயரில் விட்டுவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று சொல்ல உன் உயிர் இல்லையம்மா
ஆண்டுகள் இருபத்து மூன்று சென்றாலும் உன்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாதம்மா!

உன் பிரிவால் துயருறும்,
அம்மா,மாமாமார்,மாமிமார்,
சித்திமார்,சித்தப்பா, தம்பிமார்,தங்கைமார்.

சந்தையடி,
மானிப்பாய்.

(36765)(5.6)

---


# TV கள் மலிவு விற்பனை

மலிவு விலையில் Sony Wega Flat TV கள் 21" - 12,000/- முதல், 25" - 13,000/-, 29" - 16,000/-, பனசோனிக் (Panasonic) 29" - 15,000/-,
DTS அம்ளிபயர், Box ஸ்பீக்கர், DVD - 3,000/-,

தொடர்பு: 077 044 0570

சோனி ரேட் சென்றர் (தபால் கந்தோர் முன்பாக
56, K.K.S. ரோட், கன்னாகம்.

(36780)(45)

---

# கிளிநொச்சி நகரில் பிரித்தானியாவின் Little Aid Free Skill Development Center

## பணிநிலை வேண்டுகை

எமது கிளிநொச்சி நிலையத்தில் பணியாற்றக்கூடியவர்கள் மட்டும்

1. கணனி விரிவுரையாளர் (பெண்கள், முழுநேரம்)
2. ஆங்கில விரிவுரையாளர் (பெணகள், பகுதிநேரம்)
3. இரவு நேர காவலாளி (ஆண்கள்)

விண்ணப்பப்படிவங்களை 28.05.2013 க்கு முன்னர் "லிட்டில் எய்ட் 323, பலாலி வீதி, யாழ்ப்பாணம்". என்னும் முகவரிக்கு அனுப்பவும்

மேலதிக விபரங்களுக்கு 0774700468


---

# சுழிபுரம் பறளாய் சிவசுப்பிரமணிய ஆலய சப்பறத் திருவிழா

★ இன்று (23.05.2013) வியாழன் காலை 7 மணி தொடக்கம் விசேட அபிஷேக பூசைகளும், சண்முக அர்ச்சனையும் நடைபெற்று வசந்த மண்டப பூசையுடன் (பட்டுக்குடைத் திருவிழா) சுவாமி திரு வீதியுலா வருவார்.
★ 12.30 மணிக்கு வேட்டை திருவிழாவும்
★ மாலை 5 மணிக்கு பூசை ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு வள்ளி தெய்வானை சமேதரராக முருகப்பெருமான் சப்பறத்தில் காட்சி தருவார்.

★ விசேட மேளக் கச்சேரி
★ சாந்தன் குழுவினர்
★ அகில இலங்கை வானொலி புகழ் நாதஸ்வர பூசணம் கு. சிவகுமார் குழுவினர்

அடியார்கள் அனைவரும் வருகை தந்து முருகன் அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

**10 ஆம் திருவிழா உபயகாரர்.** (36708)(6.11)

---

# சேவை நலன் பாராட்டு

BEST WISHES

அகவை அறுபதில் ஆங்கில பாட ஆசானை அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பகுதித் தலைவர்
**தங்கவடிவேல் தவேந்திரன்**
அவர்கள் ஆசிரிய சேவைக்காலம்



வ/புளியங்குளம் இந்துக் கல்லூரி 01.01.1994–04.06.1996
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி 05.06.1996– 31.12.1997
யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை திருநெல்வேலி 01.01.1998–31.12.1999
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி 01.01.2000–23.05.2013
[தென்மராட்சி கல்வி வலய ஆங்கில பாட வளவாளர் 2008–2013]

யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் ஆங்கிலக் கல்வியின் உறைவிடமாய் இருந்து மாணவர் கல்வியில் அபரித கவனத்துடன் சேவையாற்றி பகுதித் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றி தனது சேவையினின்றும் இன்று (23.05.2013) வியாழக்கிழமை ஓய்வுபெறும் **தங்கவடிவேல் தவேந்திரன்** அவர்களைச் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு வேம்படி விநாயகனையும் இறைஞ்சுகின்றோம்.

ஆசிரியர் கழகம், யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 26.02.1947
ஆண்டவன் அடியில் 02.06.2012

திதி: திரயோதசி (23.05.2013)

அமரர் **விவேகானந்தன் கமலரேகா**

அம்மா உன்னைப் பிரிந்து
ஆண்டொன்று போனதுவோ
எம் விழிகள் நிரந்தரமாய்
ஈரமாய் ஆனதுவோ

அதிகாலை எழுந்தவுடன்
அம்மாவே உன் நினைப்பு
ஆகாரம் உண்கையிலே
அன்னையே உன் நினைவு

நித்திரைக்கு போகும் வரை
நித்தம் உன் நினைப்பு
நீ இல்லாமல் போனதினால்
நெஞ்சமெல்லாம் எம் திகைப்பு

இருக்கும் வரை எம்மை பற்றி
எப்போதும் யோசித்தாய்
உன் துன்பமெல்லாம் பொறுத்து
எம் உயர்வை பிரார்த்தித்தாய்

எப்போதும் எங்கேயும்
நீ எம்மோடே இருந்திடனும்
அப்படித்தான் கடவுளே
எப்போதும் கும்பிடுவோம்

எவ்வழியிலாவது எவ்வகையிலாவது
எம்மோடே இணைந்து விட - நீ
இல்லாத எம் தவிப்பு இல்லாமல் போகட்டும்

அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.
உங்கள் நினைவுகளோடு...

அருந்தியார் வளவு, திக்கம்.
சசி, நிரஞ்சா, முகுந்தன் மற்றும் உறவினர்கள்.

(35381)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

பல்கலைக்கழக சுற்றாடலில் அமைந்துள்ள பான்சி கடை ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள பெண் வேலையாள் தேவை.பல்கலைக்கழகச் சுற்றடாலில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

(16778) (45.5.7) தொடர்பு: 021 221 9499

## சமய சந்நிதிகளில்

அச்சுவேலி வருணன் பத்திரகாளி அம்பிகை சமேத வீரபத்திர பரமேஸ்வர ஆலய சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும் இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ளன. இந்த ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா வும் மறுநாள் வெள்ளிக் கிழமை பூங்காவனமும் இடம்பெறும்.

(வ 253)

* * *

யாழ்ப்பாணம், மே 23

அல்வாய் வடக்கு (குருக்கட்டு) அரசடி விநாயகர் ஆலய வருடாந்த பெருந் திருவிழா கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இன்று மாலை வேட்டைத் திருவிழா வும் இரவு சப்பரத் திருவிழாவும் இடம்பெறும். நாளை வெள்ளிக் கிழமை காலை தேர் திரு விழாவும் மறுதினம் சனிக்கிழமை அதிகாலை இன்பருட்டி தீர்த்தக் கடலில் சமுத்திர தீர்த்தமும் இடம்பெறும் (வ 253)

* *

யாழ்ப்பாணம், மே 23

கொழும்புத்துறை மேற்கு வியாவில் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், நாளை மறுதினம் மாலை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் (வ-17)

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை காயகல்பப் பயிற்சி
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- அகத்தாய்வு எனும் தற்சோதனைப் பயிற்சிகள்.

மனிதன் இன்று மனஅமைதியின்றி குழப்பங்களுடனும் பல சவால்களுடனும் வாழ்ந்து வருகின்றான். இவற்றையெல்லாம் நீக்கி,மனிதனின் சிந்தனையை விருத்தி செய்து மன அமைதி. நோய் எதிர்ப்பு சக்தி. குடும்ப அமைதி போன்ற அனைத்தையும் ஒருங்கே பெற்றுக்கொள்ளக்கூடியதாக வடிவமைக்கப்பட்ட அற்புதமான பயிற்சியே மனவளக்கலை யோகாபயிற்சி.

இவ்வாறான அரிய பயிற்சிகளைப் பயின்று பயன்பெற்றுக்கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்:** 24.05.2013, 25.05.2013, 26.05.2013 பி.ப. 4.30 மணி
27.05.2013, 28.05.2013, 29.05.2013 பி.ப. 5.00 மணி

**இடம்:** நாச்சிமார் கோயில் திருமணமண்டபம்,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

### நிகழ்ச்சி நிரல்

**இறைவணக்கம்,குருவணக்கம்**

**தொடக்கவுரை:** மனவளக்கலை பேராசிரியர்
அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

**அறிமுகவுரையும், பயிற்சிவழங்கலும்:** மனவளக்கலை பேராசிரியர்
அருள்நிதி S.இந்திரா அவர்கள்

இலங்கை மனவளக்கலைமன்ற அறக்கட்டளை
வண்ணார்பண்ணை தவமையம்,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:
077 772 6732
077 123 5646
071 440 3268
077 736 8745

## Personal Class

நாம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்பு பவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். B.A. G.A.Q மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம். அனுபவமிக்க ஆசிரியர்களை வந்து பாடசாலை நேரத்தில் கற்பிக்க வாய்ப்பு உண்டு.

T.P- 077 836 1521
K.K.S. Road, Jaffna. (96770) (6-11)

## வீடு வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு அருகில் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:077 310 1274

## தொழில் துறை அபிவிருத்தியும் வேலைவாய்ப்புக்களும் கருத்தரங்கு

24.5.2013 வெள்ளிக்கிழமை
25.5.2013 சனிக்கிழமை
26.5.2013 ஞாயிற்றுக்கிழமை

மூன்று நாள்களில் முறையே சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, தையல் மற்றும் கலைகள் சம்பந்தமாக யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் கருத்தரங்கும் பதிவு செய்தலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

தொடர்பு:
நிதா கோகுலம்
பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்
நந்தாவில் அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில்.

தொ.பே: 077 228 8186 (36772)(6.11)

## சமூகசேவைகள் திணைக்களம், வடமாகாணம்

பெறுகைகளுக்கான அழைப்பு

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கான புதிய உலர் உணவு, சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கி பொருள்கள் விநியோகம் -2013/2014

1 வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவு, சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கி பொருள்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2 விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.

3 பொருத்தமான கேள்வி வைப்புப் பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4 தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் இத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 0213202464)

5 நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents"என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 500 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 23.05.2013 தொடக்கம் 12.06.2013 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் 03.06.2013 மு.ப 10.00 மணிக்கு திணைக்களத்தில்இடம் பெறும் விலைக்கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.

6 "Diet Supply -2013/2014, Elders Home Kaithady, Reference No NP/24/2/3/Food/01" என்ற விவரம் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.

7 விலைக்கேள்விகள் 14.06.2013 ஆம் திகதி 13.30 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ் விலைக் கேள்விகள் 14.06.2013 ஆம்திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும்

8 எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.

9 கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

ந. இன்பராஜ்,
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
சமூகசேவைகள் திணைக்களம் வ.மா
கண்டி வீதி, கைதடி.

தொலைபேசி: 021 320 2464 தொலைநகல்: 021 753 9145
மின்னஞ்சல்:socialnp@sltnet.lk

(C/15032)(6.11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆறுமுகசாமி
விக்கினேஸ்வரன்
(செல்லா)

திதி: திரயோதசி

மண்ணில்
07.09.1966

விண்ணில்
01.06.2012

சகோதரா நீ வாழ்க்கையின் கலங்கரையாய்
வரலாற்றின் வளநிலையாய்
சேர்க்கையின் இனிமையுடன் செவ்வானின்
இள ஒளியாய் இருபத்திரண்டு ஆண்டுகள்
சுவிஸ் நாட்டில் ஊர் புகழ வாழ்ந்த
நீங்கள் இலங்கை மண்ணில் வந்து
சில நாள்களில் எங்களை தவிக்கவிட்டு
ஆண்டவன் அடி சேர்ந்தீரே உங்கள் ஆத்மாசாந்தியடைய
வல்லை அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

இன்று (23.05.2013) வியாழக்கிழமை நடைபெறும் ஆண்டுத்திவச நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்
(அன்னை முத்துமாரி ட்ரவல்ஸ்)

(35382) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே 23

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வணிக மன்றத்தால் வெளியிடப்படும் 'வணிக சுரபி' நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை கல்லூரியின் பேஜ் மண்டபத்தில் நடைபெறும்.

வணிக மன்றத் தலைவர் சி.சிறிபாலறசாத் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் த.வேல்நம்பியும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும் கலந்து கொள்வர். (வ)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி **இரஞ்சினி இரகுநாதன்**

(இலங்கை திட்டமிடல் சேவை வகுப்பு I)

தென்மராட்சி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரஞ்சினி இரகுநாதன் அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவை தரம் I இற்கு கடந்த 11.03.2011 தொடக்கம் தரம் உயர்த்தப்பட்டுள்ளதை பாராட்டி மேன்மேலும் பதவியுயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

**பிரதேச செயலகம், தென்மராட்சி.** **கிராம அலுவலர்கள்.**

(சி. 9289) (45.6.7)


## மரம் அரியும்போது கையில் காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,மே 23

மரம் அரியும்போது கையில் காயமேற்பட்ட நிலை யில் சிகிச்சைக்காக ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார்.

கோப்பாயைச் சேர்ந்த கனகசபை கஜன் என்ற 26 வயதுடைய குடும் பஸ்தர் ஒருவரே கடந்த செவ்வாய்க்கிழமை 7 மணிக்கு தனது மரக் காலையில் மரம் அரியும் போது இந்தச் சம் பவம் இடம்பெற்றது. (வ-ரி)

## சைக்கிளில் சென்ற பெண் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், மே 23

வீதியின் குறுக்கே நாய் பாய்ந்ததால் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் தடுமாறி விழுந்து பலத்த காயத்துடன் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் நவாலியைச் சேர்ந்த பார்த்தீபன் ரேகா என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் கடை ஒன்றுக்கு செல்வதற்காக வீதியால் சென்று கொண்டிருந்த வேளையே நாய் குறுக்காக பாய்ந்ததனால் தான் விழுந்ததாகவும் தெரிவித்தார். (வ-ரி)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**J.C.B.BACKHOE இயந்திரம் வாடகைக்கு**

Loader & Tipper



பழைய கட்டடங்களை இடித்து துப்புரவு செய்யவும் காணிகளைத் துப்புரவாக்கி மட்டப் படுத்தவும் பாதைகளைச் சீர்செய்யவும் மணித்தியாலக் கணக்கில் வாடகைக்கு விடப்படும். மற்றும் டிப்பரும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 6035633, 0777279151, 075 0695726. (36776) (6)





**பச்சிலைப்பள்ளி- இயக்கச்சி- முகாவில்**
**திரியாய் அம்பாள் (பர்வதபத்தினி ) ஆலய**
**வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல்**
**நாளை 24.05.2013**

ஆலய திருக்குளிர்த்திப் பொங்கல் நாளை (24.05.2013) வெள்ளிக்கிழமை வழமைபோல் பகல் இரவு இடம்பெறும். காலை 6.00 மணி தொடக்கம் வழிபாடுகள் இடம்பெற்று நண்பகல் விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். இரவு ஒரு மணிக்கு மடைபண்டம் எடுக்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து பொங்கல் இடம்பெற்று அதிகாலை 4.00 மணிக்கு வழிவெட்டு வைபவம் இடம்பெற்று பூஜைகள் நிறைவு பெறும்.

குறிப்பு

1. பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
2. பாதுகாப்பு மற்றும் முதலுதவி ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
3.பொங்கல் தினத்தன்று ஆலய வளாகத்தில் வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் தங்கள் பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொண்டால் மட்டுமே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

இதே வேளை குளிர்பானம், ஐஸ்கிறீம் மற்றும் உணவுப் பொருள்கள் வியாபாரம் செய்வோர் உற்பத்தி செய்யும் பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபையில் பெற்றுள்ள வியாபார உரிமப் பத்திரத்தினையும் அதன் புகைப்படப் பிரதியையும் பளைப் பிரதேச சபை அலுவலகத்தில் சமர்ப்பித்து தற்காலிக வியாபார உரிமப் பத்திரம் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

**திரியாய் அம்பாள் தேவஸ்தானம்,**
**ஆலய பரிபாலன சபை, முகாவில், இயக்கச்சி.**

(35045)(6.11)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் தம்பையா செல்வரத்தினம் (R.E)

**மலர்வு : 08.10.1955** **உதிர்வு : 23.04.2013** **திதி: வளர்பிறை திரயோதசி**



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட அப்பாவே!
ஆறாத்துயரத்தில் எம்மை ஆழ்த்தி விட்டு
இன்று நீர் மீளாத்துயில் கொள்வதேனோ?
மரணம் என்றோ உறுதி! ஆனால் அது விரைந்து வந்தது ஏனோ?
கொடிய காலன் உம் உயிரைக் கவர்ந்து கொண்டதேனோ?
எங்கள் மனதில் என்றும் நீங்கா நினைவை விட்டுச் சென்றவரே
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் உருவத்தைத்தான் காண்கின்றோம்
அப்பா என்று உங்களிடம் வந்தபோதெல்லாம்
ஆறுதல் தந்தீரே, கடைசியில் எங்களுக்கெல்லாம்
ஒன்றுமே கூறாமல் மௌனமாய் மறைந்ததேனோ?
கலங்குதே நெஞ்சம் கதறுதே உள்ளம்
உங்களை ஒருமுறை உயிரோடு காணவேண்டும்
என்று தேடுதே நெஞ்சம்!
இனி எங்கே உங்களைக் காண்போம்! இனி என்ன செய்வோம்!
ஆண்டாண்டு காலமெல்லாம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? வரமாட்டார்
நாமெல்லோரும் பொன்மனச் செம்மலாம்
அப்பாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!!

(37334)(5.6.7)

*உங்கள் பிரிவால் துயருறும் :* **குடும்பத்தினர்.**

**துயர் பகிர்விற்கு : 077 646 2254**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ALLIANCE FRANCAISE DE JAFFNA

**மொழியியல் கலந்துரையாடல்**

மொழியியல் அறிஞர் **திரு.முருகையன்** (36797)
அவர்களுடனான மொழியியல் தொடர்பான கலந்துரையாடல்.

**காலம்:-** 23.05.2013 இன்று வியாழக்கிழமை
**நேரம்:-** 4PM
**இடம்:-ALLIANCE FRANCAISE DE JAFFNA**
# 61, KACHCHERI-NALLUR ROAD, JAFFNA.

**ஆர்வலர்கள் கலந்து கொள்ளவும்.**
**தொடர்பு:- 0212228093**

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்



# மூத்ததம்பி வல்லிபுரம்

தோற்றம் 10.04.1917 — மறைவு 24.04.2013

அன்னார் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து எம் துயரத்தில் பங்கெடுத்ததுடன் பல வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலமும் மலர் வளயங்கள் சாத்தியும் அஞ்சலி செலுத்திய அன்பர்களுக்கும் நேரில் வரமுடியாத நிலையில் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (24.05.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

கொடுக்குளாய், உடுத்துறை, தாளையடி. — குடும்பத்தினர்.

# ஈரவிழிகளுடன் ஈராண்டு

செல்வன்
## இரத்தினம் இதயராசா

திதி-23.05.2013

மண்ணில் 27.06.1983 — விண்ணில் 16.05.2011



மங்காத இதய தீபமாய் - எம்
நெஞ்சக் கோயிலிலே
என்றும் வாழ்பவனே
கொல்லாது கொல்லும் உன்
நினைவுகள்
உன் பிரிவோடு உலகை அறிந்தோம்

மானாவளவு, கரணவாய், கரவெட்டி. (சி/15040)(7.9.14) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி மணிமேகலை சிவானந்தராஜா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வாழ்விடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மணிமேகலை சிவானந்தராஜா கடந்த 20.05.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க.கந்தையா (மலேசியா ஓய்வூதியர்)- பத்மாவதி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர், ஸ்கந்தா), சிரோன்மணி தம்பதியரின் மருமகளும் டாக்டர்.சிவானந்தராஜாவின் அன்பு மனைவியும் டாக்டர்.சுதர்சன், பிரியதர்ஷினி, சுசீந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற என்.கோணேஸ்வரன் (உதவி அரச அபதிர், புதுக்குடியிருப்பு) மற்றும் ஜானகி (விஜி) ஆகியோரின் பாசமிகு மாமியும் மிதுராங்கன், கருதிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராஜபரமேஸ்வரி (கனடா), தவராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவஞானேஸ்வரி (ஆசிரியை), சிவஞானசுந்தரம் (முகாமையாளர் இலங்கை வங்கி) மற்றும் டாக்டர்.சிவபாலன், காலஞ்சென்றவர்களான சிவதாசன் (எந்திரி), சிவரத்தினம் (விலைமதிப்பாளர்), சிவமனோகரன் (லண்டன்) மற்றும் சிவலோசனாதேவி (ஆசிரியை-கொழும்பு) ஆகியோரின் மைத்துணியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.05.2013 ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 11.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டாக்டர்.சி.சிவானந்தராஜா
(யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்)
(15048) 36, சாகரவீதி, பம்பலப்பிட்டி.
**தொடர்பு: 0113158141, 0777046234.**

# மரண அறிவித்தல்

## திருமதி கமலாம்பிகை அம்பிகைபாகன்



**அல்லாரை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த கமலாம்பிகை அம்பிகைபாகன் நேற்று (22.05.2013) புதன் கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி வீரசிங்கம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை -தங்கம்மா தம்பதியிரின் மருமகளும், அம்பிகைபாகனின் பாசமிகு மனைவியும், விக்னேஸ்வரன், விஜியலட்சுமி, கலைவாணி ஆகியோரின் பாசமிகு தாயும், நித்தியலட்சுமி, ஆத்மசகாயன் ஆகியோரின் அன்பு மாமியும் , அங்கரன், ஆத்மன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2013) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கச்சாய் எறியால் பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்: கணவர்,
க.அம்பிகைபாகன் (இளைப்பாறிய உப அதிபர், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்)
அல்லாரை தெற்கு, மீசாலை. (36799)(14.9)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா முத்துக்குமாரசாமி

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



இருபாலையைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முத்துக்குமாரசாமி நேற்று (22.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)- நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா இராமுப்பிள்ளை - தங்கமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்) தம்பதியரின் மருமகனும் கமலவேணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கேதீச்சரன், கமலகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் குணசிங்கத்தின் அன்பு மாமனும் ஞானேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சிவயோகேஸ்வரி, இரவீந்திரகுமார் (பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மகாலிங்கம், அம்பிகைமலர், பாலசண்முகநாதன் (செல்வேந்திரா அன் கம்பனி), சுலோசனா, சுகுணதீரன், காலஞ்சென்ற ஞானதீரன், ஞானவேணி, பாலவேணி, காலஞ்சென்ற அ.கனகம்மா, பரமேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி, பத்மாவதி (கனடா), லோகாம்பிகை (ஊரேழு) ஆகியோரின் மைத்துனரும் மகேந்திரநாதன், கனகநாதன் (கனடா) ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான இ.மகேஸ்வரன், இ.இரகுநாதன் மற்றும் இ.சண்முகநாதன் (கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் மு.ஆனந்தரூபி, பா.சுபாகரன் (கனடா), பா.கருணாகரன் (லண்டன்), சகிலா (இலங்கை வங்கி, திருநெல்வேலி), இ.நிசாந்தன் (ஆஸ்திரேலியா), இ.ஐங்கரன், இ.சங்கன், துஷ்யந்தன் (லண்டன்), வாசுகி (லண்டன்), லோகாம்பிகை, நக்கீரன், ஈஸ்வரதாஸ் ஆகியோரின் பெரிய தந்தையும் யாழினி, யகனி, தனஞ்ஜெயன், சுமங்கலி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2013) வியாழக்கிழமை பி.ப. 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, சகோதரர்கள்
0779687729

ஆலடி ஒழுங்கை,
ஊரெழு மேற்கு. (36800)

# மரண அறிவித்தல்கள்

## தவராசா பவுண்ராஜ்



பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த தவராசா பவுண்ராஜ் கடந்த 14.05.2013 நோர்வேயில் காலமானார்.

அன்னார் தவராசா விஜயகுமாரின் மகனும் சிந்துவின் பாசமிகு கணவனும் மதன்ராஜ் (நோர்வே), வதனாதேவி (நோர்வே) ஆகியோரின் சகோதரரும் மிலேகா (நோர்வே), ரோமியோ (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.05.2013 வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு நோர்வேயில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுப்பர்மடம்,
பருத்தித்துறை. (15041)
தகவல்:
சகோதரர்- பருத்தித்துறை நகர்

## திருமதி பாக்கியலட்சுமி அப்புத்துரை

யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் களுதாவளை, மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி அப்புத்துரை 21.05.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - செல்லமுத்து தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்ற அப்புத்துரை (முன்னாள் பிரதம லிகிதர், பதுளை) அன்பு மனைவியும் மோகன்ராஜ் (பிரான்ஸ்), மேனகேஸ்வரி (லிகிதர்- பிரதேச செயலகம், மாத்தளை), றோகன்ராஜ் (கண்ணன்), நிரோஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.05.2013) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு மாத்தளை மந்தண்டாவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் (கனடா)
(சி/15044)

# இராசரத்தினம் தவராசா(தம்பிராசா)

(பணியாளர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தவராசா (22.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான சி.இராசரத்தினம்-நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சி. இராசரத்தினம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், கண்ணதாசன், ஜீவிதா, தாட்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம், யோகராசாவின் அன்புச் சகோதரனும், வல்லிபுரம், தங்கமுத்துவின் பெறாமகனும், கா.கணேசமூர்த்தி, கா. சுப்பிரமணியம், மு.வேலாயுதம் காலஞ்சென்ற தே. ஞானகலாம்பிகை மற்றும் வ. விஜயகுமார், இ. கமலாதேவி, வ.நகேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், இ.இராசகுமார், வீரகத்தி, தவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2013) வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

புற்றளை,
புலோலி, 0775235633 (35387)(14-07-17)
தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகியது பூனே வொரியர்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக் '20/20' தொடரிலிருந்து விலகுவதாக பூனே வொரியர்ஸ் அணி அறிவித்துள்ளது. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஏற்பட்ட கருத்து மோதல்களையடுத்தே அந்த அணி விலகுவதற்கான முடிவை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பூனே வொரியர்ஸ் அணியின் உரிமையாளர்களான சஹாரா நிறுவனத்திற்கும், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் கடந்த 3 வருடங்களாகக் காணப்பட்டு வந்த நிதி சம்பந்தமான பிரச்சினைகளே இந்த முடிவுக்குக் காரணமாகியுள்ளன.

2010ஆம் ஆண்டு அணிகளுக்கான ஏலத்தின்போது இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் 94 ஆட்டங்கள் இடம்பெறும் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விளம்பரப்படுத்தியிருந்தது.

எனினும் அவ்வாண்டுக்கான ஏலத்தில் பூனேயை மையப்படுத்திய அணியை சஹாரா நிறுவனம் 1700 கோடி இந்திய ரூபாய்க்கு வாங்கியிருந்தது. எனினும் அவ்வாண்டு முதல் ஆட்டங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு 64 ஆட்டங்களே இடம்பெற்றிருந்தன.

போட்டிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதைப் போன்று, ஏலத் தொகையும் குறைக்கப்பட வேண்டும் என்று சஹாரா நிறுவனம் கோரிக்கை விடுத்து வந்ததோடு, 2012ஆம் ஆண்டு வீரர்களுக்கான ஏலத்திலிருந்தும் விலகியிருந்தது. எனினும் அதன் பின்னர் நடைபெற்ற பேச்சுகளைத் தொடர்ந்து அவ்வணி மீண்டும் தொடரில் இணைந்திருந்தது.

இது சம்பந்தமான முறுகல் இன்னமும் தீராததையடுத்து, தற்போது இந்தியன் பிறீமியர் லீக் தொடரிலிருந்து விலகுவதாக சஹாரா நிறுவனம் அறிவித்துள்ளது. அத்தோடு மீண்டும் பேச்சுக்களில் ஈடுபடத் தாம் விரும்பவில்லை எனவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டு ஏலத்திலிருந்து விலகியபோது, இந்தியக் கிரிக்கெட் அணியின் பிரதான அனுசரணையிலிருந்தும் சஹாரா விலகுவதாக அறிவித்திருந்தது. எனினும் இம்முறை இந்திய அணியின் அனுசரணையிலிருந்து விலகப் போவதில்லை எனவும், ஒப்பந்தம் முடிவடையும் வரை அனுசரணை வழங்கப்படும் என்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது. (ற)

# பூனே வொரியர்ஸ் விலகியமை ஆச்சரியமானது

## பயிற்சியாளர் அலன் டொனால்ட்



இந்தியன் பிறீமியர் லீக் தொடரிலிருந்து பூனே வொரியர்ஸ் அணி விலகியமை வியப்படைந்துள்ளேன் என்று பூனே வொரியர்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் அலன் டொனால்ட் தெரிவித்துள்ளார். இதைத் தாம் எதிர்பார்த்திருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரிலிருந்து பூனே வொரியர்ஸ் அணி விலகுவதாக சஹாரா நிறுவனம் அறிவித்துள்ள நிலையிலேயே அலன் டொனொல்ட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிவித்தல் தனக்கு மாபெரும் வியப்பாக அமைந்ததாகத் தெரிவித்த அலன் டொனொல்ட், இவ்வாண்டுக்கான தொடரின் பின்னர் அடுத்த தொடர் குறித்து உரிமையாளர்களுடன் கலந்துரையாடியதாகவும், அடுத்த தொடர் குறித்துத் தாங்கள் ஆர்வத்துடன் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

உரிமையாளர்கள் அடுத்த வருடம் மாத்திரமன்றி, அதற்கடுத்த 3 வருடங்கள் குறித்து ஆர்வத்துடன் காணப்பட்டதாக அலன் டொனொல்ட் தெரிவித்தார். அடுத்தாண்டு வீரர்களுக்கான ஏலம் திரும்ப இடம்பெறவுள்ள நிலையில் புதிய ஒப்பந்தங்கள், புதிய வீரர்களென பூனே வொரியர்ஸ் அணியில் மாற்றம் காணப்படும் எனத் தெரிவித்தார்.

உரிமையாளர்களுடன் கலந்துரையாடும்போது அணிக்குள் புதிய கலாசாரமொன்றை உருவாக்குவது குறித்துக் கலந்துரையாடியதாகவும் அலன் டொனொல்ட் தெரிவித்தார்.


பூனே வொரியர்ஸ் அணி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஏற்பட்ட முறுகலையடுத்து ஐ.பி.எல் இலிருந்து விலகிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## பீற்றர்ஸன் விளையாடுவது சந்தேகம்

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான ஆஷஷ் கிண்ண கிரிக்கெட் தொடரில் கெவின் பீற்றர்சன் விளையாடுவது சந்தேகத்திற்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உபாதைக்குள்ளாகியுள்ள 32 வயதான கெவின் பிற்றர்சன் கடந்த மார்ச் மாதத்தின் பின்னர் போட்டிகளில் விளையாடவில்லை.

ஆஷஷ் தொடரில் பங்குபற்ற கெவின் பீற்றர்சன் ஆர்வமாக உள்ள போதிலும் அவர் விளையாடுவது குறித்து உறுதியாகக் கூற முடியாதுள்ளதாக இங்கிலாந்து அணியின் பந்துவீச்சு பயிற்றுவிப்பாளர் கூறியுள்ளார்.



நன்றி: பாலா (முகநூல்)

## ஸ்மித்தின் ஆட்டமிழப்பே திருப்புனை

### ஸ்டீபன் பிளமிங்



ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மும்பையை வீழ்த்தி தொடர்ந்து 4வது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இந்த வெற்றி குறித்து சென்னை சூப்பர்கிங்ஸ் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் கூறுகையில், அனுபவத்தின் அடிப்படையில் நாங்கள் இந்தப் போட்டியை தயார்படுத்திக் கொண்டோம்.

மும்பை அணியின் தொடக்க வீரர் சுமித்தின் ஆட்டம் அதிரடியாக இருந்தது. இதனால் எங்களுக்கு சிறிது பதட்டம் ஏற்பட்டது. அவரது இலக்கை ஜடேஜா கைப்பற்றியதுதான் ஆட்டத்தின் திருப்புமுனை.

எங்களது களத்தடுப்பு மிகவும் சிறப்பாக இருந்தது. இறுதிப் போட்டியிலும் நாங்கள் நம்பிக்கையுடன் ஆடுவோம். சென்னை அணியில் மேல்மட்டம் முதல் கீழ்மட்டம் வரை நல்ல உறவு இருக்கிறது என்றும் இதுவே சென்னை அணியின் வெற்றிக்கு காரணம் எனவும் கூறியுள்ளார்.

தோல்வி குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் ரோகித்சர்மா கூறும்போது,

எப்போதுமே 2ஆவது வாய்ப்புதான் கிடைக்கிறது. எங்களது ஆட்டம் ஏமாற்றம் அளிக்கிறது. தினேஷ் கார்த்திக்கும், நானும் தவறான நேரத்தில் ஆட்டம் இழந்தோம். தொடக்கம் அதிரடியாக இருந்தும் அதை தக்க வைத்துக் கொள்ள முடியாமல் போனது வருத்தமே என்றார். (ற)

# 'நான் ஒரு அப்பாவி'


## ஸ்ரீசாந்த்

சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டை இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷாந்தகுமாரன் ஸ்ரீசாந்த் மறுத்துள்ளார். சூதாட்டம் தொடர்பான குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பின்னர் அவர் வெளியிட்டுள்ள முதலாவது ஊடகத் தகவலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீசாந்த்தின் வழக்கறிஞர் மின்னஞ்சலிட்டுள்ள இந்த அறிக்கையில், தன் மீதான குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்துள்ளர்.

தான் அப்பாவி எனக் குறிப்பிட்டுள்ள ஸ்ரீசாந்த், தான் எந்தத் தவறையும் செய்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

நீதித்துறையில் தனக்கு நம்பிக்கை உள்ளது என்று குறிப்பிட்டுள்ள ஸ்ரீசாந்த், தான் அப்பாவி என்பது நிரூபிக்கப்படுமெனத் தனக்கு நம்பிக்கையிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



சூதாட்டக்காரர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு, சூதாட்டக்காரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதிகமான ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் வீரர்களான ஸ்ரீசாந்த், அஜித் சண்டிலா, அங்கீற் சவான் ஆகியோர் டெல்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# காலிறுதிக்கு முன்னேறியது சானியா - ஜியா இணை

பெல்ஜியம் ஓபன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு இந்தியாவின் சானியா மிர்சா, சீனாவின் ஜியா செங் இணை முன்னேறியது.

பெல்ஜியம் தலைநகர் புருசெல்சில் பெல்ஜியம் ஓபன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. அதன் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் சானியா, ஜியா செங் இணை, செக் குடியரசின் எவா ஹிர்டினோவா, அமெரிக்காவின் லின்ட்சே இணையை எதிர்கொண்டது.

ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடிய சானியா, ஜியா செங் இணை 6:2, 6:4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
28.04.1933
விண்ணில்
23.04.2013

## திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அன்பால் அரவணைத்து அறிவால் வழிகாட்டி உன் உள்ளத்து உறுதியால்
எமை உலகத்தில் உயர்த்திவைத்து காலம் எல்லாம் எமை காத்திட்ட
அன்னையே கணப்பொழுதில் எமைக் கைவிட்டுச் சென்றாயே!

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்க்கும், தபால், தொலைபேசி மூலமும் வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டில் இருந்தும் அனுதாபம் தெரிவித்தவருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாவலர்றோட்,
யாழ்ப்பாணம்.

மச்சாள்,மகள்மார், மகன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(36780)(45.6.7)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் இராசமணி



தென்னிங்கவத்தை,புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசமணி 21.05.2013 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற செல்லையா பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும், தங்கம்மா, இரத்தினம்,சிவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆறுமுகம், உதயகலா, இராமலிங்கம், சிவப்பிரகாசம், காலஞ்சென்றவர்களான இரத்தினம், அருளம்பலம், சின்னத்துரை ஆகியோரின் மைத்துனியும், தவமலர் (ஆசிரியை, யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம்), சிவனேஸ்வரன் (ஆசிரியர்,கிளி/தருமபுரம் மகாவித்தியாலயம்), லோகேஸ்வரன் (ஜேர்மனி), புஸ்பமலர், ஜெகதீஸ்வரன் (லண்டன்), கோடீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராமச்சந்திரன் (வைத்தியசாலை மேற்பார்வையாளர்-வல்வெட்டித்துறை), வதனி (ஆசிரியை-யா/இடைக்குறிச்சிஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்-), பிரபா(ஜேர்மனி), சிவகுமாரன்(அலுவலக உதவியாளர்,யா/வட இந்து மகளிர் கல்லூரி), ராதிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுரா, உதயதர்ஷன், தனுஷன், துசாரா,மதுசிகன், சிளக்ஷன், டிலோசன், மதிசா,கீர்த்திகன்,பிரபாகினி, லக்ஷனா, அனோஜன், சஞ்சிகா, வினுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24.05.2013) வெள்ளிக் கிழமை மு.ப.9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(35883)

கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

# வடக்குத் தேர்தலுக்கு பயப்படும் நீங்கள் தமிழரின் அச்சம் பற்றி சிந்தித்தீர்களா?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரியது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று பொதுபல சேனாவின் ஞானசார கல பொட தேரர் கூறுகிறார்.

இந்த நாட்டின் ஆதிக் குடிகள் வேடர்கள், நாகர்கள் என்பதை கல பொட தேரர் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நாட்டை விட்டு வெளியேறி தத்தம் மூதாதையர்கள் வந்த நாடுகளுக்குத் திரும்ப வேண்டும். ஏன் பௌத்த மதம் கூட இந்தியாவில் இருந்து வந்தது தான். அதையும் பாரத நாட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தமிழர்களின் நிலம், கடல் பறிபோகின்றது. தமிழர்களின் மொழி, கலாசாரம், மதம் அழித்தொழிக்கப்படுகின்றது. அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தம் என்ற உரிமையைக் கூட வழங்க மறுத்துவிட்டு, இந்த நாட்டை சிங்கள, பௌத்த நாடு என்று அறிவிக்கின்றீர்கள்.

விமல்வீரவன்ஸ, சம்பிக்கரணவக்க, குணதாசஅமரசேகர, ஞானசார கல பொட தேரர் ஆகியோர் உசுப்பி விடப்பட்டுள்ளனர்.

இதற்குப் பின்னால் இந்த அரசு இருக்கின்றது. செப்ரெம்பர் மாதம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்று சர்வதேச சமூகத்துக்கு உறுதி வழங்கிவிட்டு இன்று நீதிமன்றத்தின் பின்னால் சென்று ஒளிவதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது. இப்படியே போனால் ஓடி ஒளிவதற்கு இடமில்லாத நிலைமை ஏற்படப் போகின்றது - என்றார். (த-5)

# தேவை

25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC தயாரிப்பு கம்பனியில் வேலைவாய்ப்புக்கு 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
0772523241

(36181) (10.6)

# ALAGAPPA UNIVERSITY

KARAIKUDI 630 003

## Get a Degree - Distance mode

தொலைக்கல்வி மூலம்
Alagappa University Karaikudi- India

Courses offered
* BA (English)
* BBA (Banking)
* Bachelor of Library & Information Science (1 year)
* BSC (Mathematics)
* M.Com (Finance & Control)
* MA (Childcare & Education)
* MSC (Mathematics)
* MA (Library& Information Science) (MLIS)
* MA (Education )
* Sports Management ( Post graduate)



Special features
* UGC Recognized
* Quick Results
* Flexible fees

Consultant: - Prof. M. Sinnathamby

எல்லா கற்கைநெறிகளும் ஆங்கிலத்தில் நடைபெறும். விளக்கம் தமிழிலும் வழங்கப்படும்

விவரங்களுக்கு:
* Mr. A. Panchalingam, Urumpirai kids park, Gnanavyravar road, Urumpirai. Mobile no: 0776565258 / 0776627809
* Mr. P. Balamugunthan, Thirunelvely smart kids, Adiyapaatham road, Thirunelvely. Mobile no : 0773867458 / 0777244535

குறிப்பு:
26.05.2013 (ஞாயிறு) காலை 9.30 மணிக்கு திருநெல்வேலியில் ஆடியபாதம் வீதியிலுள்ள Smart Kids நிறுவனத்தில் கற்கைநெறிகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறும்.

(36643) (10,6) ஆர்வலர்கள் கலந்துகொள்ளவும்.

# வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 18-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.

# பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை. (35179) (6.11)

தொடர்பு: 077 3033 803

# தேவை

1) தாதியர் - பெண்
2) தாதியபயிலுனர் - இருபாலாரும்
(ஊக்குவிப்பு வழங்கப்படும் - பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம்)
3) காசாளர் - இருபாலாரும்
4) மருந்தாளர் - இருபாலாரும்
5) மருந்தாளர் பயிலுனர் - இருபாலாரும்

தகைமையுடையோர் சுயவிவரக்கோவையுடன் சமுகந்தரவும்.

காலம் - 25.05.2013
நேரம் - மு.ப 10 மணி
இடம் - நியூ யாழ் வைத்தியசாலை
315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

தொ.பே: 021 222 3533

(சி/16038) (10,6)

# கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமாகாணத் தமிழ்த் தினப் போட்டி பிரிவு-01 (தரம்-05) பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற மாணவி

கிருபாகரன் நிஷாளினி

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

36782. 17.14.07

பாடசாலை சமூகம் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

# மரண அறிவித்தல்

## பொன்னையா நல்லசேகரம்பிள்ளை



கைதடி, நுணாவிலை பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கு, வாகையடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நல்லசேகரம்பிள்ளை நேற்று (22.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா-நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற நல்லபூரணத்தின் அன்புக் கணவரும், கனகமணி (SPHM-MOH, KOPAY), பத்மாஜினி (FA-JAFFNA HOSPITAL), மணிவண்ணன், றதீபா (Newzeland) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் தில்லைநாதன், நிர்மலநாதன் (Newzeland) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்திகா (LECTURER-IIS CITY CAMPUS), சுதர்சன் (NGO), பிரசாந், பிரகாஸ், வர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2013) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
வாகையடி வீதி,சாவகச்சேரி.

(36783)(6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

# பட்டம் வழங்கி பாராட்டி கௌரவித்தல்

## சாதக ஞான சுரவி வாழி வாழி



அச்சுவேலி கதிரிப்பாய் முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு
நடராசா ஐயா வர்ணதேவன் ஐயா (கோபி ஐயா)
அவர்கள் ஆலயங்களில் முறைப்படி ஆற்றிவரும் வேத சிவாகமப் பணிகளினை பாராட்டி இன்று (23.05.2013) வியாழக்கிழமை
மிருசுவில் வடக்கு மன்னன் குறிச்சி நெல்லிக் கிணற்றடி
தான்தோன்றி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடை பெறும்
தேர்த்திருவிழாவின் போது

சாதக ஞான சுரவி

எனும் பட்டம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்படுகின்றார்.

### பட்டம் வழங்கி பாராட்டி கௌரவிப்பவர்கள்

கிரியாபூசண விபூசணன்
சிவஸ்ரீ வெ.தில்லையம்பலக்குருக்கள்
(பிரதம குரு, தான்தோன்றி கந்தசுவாமி தேவஸ்தானம்)
ஆலய தர்மகர்த்தா
உற்சவ கால உபயகாரர்கள்
தெய்வீகப் பேருரையாளர் வர்ணனைக் கலாநிதி
மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

(C15035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைப்பிரஸ் - O/L போதும் கைநிறையக் காசு**
**நியூசிலாந்து - O/L போதும் நிரந்தரக் குடியுரிமை பெறும் வாய்ப்பு**

* 21 வயதிதுக்குட்பட்டவரா நீங்கள் O/L போதும்
* 25 வயதுக்குட்பட்டவராயின் A/L தேவை

செப்ரம்பர் மாணவர்களை மேற்படி நாடுகள் உள்வாங்குகின்றன.
விரையுங்கள்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090



**A/L பொருளியல் நூல்**
சந்தை அமைப்புக்கள்
வினா - விடைகளுடன்
**ரூபா 90/=**
**வே.கருணாகரன்**
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
**அன்னை புத்தகசாலை**

**சிறுநீரகம் தேவை**
42 வயதுடைய நோயாளி ஒருவருக்கு AB+/ ஏனைய இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. அவரின் உயிரைக்காக்க நல்ல உள்ளம் கொண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
(36801)
தொடர்பு:- 0718799158

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

**பக்க வடிவமைப்பாளர் தேவை**
எமது நிறுவனத்திற்கு அனுபவமுள்ள பக்க வடிவமைப்பாளர் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் இன்று (23.05.2013) வியாழக்கிழமை சுய விவரக் கோவையுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.
தொடர்பு:
Computer today
# 359, Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 567 2222
(சி/15031)(23-6-7)

**இன்று (23.05.2013) வியாழக்கிழமை**
**திருநெல்வேலி அருள்மிகு காளி அம்பாள் தேர்ப்பவனி காண வாரீர்**



நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்று
ஆயகியாதிய உடையாள் சரணம் அரண் நமக்கே



* விசேட அபிஷேகம் காலை 6.00 மணி
* வசந்த மண்டப பூசை காலை 8.00 மணி
* தேரில் அம்பாள் ஆரோகணித்தல் காலை 9.30 மணி

தேர்த்திருவிழா உபயகாரர்:-
**ஆறுமுகம் சிற்பாலயம்**
Specialist All Kinds of Wood Carvings, Sculptures, Temple Chariots, Vaganams, Rathams and etc...
Kalikovilady, Thirunelvely West, Jaffna. T.P:021- 2222892




# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி பரமநாதன்

*(பிரபல வர்த்தகர், முன்னாள் பங்காளர் - அஜந்தாஸ் புடைவையகம், யாழ்ப்பாணம்)*

கொக்குவில் கிழக்கு, பூமகள் வாசா, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, 121, புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பரமநாதன் கடந்த (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் (V.S.S.)V.S. சின்னத்தம்பி - பூமணி தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் முத்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நவமணிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மகேந்திரன் (Modern net - உரிமையாளர்), டஷ்ஷிகா (Canada), டுஷ்ஷந்தி (London), Dr. ஸகிலா (Anaesthesia department, Teaching Hospital - Jaffna), கலைமகள் (Accountant - Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசாரங்கன் (Escalation Supervisior - Canada), மகேஸ்வரன் (IT - Consultant - London), லிங்கேசன் (Director - Linco Engineering) ஆகியோரின் பாசமிகு மாமனும், அர்க்காயன், அனகாயன், அத்விதா, அம்ருத்தா, பிரிதீவ், சிவகாமி, ரந்தீவ் ஆகியோரின் பாசமிகு பேரனும், வேலாயுதபிள்ளை (London), துரைராஜா (Canada), தியாகராஜா (Canada), சண்முகராஜா (London), குணராஜா (London), பரம் தில்லைராஜா (Canada-Colombo), மணிமேகலாதேவி (Canada), கலாரஞ்சினிதேவி (London) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2013) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தாலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

121, புகையிரத நிலைய வீதி,
(ஆடியபாதம் வீதி),
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.
(36762) (45.6)

தகவல்:
**குடும்பத்தினர்.**
தொ.பே. 021 222 5652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.